ரூ.10

# தமிழரசு

ஆகஸ்ட் 2006

செய்தி-மக்கள்தொடர்பு துறையின் வெளியீடு



# சுதந்திரத் திருநாள் விழா - 15.8.2006



சென்னை, தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஊனமுற்றோருக்கு மிகச் சிறந்த சேவை புரிந்த தஞ்சாவூர் மாவட்ட ஊனமுற்றோர் மறுவாழ்வு அலுவலர் திருமதி. இரா.சியாமளா - சிறந்த மருத்துவருக்கான விருது மரு.ரெ.சின்னதுரை பார்வையற்றோர் இசைக்குழு நடத்தும் திரு. எம்.ஜான்சன் செரி கோமகன் மற்றும் மதுரை, இந்திய பார்வையற்றோர் சங்கம் ஆகியோருக்கும், மகளிர் நலனுக்கான சிறந்த நிறுவன விருது பள்ளப்பட்டி, தமிழ்நாடு மக்கள் நல்வாழ்வுச் சங்கத்திற்கும் - சிறந்த சமூகநலப் பணியாளருக்கான விருது டாக்டர் அ. பிச்சை மற்றும் முனைவர் திருமதி.கோ.மீனா ஆகியோருக்கும் விருதுகள் வழங்கிப் பாராட்டினார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஊனமுற்ற குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கி வாழ்த்துத் தெரிவித்தார்.



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் துணிவு மற்றும் சாகசச் செயலுக்கான 'கல்பனா சாவ்லா' விருதினை சமூகநீதிக்காகப் போராடிய திருமதி.வசந்தா கந்தசாமி அவர்களுக்கு வழங்கினார்.

# தமிழரசு

செய்தி – மக்கள்தொடர்பு துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2037
ஆடி – ஆவணி

ஆகஸ்ட் 2006
மலர் : 38 இதழ் : 2


குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு.

குடிமக்களை அரவணைத்து ஆட்சி நடத்தும் நல்லரசின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும்.

– கலைஞர்
திருக்குறள் உரையிலிருந்து...


2 மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்களின் சுதந்திரத் திருநாள் உரை (15.08.06)

9 சமுதாய நல வளர்ச்சியில் அக்கறை உள்ள அரசு – மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் **க. அன்பழகன்** அவர்கள் உரை

25 முதற்கட்டமாக 5 இலட்சம் ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தரிசுநிலத்தை மேம்படுத்தி வழங்க பணிகள் தொடக்கம்

29 அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை முறைப்படுத்த புதிய முறை – மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் அறிக்கை

36 தமிழக அரசின் நூறு நாள் சாதனைகள்

59 குழந்தைகள் திரைப்பட விழா

62 சென்னை தினம் – சிறப்புக் கட்டுரை

64 தமிழ் மாமலை பரிதிமாற் கலைஞர் – வரலாறு

72 சாசனம் – சிறுகதை


## அட்டைப்பட விளக்கம்

முதலாம் பக்க அட்டை : 15.8.2006 அன்று சுதந்திர தின விழாவில் – மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு. கருணாநிதி** அவர்கள், சென்னை தலைமைச்செயலகத்தில் தேசியக் கொடியை ஏற்றினார்.


ஆசிரியரும் வெளியிடுபவரும் : **சி. கோசலராமன்**, இ.ஆ.ப., இயக்குநர்,
செய்தி – மக்கள்தொடர்பு மற்றும் அலுவலால் அரசு கூடுதல் செயலாளர், தமிழ்நாடு அரசு,
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது. தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம்,
அண்ணா சாலை, சென்னை – 600 002. தொலைபேசி : 25368926/25364906 தொலைநகல் : 25364906
மின்அஞ்சல் : tamilarasu2@hotmail.com இணைய தளம் : www.tn.gov.in




**கடிகாரத்தின் முள் ஓய்வின்றி சுழல்வதுபோல, காற்று எங்கும் எப்பொழுதும் நீக்கமற இயங்குவதுபோல, ஒவ்வொரு மணித்துளியும் தமிழ்நாடு, தமிழ் மக்கள், தமிழ்மொழி வளர்ச்சி, மேம்பாடு, முன்னேற்றம் என்பனவற்றையே அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு இந்த அரசு செயல்படுகிறது**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

**கலைஞர் மு. கருணாநிதி**

அவர்களின் சுதந்திரத் திருநாள் உரை

(15.08.06)

அருமைத் தாய்மார்களே,

அன்புப் பெரியோர்களே,

சட்டப் பேரவைத் தலைவரவர்களே,

உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி அவர்களே,

மற்றும் நீதி அரசர்களே,

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

சட்டப்பேரவை – நாடாளுமன்ற உறுப்பினர்களே,

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே,

என் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புக்களே.

அனைவருக்கும் என் இனிய – இதயங்கனிந்த வணக்கத்தையும் சுதந்திர தின நல்வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிலையற்றது

ஒரு நீர்க்குமிழி!

அந்தக் குமிழி தான்

சில மனிதர்களுக்குக்

கொற்றக் குடை!

நிலையானது

தியாகம்
உறுதி
உழைப்பு
மானம்
மரியாதை
மதிப்பு

மனிதர்கள் மறைந்தாலும்
என்றைக்கும் மறையாத
வெற்றிக் குடை!

இந்தக் குடை பிடித்து நடை தளராமல்
நாட்டு விடுதலைக்குப் படை முகத்தில்
அணி வகுத்து; அழியாத வரலாறுகள்
ஆகிவிட்ட அஞ்சா நெஞ்சன் பகத்சிங்;
ஏற்றிட நினைத்த நமது கொடி –
அறப்போர் வீரன் திருப்பூர் குமரன்
திருக்கரம் ஏந்திய தேசியக் கொடி –
பற்று மிகக்கொண்டு; நாட்டின் மீது –
பாஷ்யம் என்ற வீர இளைஞன் –
கோட்டை கொத்தளத்தில் ஏறி கொடிக்கம்பத்தில்
பறக்கவிட்ட
பார்புகழும் மணிக்கொடி –
அல்லும் பகலும் அணுப் பொழுதும் மறவாமல்
அன்னைத் திருநாட்டின் அடிமைத்தனம் அகற்றிட
அண்ணல் காந்தியடிகள் உயர்த்திப் பிடித்த
உரிமைக் கொடி –
வேலும் வாளும் உண்டாக்கிய ரத்தக் கடலில்
பயங்கர மூச்சு விட்டுக் கொண்டு மிதந்து செல்லும்
வீரர்களின் மண்டையோடுகளை முத்தமிட்டபடி
பயணம் நடத்தும் முறிந்த எலும்புத் துண்டுகளையும்

அறுந்த நரம்புத் துகள்களையும் கண்டு முகம் சுளிக்காமல் – முகாரி பாடாமல் – முதுகு காட்டாமல் –

"முன்னேறு நீ" "முன்னேறு நீ"
என்று முரசொலித்து எஞ்சிய வீரர்களை
நெஞ்சுரங் கொள்ளச் செய்து
எந்தப் பக்கமிருந்து ஈட்டி பாயுமோ
எதிரிகளின் துப்பாக்கிக் குண்டு பாயுமோ என்று
சாவு முகட்டிலே விநாடிகளைக் கணக்கு பார்ப்பதும்
வீரர்களுக்கு அழகில்லை என்ற
போர்க்களத்து அரிச்சுவடியைத் தவறியும்
மறந்து விடாமல் –
மரணம் மாவீரனுக்குத் தரப்படும் மலர்ச்செண்டு,
மங்கையின் இதழை விடச் சுவையானது என்ற
மனோபலத்துடன் இந்த மண் மீட்கப் போர் புரிந்து
மாண்டவர்களின் குருதிப் புனலிலே
தோய்த்தெடுத்த கொடி;
இன்று கம்பீரமாக நமது கோட்டை முகப்பிலே
உயர்ந்து நிற்கும் கொடி!
சுதந்திரம் பெற்ற பல ஆண்டுகளுக்குப் பிறகும்
நமது சுதந்திரக் கொடியை நமது மாநிலத்தில்
நமது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாம் ஏற்றி
வைக்க முடியாத நிலையிருந்ததை இந்தியப்

பிரதமர் அன்னை இந்திரா காந்தியிடம் சுட்டிக்காட்டி; வலியுறுத்தி வாதாடி – 1974ஆம் ஆண்டு; தேசியக் கொடியை ஆகஸ்டு 15 விடுதலை நாளில் அனைத்து மாநில முதல் அமைச்சர்களும் ஏற்றுவதற்கான உரிமையை;

முதன் முதலில் பெற்றிடுவதற்குக் காரணமாக இருந்தவன் என்ற பெருமிதத்துடன்;

இன்று ஐந்தாவது முறையாக ஆட்சிக்கு வந்துள்ள,

நான் உங்கள் முன்னிலையில் உவகை பொங்கிட,

உணர்வு பொங்கிட அந்தக் கொடியை ஏற்றி வைத்துள்ளேன்.

கொடியேற்றுவது – விடுதலை நாளைக் கொண்டாடி மகிழ்வது மட்டுமல்ல;

நமது நாட்டுக் குடிமக்களின் வாழ்வு உயரவும், இந்நாளில் நாம் சூளுரை மேற்கொண்டாக

வேண்டும் – ஆம்; ஆண்டு தோறும் அது தொடர் சூளுரையாகவும், ஆக்கபூர்வமானதாகவும் அமைதல் வேண்டும்.

1947 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15 ஆம் நாள்; நமக்குச் சுதந்திரத்தைத் தேடித்தந்த நாள்! மனிதருள் மாணிக்கம் பண்டித ஜவஹர்லால் நேரு, சுதந்திர இந்தியாவின் பிரதமர் ஆனார்; நமது மூத்த தலைவர்கள் எல்லாம் நாட்டு மக்கள் அனைவரும் நலம்பெறும் நோக்கில், வளம்பெறும் திக்கில் பல்வேறு பொறுப்புகளைச் சுமந்து பாடுபடத் தொடங்கினர்.

சுதந்திரத்தின் பயன்கள் ஒவ்வொரு குடிமகனுக்கும் கிடைத்திட, அண்ணல் அம்பேத்கர் வகுத்துத் தந்த இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படையில், 1950 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26ஆம் நாள் நமது நாடு; குடியரசு நாடாக மலர்ந்தது.

பேரறிஞர் அண்ணா அவர்கள் குடியாட்சி பற்றிக் கூறியுள்ள கருத்துக்கள் சிந்திக்கத் தக்கவை;

"மக்கள் தமது செயலில் எல்லாம் குடியாட்சிக் கோட்பாட்டை மேற்கொண்டு ஒழுக வேண்டும்.

பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளும் தெளிவும், தமது கருத்துக்களை எடுத்துக் கூறும் பயிற்சியும் அதற்கு மாறான கருத்துக் கூறப்படும்போது, கேட்டுக் கொள்ளும் பொறுப்புணர்ச்சியும் நிரம்ப வேண்டும்;

'நான் எவ்வாறு ஓர் அடிமையாக இருக்கமாட்டேனோ, அவ்வாறே ஓர் எஜமானனாகவும் இருக்கமாட்டேன்', என்றார் ஆப்ரகாம்லிங்கன்.

இந்தத் தத்துவத்தின்மீது கட்டப்படுவதே உண்மையான குடியாட்சி

எது நல்லது; எது கெட்டது என்பதைக் கண்டறியும் திறமை எல்லோருக்கும் உண்டு என்ற நம்பிக்கையின்பேரில் குடியாட்சி முறை அமைக்கப்படுகிறது".

– இவ்வாறு; அண்ணா அவர்கள், குடியாட்சியாம் மக்களாட்சி குறித்து எடுத்துரைக்கிறார். இதைத்தான் நாம் ஜனநாயகம் என்கிறோம்.

அந்த ஜனநாயகம் தந்த இந்த அரசின் துணை கொண்டு, தமிழகத்தில் வாழும் ஒவ்வொரு குடிமகனின் நலவாழ்விற்கும் தொண்டாற்றிட வேண்டும் என்னும் உணர்வோடு, தோழமை இயக்கங்களின் துணையோடு பொறுப்பேற்றது முதல் தொடர்ந்து பணியாற்றி வருகிறோம்.



"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு"

என்னும் அய்யன் திருவள்ளுவரின் அருள்மொழிக் கேற்ப தமிழகத்தில் வறுமை எனும் சொல்லே ஒழிந்து வளம் கொழித்திட, நோயற்று வாழும் சூழ்நிலை குறைவற்ற செல்வமாய்ச் செழித்திட, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' எனும் உணர்வு எங்கும் ஒளிவீசிட, பகைமை இருள் பறந்து விலகிட, இந்த அரசு பாடுபடும்.

வலிவையும் பொலிவையும் வழங்கிடும் வாய்ப்புகள் அனைத்தையும் உறவாக்கிக் கொள்ளும் நெறியில் திட்டமிட்டுச் செயல்படுகிறது, தமிழக அரசு. மத்திய அரசுடனும், அண்டை மாநில அரசுகளுடனும் இணக்கமான நல்லுறவு கொள்ளுவதன் மூலம் தமிழகத்தின் வளர்ச்சி தடைபடாமல் செல்ல, வாய்ப்புகள் அமையும் என்றும் கருதுகிறேன்.

இந்த அரசினுடைய திட்டங்கள் குறித்த முடிவுகளை விவாதித்து உடனுக்குடன் மேற்கொள்வதற்காக, இந்த மூன்று மாதங்களில் இதுவரை ஏழுமுறை அமைச்சரவைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, மக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான திட்டங்கள் மீது முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த அரசு அமைவதற்கு முன்னால் நடைபெற்ற தேர்தலையொட்டி தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளில் மிகப் பெரும்பான்மையானவை நிதி நிலை அறிக்கையில் சேர்க்கப்பட்டு; தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

- தாய்மார்கள் மனம் மகிழ தரமான அரிசி ஒரு கிலோ இரண்டு ரூபாய்க்கு வழங்கும் திட்டத்திற்கு முதல் கையெழுத்து.
- இரண்டாவதாக விவசாயிகளின் வேதனைகள் தீர 7,000 கோடி ரூபாய் அளவிற்குக் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி;
- மூன்றாவதாக, மாணவர்களுக்கு சத்துணவில் வாரம் இரண்டு முறை முட்டை;
- பெருந்தலைவர் காமராசர் பிறந்தநாள் கல்வி வளர்ச்சி நாளாக அறிவிக்கப்பட்டு, பள்ளிகள் அனைத்திலும் விழா நிகழ்ச்சிகள்;
- 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை தமிழ் கட்டாயப் பாடம்.
- ஒப்பந்தமுறை ஆசிரியர்கள் நியமனம் அடியோடு ரத்து செய்யப்பட்டு, 400 கோடி ரூபாய் செலவில் சுமார் 50 ஆயிரம் ஆசிரியர்களுக்கு 2006 ஜூன் திங்கள் முதல் காலமுறை ஊதியம்;
- பள்ளிகளில் 17,185 ஆசிரியர்கள், அரசுக் கல்லூரிகளில் 1,020 விரிவுரையாளர்கள், அரசு பொறியியல் கல்லூரிகளில் 180 விரிவுரையாளர்கள், அரசு பாலிடெக்னிக் கல்லூரிகளில் 559 விரிவுரையாளர்கள் புதிதாக நியமனம்.
- 293 கோடி ரூபாய் செலவில் 429 உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள்; 281 கோடி ரூபாய் செலவில் தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் 14,354 கூடுதல் வகுப்பறைகள்.
- இடையில் நிறுத்தப்பட்ட மூவலூர் மூதாட்டி இராமாமிர்தம் அம்மையார் ஏழைப் பெண்கள் திருமண நிதி உதவி ரூ. 15 ஆயிரமாக உயர்வுபெற்று மீண்டும் தொடக்கம்.
- கருவுற்ற தாய்மார்களுக்கு ஊட்டச் சத்துள்ள உணவுக்காகவும், அவர்களுக்கு ஏற்படும் வருமான இழப்பை ஈடுசெய்யவும் தலா ரூ.6,000 உதவி.
- அரசு பொறியியல் கல்லூரி மாணவர்களுக்கு உயர்த்தப்பட்ட கல்லூரிக் கல்வி கட்டணம் ரூ. 12,550 என்பது ரூ. 7,550 ஆக குறைப்பு.
- கடந்த சில ஆண்டுகளைப் போல் அல்லாமல், எந்த ஒரு சிறு சிக்கலும் இல்லாமல் தனியார் சுயநிதி கல்லூரிகள் 65 விழுக்காடு இடங்களை அரசு ஒதுக்கீட்டின்படி நிரப்பிட இசைவளித்து அதன்படி மாணவர் சேர்க்கைகள் மாநிலம் முழுவதும் தங்குதடையின்றி நடைபெற்று வரும் சாதனை.

- மத்திய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் 27 சதவிகித இடஒதுக்கீடு அளித்திட வலியுறுத்தி சட்டப் பேரவையில் தீர்மானம்.
- சுயநிதிக் கல்லூரிகளில் 69 சதவிகித இடஒதுக்கீட்டிற்கு வகை செய்யும் சட்டம்;
- 13,000 மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை.
- நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம்!
- கூட்டுறவு விவசாய வங்கிக் கடன் வட்டி விகிதம் 9 விழுக்காடு என்பது 7 விழுக்காடாக குறைப்பு.
- சுயநிதி மூலம் மின்சாரம் பெற்ற விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம்;
- விவசாயிகளுக்கும் விவசாய தொழிலாளர்களுக்கும் பெரும் பயன்கள் நல்கக்கூடிய புரட்சிகரமான சமூகப் பாதுகாப்பு – நல உதவிச் சட்டம்.
- அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு மீண்டும் தனித்தனி நலவாரியங்கள்.
- வேலைவாய்ப்புகளை பெருக்கிடும் வண்ணம் புதிய தொழிற்சாலைகள்.
- 135 கோடி ரூபாய் மதிப்பீட்டில், மோட்டரோலா தொழிற்சாலை.
- 520 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அப்போலோ ரேடியல் டயர்ஸ் தொழிற்சாலை.
- 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திருப்பெரும்புதூரில் மோட்டார் வாகன உதிரி பாகங்கள் தயாரிக்கும் இங்கிலாந்து நாட்டின் கபாரோ இந்தியா தொழிற்சாலை;
- இந்தத் தொழிற்சாலைகளின் மூலம் 11,250 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு.
- தந்தை பெரியார் காண விரும்பிய சமத்துவ சமுதாயத்தைப் படைப்பதில் ஒரு முக்கிய அங்கமாக அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என வரலாற்றுச் சிறப்புமிக்க ஆணை.
- இலங்கையில் தமிழ் இனமே அழிந்திடுமோ எனும் பதற்ற நிலையில் வாழ்வில் அமைதியைத் தேடி அலுத்து தமிழகத்தில் தஞ்சமடையும் நிலைக்கு ஆளாகித் தவித்திடும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக மாத உதவித்தொகை இரட்டிப்பு.
- திரைப்படத் துறைக்குத் தாராளமான சலுகைகள்; படப்பிடிப்புக் கட்டணங்கள் வெகுவாகக் குறைப்பு; சின்னத் திரைக்கான





**“ விறகு மற்றும் மண்ணெண்ணெய் அடுப்புகளைப் பயன்படுத்தும் ஏழை எளியவர்களின் இல்லங்களில் சமையல் செய்யும் போது பெண்கள் படும் இன்னல்களைக் களையும் வகையில், அந்தக் குடும்பங்களுக்கு இலவசமாக சமையல் எரிவாயு இணைப்பும், எரிவாயு அடுப்பும் கிடைத்திட வகை செய்யப்படும் என்பதை இந்நாளில் ஏழையெளிய மகளிரின் இதயம் குளிர்ந்திட அறிவிக்கின்றேன். இத்திட்டம் ரூபாய் 150 கோடி மதிப்பீட்டில், வரும் பொங்கல் திருநாளன்று தொடங்கித் தொடர்ந்து செயல்படுத்தப்படும் ”**

படப்பிடிப்புக் கட்டணங்கள் பாதியாகக் குறைப்பு.

- புதிய திரைப்படங்களுக்குத் தமிழிலேயே பெயர் சூட்டப்படுமானால் கேளிக்கை வரி முழுமையும் விலக்கு.
- அகற்றப்பட்ட, தமிழரின் பண்பாட்டுச் சின்னம் கண்ணகி சிலை மீண்டும் அமைப்பு.
- சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களுடைய நினைவைப் போற்றிட இன்று ஆகஸ்ட் 15; அஞ்சல்தலை வெளியீடு.
- செம்மொழிக்கு முதல் குரல் கொடுத்த பரிதிமாற் கலைஞர் வாழ்ந்த வீடு நினைவகம்.
- நலிந்த கலைஞர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை மாதம் 500 ரூபாய் என்றிருந்தது 1,000 ரூபாயாக உயர்வு.
- முதியோர், விதவைப் பெண்கள், ஊனமுற்றோருக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை மாதம் 200 ரூபாய் என்பது 400 ரூபாயாக உயர்வு.
- மத மாற்றத் தடைச் சட்டம் நீக்கம்.
- அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களை அச்சுறுத்திய எஸ்மா, டெஸ்மா சட்டங்கள் நீக்கம்.
- அரசு அலுவலர்கள் முழு ஒய்வூதியம் பெற 33 ஆண்டுகள் தேவை என்பதை 30 ஆண்டுகளே போதுமென ஆணை.
- ஆசிரியர், பஸ் தொழிலாளர் மற்றும் அரசு ஊழியர்களின் போராட்ட நாட்கள் பணிக்காலமாக அறிவிப்பு;
- பெண்கள் மகிழத் தக்க வண்ணம் பருப்பு, பயறு வகைகள் மற்றும் சமையல் எண்ணெய்கள் மீதான வரி முழுமையாக ரத்து;
- சிட்டா நூலுக்கு முழு வரி விலக்கு ;
- மொத்தத்தில் வரியில்லாத நிதிநிலை அறிக்கை
- முந்தைய ஆட்சிக் காலத்தில் வறட்சி காரணமாக உயிரிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு இன்று சுதந்திரத் திருநாளில் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் நிதியுதவி.

இவைபோலப் பல்வேறு திட்டங்களை மிக மிகக் குறுகிய காலத்தில் நிறைவேற்றியுள்ள இந்த அரசு, தேர்தல் வாக்குறுதிகளில் இந்தியாவின் கவனத்தையே ஈர்த்த முக்கியமான வாக்குறுதிகளாகிய வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கும் திட்டத்தினை அண்ணா பிறந்த நன்னாளாகிய செப்டம்பர் 15ஆம் நாளன்றும்,

நிலமற்ற ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு 2 ஏக்கர் தரிசு நிலம் வழங்கும் திட்டத்தினை தந்தை பெரியார் அவர்களின் பிறந்த நாளாகிய செப்டம்பர் 17ஆம் நாளன்றும்,

வேலையின்றி வேதனைப்படும் படித்த இளைஞர்களுக்கு, மாதாந்திர நிதியுதவித் திட்டத்தை உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாளாம் அக்டோபர் 2ஆம் நாளன்றும், தொடங்கிடத் திட்டமிட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இப்படி ஆட்சிப் பொறுப்பேற்ற 95 நாட்களுக்குள் இந்தியாவின் தியாகத் திருவிளக்கு சோனியா காந்தி அவர்களையும், பிரதமர் உள்ளிட்ட மத்திய அமைச்சர் பெருமக்களையும், தோழமைக் கட்சித் தலைவர்களையும், பிற சான்றோர்களையும், அண்டை மாநிலங்களின் முதலமைச்சர்களையும் சந்தித்துத் தமிழக வளர்ச்சிக்காகவும், தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மை மக்கள் உரிமைகளுக்காகவும் ஒத்துழைப்பையும் உதவிகளையும் கோரியுள்ளோம்.

அளிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றிவிட்டு, எஞ்சியுள்ள ஒரு சில வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கும் நாட்களைக் குறித்துத் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறோம்.

இதனைத் தொடர்ந்து, ஏற்கெனவே தேர்தல் அறிக்கையில் தெரிவித்துள்ள அறிவிப்புகளில் ஒன்றான, விறகு மற்றும் மண்ணெண்ணெய் அடுப்புகளைப் பயன்படுத்தும் ஏழை எளியவர்களின் இல்லங்களில் சமையல் செய்யும் போது பெண்கள் படும் இன்னல்களைக் களையும் வகையில், அந்தக் குடும்பங்களுக்கு இலவசமாக சமையல் எரிவாயு இணைப்பும், எரிவாயு அடுப்பும் கிடைத்திட வகை செய்யப்படும் என்பதை இந்நாளில் ஏழையெளிய மகளிரின் இதயம் குளிர்ந்திட அறிவிக்கின்றேன்.

இத்திட்டம் ரூபாய் 150 கோடி மதிப்பீட்டில், வரும் பொங்கல் திருநாளன்று தொடங்கித் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இந்தத் திட்டத்தின்கீழ், இந்தக் குடும்பங்களுக்குத் தரப்படும் இலவச சமையல் எரிவாயு இணைப்பிற்கான வைப்புத்தொகை முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்வதுடன், எரிவாயு அடுப்பையும் இலவசமாக வழங்கும்.

வேலைவாய்ப்பைப் பெருக்கிடவும், இளைஞர்களின் வாழ்வில் ஒளியேற்றி வைத்திடவும் மகளிர் சுயஉதவிக் குழுக்களைப் போலவே இளைஞர் சுயஉதவிக் குழுக்களைத் தொடங்கவிருப்பதோடு, தகவல் தொழில் நுட்பத் துறையின் மூலம் மதுரை, திருச்சி, கோவை, திருநெல்வேலி போன்ற நகரங்களில் மென்பொருள் பூங்காக்களை உருவாக்கிடுவோம்.

கடிகாரத்தின் முள் ஓய்வின்றிச் சுழல்வது போல, காற்று எங்கும் எப்பொழுதும் நீக்கமற இயங்குவது போல, ஒவ்வொரு மணித்துளியும் தமிழ்நாடு, தமிழ் மக்கள், தமிழ் மொழி வளர்ச்சி, மேம்பாடு, முன்னேற்றம் என்பனவற்றையே அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு, இந்த அரசு செயல்படுவதை நீங்கள் கவனித்துக் கொண்டு வருகிறீர்கள். உங்களைப் போலவே, இந்த அரசின் இயக்கத்தினை இந்திய நாடு முழுவதுமே உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிறது. இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி திட்டத்தினை இந்தியா முழுமையிலும் செயல்படுத்திட வேண்டுமெனக் கோரிக்கைகள் பிற மாநிலங்களில் எழுந்துள்ளன. இது இந்த அரசுக்கும் தமிழகத்திற்கும் கிடைத்துள்ள பெருமையல்லவா!

என் அருமைத் தமிழ்ப் பெருங்குடி மக்களே! உங்கள் வாழ்வு வளம் பெற, வருங்காலம் உயர்ந்திட, நீங்களும் நாங்களும் நாம் அனைவரும் உழைக்கிறோம்! இந்தக் குறிக்கோள் நிறைவேறிட இந்த அரசுக்கு முழுமையான ஒத்துழைப்பினை நல்கிடுவீர் என உங்கள் அனைவரையும், தமிழக மக்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகிறேன். நீங்கள் வழங்கும் ஒத்துழைப்புகளால்தான் அரசின் திட்டங்கள் முழு வெற்றி பெற்றிட முடியும்; இன்று நாம் கொண்டாடும் சுதந்திரத்தின் முழுப் பயனும் சிந்தாமல் சிதறாமல் உங்கள் இல்லம் தேடி வந்திடக்கூடும் என்று கூறி, என் இனிய சுதந்திரத் திருநாள் நல்வாழ்த்துகளை மீண்டும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

நன்றி வணக்கம். ★

# சமுதாய நல வளர்ச்சியில் அக்கறை உள்ள அரசு

2006–2007 ஆம் ஆண்டிற்கான
நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கு பதில் அளித்து
மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் **க. அன்பழகன்** அவர்கள்
ஆற்றிய பதிலுரை (31.7.2006)

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2006–2007 ஆம் ஆண்டு திருத்த வரவு செலவுத் திட்டத்தினை நான் இந்த அவைக்கு வழங்கி, கடந்த 5 நாட்களாகப் பேசி இன்று 6ஆவது நாள் பேசும் நிலையில் இதிலே 50 பேர் கலந்துகொண்டு இன்றைக்கு மூன்று பேர் எதிர்க்கட்சித் தலைவர் உட்பட கலந்துகொண்டு ஏறத்தாழ 22 மணி நேரம் இந்த விவாதம் நடைபெற்றிருக்கின்றது. இப்பொழுது நான் விடையளிப்பதற்காக பேசத் தலைப்பட்டு இருக்கிறேன். சாதாரணமாக ஒரு மணி நேரமாவது குறைந்தபட்சம் பதிலளிக்க வேண்டிய ஒரு கடமை எனக்கு இருக்கிறது. இந்த விவாதத்திலே கலந்துகொண்ட எதிர்க்கட்சித் தலைவர் கடைசியாக அவர்கள் சொல்கிறபோது, இந்த நிதிநிலை அறிக்கை ஒரு புதைக் குழி, சேறு போல தெரியும், இறங்கினால் உள்ளே இழுத்துவிடும். Quicksand என்று சொல்லி நாட்டு மக்களுக்கு அவர் எச்சரிக்கை கொடுப்பதுபோல தெரிவித்தார்கள். நாட்டு மக்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே இருக்கின்ற அந்தச் செய்திகளையெல்லாம் தேர்தல் அறிக்கையிலே பார்த்திருக்கிறார்கள்.

இரண்டு மணி நேரம் உரையாற்றி இருக்கிற எதிர்க்கட்சித் தலைவர், நான் பதில் சொல்ல எழுந்து ஒரு நிமிடம் ஆவதற்குள்ளாக இந்த அவையைவிட்டு அவர் வெளியேறி இருக்கிறார். ஜனநாயக மரபு தெரிந்த யாராக இருந்தாலும், எதிர்க்கட்சியைச் சார்ந்த எந்தத் தலைவராக இருந்தாலும், ஆளும் கட்சியைச்



சேர்ந்தவர், அதிலேயும் இந்த நிதிநிலை அறிக்கையை இந்த அவைக்கு வழங்கிய நான் பதில் சொல்கிறபோது என்னுடைய பதில் பொருத்தமாக இருக்கிறதா என்று பார்ப்பதற்காகவாவது இந்த அவையிலே இருந்திருக்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவர் ஒரு புதைக் குழியைப் பற்றிச் சொன்னார். அந்தப் புதைக்குழி, அதிலே கால் வைத்து இறங்குகிறவர்களை, சேறு என்று கருதிக்கொண்டு இறங்குகிறவர்களை உள்ளே இழுத்துவிடும். அதைப்போன்ற நிதிநிலை அறிக்கை இது என்றார். உள்ளபடி இந்த நிதிநிலை அறிக்கைதான் ஏற்கெனவே தேர்தல் அறிக்கையாக வெளியிடப்பட்டு, ஏறத்தாழ இந்தக் கருத்துகள் எல்லாம் வெளியிடப்பட்டு, பொதுமக்கள் அவற்றையெல்லாம் பார்த்து, பார்த்ததற்குப் பின்னர்தான் தி.மு.க.–விற்கு ஆதரவாக வாக்களித்து, இந்தக் கூட்டணிக்கு ஆதரவாக வாக்களித்து, இந்த அணி வெற்றிபெற்று வந்திருக்கிறது என்று சொன்னால், அது புதைக் குழி அல்ல என்பதை மக்கள் புரிந்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) – இன்று புதைக் குழி என்று சொல்கிறவர்கள், அன்றைக்கு அப்படிப்பட்ட பிரசாரத்திலே ஈடுபட்ட போது மக்கள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. ஒருவேளை இது புதைக் குழியாக இருந்தால் கனமாக உள்ளவர்களுக்குதான் அதிக ஆபத்தே தவிர, என்னைப் போன்றவர்களுக்கு ஆபத்து இல்லை என்பதை, நான் அதிலிருந்து வெளியிலே வந்து விடுவேன் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் ஒன்று, கடைசி நேரத்திலே அவர் பேசுகிறபோது, நாட்டிலே உள்ள பண்படுத்தப்படாத நிலம், அந்த நிலத்தைப் பற்றி நீண்ட நேரம் பேசினார்கள். தான் எழுதி வந்த அந்தக் கருத்துகளையே திரும்பத் திரும்பக்கூடப் படித்தார்கள். ஒரு முறை படித்தால்கூட குற்றம் இல்லை. ஆனால் திரும்பத் திரும்ப அந்தப் பக்கத்தைப் புரட்டிப் படித்து, தொடர்ந்து படித்தார்கள். அது அவருடைய வசதியைப் பொறுத்தது. ஆனால் எனக்கு நேரத்தைப் பற்றித்தான் கவலை.

இருந்தாலும்கூட, நான் ஓர் உண்மையைச் சொல்ல விரும்புகிறேன். அந்தத் தரிசு நிலத்தைப் பற்றிய கருத்து, எவ்வளவு ஏக்கரா என்பதற்காக ஏற்பட்டதல்ல, எத்தனை பேருக்கு என்பதற்காக ஏற்பட்டதல்ல, முறையில்

முதலாளிகளுக்குக் கொடுப்பதா, பெரிய தொழில் அதிபர்களுக்குக் கொடுப்பதா, சாதாரண ஏழைகளுக்குக் கொடுப்பதா என்ற கொள்கை அடிப்படையிலேதான் அது தொடங்கியது. அது எவ்வளவு ஏக்கராக இருந்தாலும், கிடைத்தாலும், அது ஏழைகளுக்கு தலா 2 ஏக்கர் மட்டும் தரப்படும், ஏனென்றால் எல்லா ஏழைகளுக்கும் தரமுடியாது. எவ்வளவு ஏக்கர் நிலம் இருக்கிறதோ, 2 ஏக்கர் நிலமாகப் பிரித்து, அது அந்தந்தப் பகுதியிலே உள்ள ஏழைகளுக்கு அந்த நிலத்திற்குத் தொடர்புடையவர்களுக்கு, பக்கத்திலே வாழ்கிற பரம ஏழைகளுக்குத் தரப்படும் என்பதுதான் கருத்து. இது ஒருவேளை தோற்றுப் போகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள், நாட்டிலேயே நிலம் இல்லாவிட்டால், நாங்கள் தோற்றுப் போனால் என்ன நஷ்டம்? நாட்டிலேயே அந்த நிலம் இல்லை என்று சொன்னால், நாங்கள் தோற்றுப் போவதைப்பற்றிக் கவலை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய உரையை நான் தொடருகின்றேன். நான், 'ஓடிவிட்டார்' என்று சொன்ன அந்தச் சொல்லுக்காக, எதிர்ப்பு தெரிவித்து, அவையை நடத்தவிடாமல் செய்து, தங்களால் இப்போது வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். நான் அந்தச் சொல்லை புதிதாகச் சொல்லவில்லை. நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களை, எதிர்க்கட்சித் தலைவர், எப்பொழுது அமெரிக்காவுக்கு ஓடப் போகிறீர்கள் என்று கேட்டார். அமெரிக்காவுக்கு ஓடப் போகிறீர்களா என்று கேட்கலாம் என்றால், அவையை விட்டு வெளியேறியவரை 'ஓடிவிட்டார்' என்று நான் சொல்லக்கூடாது என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவேதான், நான் சொன்னேன். மற்றொன்று. இந்த அவையிலே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், பிரதான எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், அவர்களுடைய கட்சித் தலைவர் நினைத்தபடி பேசுவதற்காக இந்த அவையிலே இருந்து, அவருக்குத் தேவையான முறையில் குரல் எழுப்பிவிட்டு, அவர் பேசி முடித்தவுடன், நான் பேசுவதற்கு இடையூறு செய்ய வேண்டுமென்று கருதி, பேசுகிறபோது குறுக்கிட்டிருக்கிறார். ஆகவே, ஜனநாயக மரபைக் காப்பாற்றாத ஒரு கட்சிதான், இன்றைய எதிர்க்கட்சி என்பதை நான் வருத்தத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தரிசு நிலம் என்று அவர்கள் சொன்னதைப் பற்றி, ஒரு குறிப்பை நான் இங்கே படிக்க விரும்புகிறேன். 2001–2002 ஆம் ஆண்டு அ.தி.மு.க. அரசின் நிதிநிலை அறிக்கையில் 20 இலட்சம் ஹெக்டேர், அதாவது, 50 இலட்சம் ஏக்கர் என்று தெரிவித்து, அதை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வழங்குவோம் அந்த நிலத்தை என்று திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையிலே தெரிவித்தது. அவ்வாறே தற்போது நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதை அவர்கள் குறைவுபடுத்திப் பேசுகிறார்கள். நீங்கள் இதிலே இறுதியிலே தோல்வியடையப் போகிறீர்கள் என்கிறார்கள். ஏழைகளுக்கு நிலம் கொடுப்பது என்றால், அது எப்படியாவது தோல்வியடைய வேண்டும் என்ற ஓர் ஆர்வத்தோடு எதிர்க்கட்சியினுடைய தலைவர் இங்கே பேசியிருக்கிறார்.

உள்ளபடியே,

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"

என்றார் வள்ளுவர். நினைப்பதுதான் உயர்ந்த நோக்கத்தோடு இருக்க வேண்டுமே தவிர அது நிறைவேற்றப்பட முடியாவிட்டால் அது நம்முடைய குற்றம் அல்ல. நல்லதை எண்ண வேண்டும். நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும். தோற்றுப் போனால் அதற்காக அந்த உயர்ந்த நோக்கத்தைக் கைவிட்டுவிடக் கூடாது. எனவே இதை நான் அடிப்படையிலே தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த அவையிலே 53 பேர் பேசியதில் 52 பேர் பேசுகின்றபோது பெரிய பிரச்சினைகள் எதுவும் இல்லை. கருத்துக்களைச் சொன்னார்கள். கருத்துக்களை நாமும் தெரிவித்தோம். 52 பேர் பேசியதில் பிரச்சினை இல்லை. 53–வதாகப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் தான் எழுதிக் கொண்டுவந்த அந்த உரையிலேயே ஆளுங்கட்சித் தலைவரைத் தாக்குவதற்கு, இழிவாகப் பேசுவதற்கு பல சொற்களை எழுதிக் கொண்டு வந்து அவற்றைத் திரும்பத் திரும்ப வேறு படித்தார்கள். இந்த அவையிலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்களையும் குறைவுபடுத்திப் பேசினார். ஏற்கெனவே அவர் முதலமைச்சராக இருந்தபோது எதிர்க்கட்சி வரிசையில் இருந்த என்னை, எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களை, மணி அவர்களை, இன்னும் சொல்லப் போனால், ஒவ்வொரு கட்சித் தலைவர்களையும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் உள்பட அத்தனைப் பேரையும் அன்றைக்கு இருந்தவர்களை எல்லாம் அவர் ஏளனம் செய்து குறைவுபடுத்தியே பேசினார். இன்றைக்கு எதிர்க்கட்சியிலே வந்து அமர்ந்தும் இன்னும்கூட தாம் கையாண்ட முறை தவறு என்பதை உணராமல் இப்பொழுதும்கூட எதிர்க்கட்சித் தலைவர்கள்

எல்லாம், 'படித்துப் புரிந்துகொள்ளாமல்' " என்று சொல்லக்கூடிய ஒரு மனப்பான்மை ஒரு முன்னாள் முதலமைச்சருக்கு இருக்கிறது என்று சொன்னால் நான் உள்ளபடியே வருத்தப்படுகின்றேன். வேதனைப் படுகின்றேன். மறுப்பு எழுப்பலாம். மாறுபாடு இயற்கை. கருத்து ஒன்றுபடுவது முடியாத காரியம். ஆனால் அதற்காக கண்ட வார்த்தைகளைப் பயன்படுத்துவது என்பது மிகவும் வருந்தத்தக்கது என்பதை நான் இந்த அவையிலே முதலிலேயே தெரிவித்துக்கொள்கின்றேன். அதனால் இந்த அவையிலே பேசிய மற்ற தலைவர்கள் எல்லாம் குறிப்பாக காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் சுதர்சனம் அவர்கள், யசோதா அம்மையார் அவர்கள், அதற்கு முன்னாலே பேசிய பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், அதேபோல பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் மணி அவர்கள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் அவர்கள், அதேபோல இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சட்டமன்றக் கட்சியினுடைய தலைவர் அவர்கள், அவர்கள் எல்லாம் உரையாற்றுகின்றபோது உளமார இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்றுப் பாராட்டி இருக்கின்றார்கள்.

வெளியிலே உள்ள தலைவர்களும்கூட இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றிப் பாராட்டு தெரிவித்திருக்கின்றார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. எம். கிருஷ்ணசாமி அவர்கள் இந்த அறிக்கையை குறித்து, முதலமைச்சர் கலைஞர் ஏழையெளிய, நடுத்தர மக்கள்மீது வைத்துள்ள அக்கறையும், அவரது அரசியல் நுண்ணறிவும், தொலைநோக்குச் சிந்தனையும் இந்த பட்ஜெட்டில் பிரதிபலித்துள்ளது என்று பாராட்டினார். மேலும் சொல்கிறார். பொதுவாக தமிழகத்திலுள்ள விவசாயிகள் மற்றும் அனைத்துத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள் — நான் இங்கே பேசிய எதிர்க்கட்சித் தலைவர்களுடைய பெயர்களைக் குறிப்பிடுகின்றபோது இந்த அவையிலே இடம்பெற்றிருக்கின்ற மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் கண்ணப்பன் அவர்களையும் அதேபோல மற்றொரு கட்சித் தலைவராக இங்கே வீற்றிருக்கின்ற விஜயகாந்த் அவர்களையும் பெயர் குறிப்பிடத் தவறி இருக்கின்றேன். அதற்குக் காரணம் அவர்கள் முழுவதுமாக பாராட்டவில்லை என்பதால், அவர்கள் சில கருத்து மாற்றங்களை, தங்களுடைய கருத்து மாறுபாடுகளைத் தெரிவித்தார்கள் என்பதால் அந்தக் கருத்து மாறுபாடுகள் குறித்து நான் பேசும் இடத்திலே அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டுள்ளேன்.

அதேபோல, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பிலேயும் இங்கே அதனுடைய கட்சித் தலைவர் பாதி பாராட்டினாலும், சில கருத்து வேறுபாடுகளையும் எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் எல்லாரும் பேசியதையும் நான் மதிக்கின்றேன். பேசிய ஒவ்வொரு உறுப்பினருடைய கருத்தையும் நான் வரவேற்கின்றேன்.

அவர்கள் சொன்ன கருத்துக்களைப் பற்றி நிச்சயமாக அரசின் சார்பில் முழு அளவில் ஆய்வு செய்து, யார் யாருடைய கருத்துக்களை ஏற்றுச் செயல்படுத்த வேண்டியது அவசியம் என்று தோன்றுகிறதோ அவற்றையெல்லாம் நிச்சயமாக ஏற்றுச் செயல்படுத்துவோம் என்றும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இறுதியாக பேசிய எதிர்க்கட்சித் தலைவருடைய கருத்துக்கு மாறாக காங்கிரஸ் தலைவர் கிருஷ்ணசாமி அவர்கள், பொதுவாக தமிழகத்திலுள்ள விவசாயிகள் மற்றும் அனைத்துத் தொழில்களிலும் ஈடுபட்டுள்ள தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், வியாபாரிகள், மாணவர்கள், மீனவர்கள் போன்ற எல்லாத் தரப்பு மக்களும் ஏற்றம்பெறத்தக்க வகையில் அமைந்த வரியில்லா பட்ஜெட் இது, பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். அவர் இந்த நாட்டிலே தமிழ்நாட்டு மக்களால் பாராட்டப்படுகிற வரவேற்கப்படுகிற ஒரு தலைவர்தான்.

அதே போல, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய நிறுவனத் தலைவர் டாக்டர் இராமதாஸ் அவர்கள் பேசுகிறபோது, தன்னுடைய அரசின் நிதிநிலை அறிக்கையாக இந்தத் தேர்தல் அறிக்கை வெளிவரும் என்று தேர்தலின்போது சொன்னதை மெய்ப்பித்துக் காட்டி சாதனையில் புரட்சி செய்திருக்கிறார் தமிழக முதல்வர் கலைஞர் (மேசையைத் தட்டும் ஒலி). என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள். மொத்தத்தில் வரிகள் இல்லை, வசதிகள் நிறைய இருக்கின்றன, குறையே சொல்ல முடியாத ஒரு நிதிநிலை அறிக்கை இது. இதிலேயும் குறை கண்டு சொல்வார்கள் என்றால் அவர்களது மனதில் குறை இருக்கிறது என்றுதான் தமிழக மக்கள் கருதுவார்கள் என்றும் பேசினார். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தமிழ் மாநிலச் செயலாளர் வரதராஜன் அவர்கள், விவசாயிகள் பயிர்க் கடன் இரத்து, வட்டி விகிதம் குறைப்பு, இளைஞர்களுக்கு நிவாரணம், அரசு ஊழியர், ஆசிரியர்களுக்குச் சலுகைகள், பொது விநியோக

முறையில் அமைப்புச் சாரா தொழிலாளர்களுக்கான அமைப்பு, பொது விநியோக முறையில் நடவடிக்கை போன்ற பல ஆக்கபூர்வமான அம்சங்களைக் கொண்டதால் இதனை சி.பி.எம். மாநில செயற் குழு வரவேற்கிறது என்று இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்று அவர்கள் அறிக்கை தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தமிழ் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் அவர்கள், சகல துறைகளின் வளர்ச்சிக்கும் கவனம் செலுத்தியிருப்பதும், நிதி ஒதுக்கீடு செய்திருப்பதும் தமிழ்நாட்டின் முன்னேற்றத்தில் தமிழக அரசு நாட்டம் காட்டுவதை உறுதிபடுத்துவதாக இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது, இது பாராட்டுக்கும், மகிழ்ச்சிக்கும் உரியதாகும் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியினுடைய தமிழ் மாநிலத் தலைவர் காதர் மொய்தீன் அவர்கள், இந்த பட்ஜெட் புழுக்கம் நிறைந்த தமிழகத்திற்குப் பூங்காற்றாய் வந்திருக்கிறது. எல்லோருடைய இதயங்களிலும் நிறைவையும், மகிழ்வையும் தந்திருக்கிறது. இந்த நல்ல அரசு வாழ்க என்று வாழ்த்தியிருக்கிறார்.

இந்தச் சட்டமன்றத்திலே ஒரு கட்சியாக இடம்பெறாவிட்டாலும், வெளியிலே சமுதாய சீர்திருத்தப் பணியிலே தன்னை முழு அளவிலே ஒப்படைத்துக் கொண்டிருக்கிற திராவிடர் கழகத்தினுடைய தலைவர் வீரமணி அவர்கள், இந்த அறிக்கையைப் பல கோணங்களிலே எண்ணிப் பார்த்து, மிகவும் மகிழ்ந்து, கருத்தினிக்கும் திட்டங்களின் பட்டியலினைப் பார்த்து மலைத்தேன், இது ஒரு சுவைத்தேன், பூரித்து புளகாங்கிதம்கொள்ளச் செய்கிறது, இது போன்ற துணிவும், தெளிவும் மிக்க அறிவிப்புகளைச் செய்ய கலைஞர் ஆட்சியைவிட்டால் திராவிட இனத்திற்கு, தமிழர்களுக்கு வேறு நாதி ஏது? (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, நன்றி, என்று அவர்களும் தெரிவித்திருக்கிறார்.

இன்னும் பலர் தெரிவித்த கருத்துக்கள் இருக்கின்றன என்று சொன்னாலும், ஏடுகள் பாராட்டி எழுதிய கருத்துக்கள் இருந்தாலும், நேரம் கருதி அந்தப் பாராட்டை முழு அளவில் நான் இந்த அவைக்கு எடுத்துச் சொல்லாவிட்டாலும், எதிர்க்கட்சியைத் தவிர, எதிர்க்கட்சிக்குத் துணை போன இரண்டொரு கட்சிகளைத் தவிர, இந்த அறிக்கையை, இந்த நிதிநிலை அறிக்கையிலே வெளியிடப்பட்டுள்ள செய்திகளை மறுப்பவர்கள், கண்டிப்பவர்கள் யாரும் இல்லை என்பதையும், வரவேற்பவர்கள்தான் தமிழ்நாட்டினுடைய பெரும்பான்மை மக்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும்வண்ணம் தயாரிக்கப்பட்டுள்ள இந்த வரவு செலவுத் திட்டம், பொதுமக்களின் ஏகோபித்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இதை நடுநிலையாளர்கள் பலரும் ஏடுகளிலே தெரிவித்திருக்கிறார்கள். இந்த விவாதத்தில் நான் தெரிவிக்க விரும்பும் பதில் இது. தமிழ்நாட்டிலே மூன்று ஆண்டுகள் தொடர்ந்த வறட்சி நிலை.

சுனாமிப் பேரலை அழிவு மற்றும் மழை வெள்ளப்பெருக்கு என இயற்கையின் கோரப்பிடியில் தமிழக விவசாயிகள் சிக்கித் தவிக்கையில், முந்தைய அரசால் கடந்த 5 ஆண்டுகளில், விவசாயிகள் அதனுடைய கோரப் பிடியிலே சிக்கி, அன்றாட உணவுக்குக்கூட தவித்துக்கொண்டு இருந்த கால கட்டத்தில், முந்தைய அரசு கடந்த 5 ஆண்டுகளில் மொத்தமாக, வட்டி தள்ளுபடி மற்றும் கடன் ஒத்திவைப்பு ஆகிய வகைகளில் ரூ.403.65 கோடி மட்டுமே நிவாரண கடமைகளுக்காகச் செலவிட்டுள்ளது. 5 ஆண்டுகளில் செலவிட்டது, செலவிடுவதாக அறிவித்து கூட்டுறவு வங்கிகள் மூலமாக செய்த செலவு ரூ.403 கோடிதான். ஆனால், பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுடைய கடன் சுமையை அறவே அகற்றவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் ரூ.6,866 கோடி அளவிலான கூட்டுறவுக் கடன்களை தள்ளுபடி செய்து ஆணையிட்டது இந்த அரசுதான், கலைஞர் அரசுதான்.

தமிழகத்தில் உள்ள அனைத்து விவசாயப் பெருமக்களும் வரவேற்றுள்ள இந்த நடவடிக்கையின் செயலாக்கத்தைப் பற்றிய சில ஐயப்பாடுகளை மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தனர். கூட்டுறவு அமைப்புகளிடமிருந்து தமிழக விவசாயிகள் பெற்றுள்ள மொத்தக் கூட்டுறவுக் கடன்களின் அளவு ரூ.6,866 கோடி ஆகும். இக்கடன்கள் முழுவதும் இரத்து செய்யப்பட்டு உள்ளதால் (in total) கூட்டுறவு வங்கிகளுக்கு வரவேண்டிய கடன் நிலுவைத் தொகை எதுவும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கூட்டுறவு வங்கிகளில் வைப்பீடு (Deposit)செய்துள்ள வைப்பீடுதாரர்களுக்கு வைப்பீடுகள் முதிர்வு அடையும்போது, அந்தக் காலக் கட்டத்தில் உரிய வட்டியுடன் திருப்பி அளிக்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்துள்ளது. இந்த அரசு உரிய நேரத்தில், மேலும் நிதி

உதவி செய்து, அந்த வைப்பீடுகளை அவர்கள் திரும்பப் பெறுவதற்கு உதவி செய்யும்.

நபார்டு வங்கியிடமிருந்து பெற்ற கடன்கள், உரிய காலத்தில் அரசால் திருப்பிச் செலுத்தப்படும். அது அவர்களோடு – நபார்டு வங்கிகளினுடைய நிர்வாகிகளோடு தமிழக அரசினுடைய நிதித் துறைச் செயலாளர் ஒப்பந்தம் செய்துகொண்டு ஏற்கெனவே தள்ளுபடி செய்த கடனை 4 ஆண்டுகளில் ஒப்படைப்பதாகவும், தொடர்ந்து அவர்கள் கடன்களை வழங்க வேண்டுமென்று கேட்டும் இருக்கிறார். முதற்கண் நபார்டு வங்கிக்குச் செலுத்த வேண்டிய ரூ.1,668 கோடி அளவிலான கடன்களை, அரசே முழுவதும் ஏற்று, இந்த ஆண்டில் செலுத்த வேண்டிய தொகையான ரூ.435 கோடியைச் செலுத்தவும் நிதி ஒதுக்கி உள்ளது.

மேலும், நடப்பு ஆண்டில் விவசாயிகளுக்கு வேளாண் கடன்கள் வழங்கப்படுவதை சந்தேகப்பட்டார்கள். அந்தக் கடன்கள் வழங்கப்படுவதை உறுதி செய்யும் வகையிலும் தள்ளுபடி செய்யப்பட்ட கடன்களுக்கான இழப்பீடாகவும், ரூபாய் ஆயிரம் கோடி கூட்டுறவு வங்கி அமைப்புகளுக்கு உதவித் தொகையாக இந்த வரவுச் செலவு திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. இதுவரை சுமார் ரூபாய் 200 கோடி நிதி உதவி விடுவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபாய் 1.435 கோடி போக, எஞ்சியுள்ள ரூபாய் 5,431 கோடிக்குத் தேவையான ஒதுக்கீடுகளும் வரும் ஆண்டுகளில் வட்டியுடன் செலுத்தப்படும் என்று வரவு செலவுத் திட்டத்தில் மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இந்த நடவடிக்கைகளினால் கூட்டுறவு வங்கிகள் தொடர்ந்து செயல்படுவதும், கூட்டுறவு வங்கிகளின் வைப்பீடுதாரர்கள் நலனும் அங்கு பணிபுரிவோர் நலனும் காக்கப்படுவதுடன், விவசாயிகளுக்குத் தொடர்ந்து வேளாண் கடன்கள் வழங்கப்படுவதும் உறுதி செய்யப்படும். விவசாயம் தழைக்க வேண்டும் என்பதற்காகத்தான் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த விவசாயத்திலே தொய்வு விழாமல் தொடர்ந்து விவசாயம் நடக்க வேண்டும் என்பதற்கு, தொடர்ந்து கடன் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்படும். கூட்டுறவுக் கடன் தள்ளுபடிக்கான அரசாணையைத் தொடர்ந்து 75 நாட்களிலே 22,19,000 விவசாயிகளுக்கு ரூ.5,416 கோடி அளவிலான தொகைக்கு கடன் தள்ளுபடிச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு உள்ளன. இது ஒரு சாதனை ஆகும். இதுவரையில் தமிழகத்திலே இந்தக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக இவ்வளவு பேருக்கு, இவ்வளவு பெரிய தொகை கடன் தள்ளுபடி செய்யப்பட்டது இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட அந்தக் கடனுக்கு, அவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு உள்ளன. இந்தச் சான்றிதழ்கள் இருக்கின்ற காரணத்தால் மேலும் கடன் வாங்குவதற்கு வேறு வங்கிகளிலே கடன் வாங்குவதாக இருந்தாலும், எனக்குக் கடன் பாக்கி இல்லை. ஆகவே, கடன் கொடுங்கள் என்று கேட்டு வாங்குவதற்கு இந்தச் சான்றிதழ்கள் நிச்சயமாக அவர்களுக்குப் பயன்படும்.




இது ஒரு பெரும் சாதனை. மேலும், நடப்பு சாகுபடி காலத்தில் இதுவரை மாநிலமெங்கும் கூட்டுறவு வங்கிகள் மூலமாக ரூ.195 கோடி அளவிற்கு விவசாயக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்தச் சில நாட்களில் வழங்கப்பட்ட மொத்த தொகை ரூ.195 கோடி. கடந்த 5 ஆண்டுகளில் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட உயர் அளவுத் தொகை 2005–2006ல் ரூ.1,132 கோடி என்பது அந்தத் தொகையாக இருக்கிறபோது இந்த நடப்பு ஆண்டில் அதைவிட அதிகமாக ரூ.1,235 கோடி அளவு பயிர்க் கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பை சிறப்பாக மேற்கொண்டு வரும் காவல் துறை மற்றும் மற்ற துறைகளின் நவீனமயமாக்கல் திட்டம் ஆகியவற்றிற்கு இந்த அரசால் போதிய முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அ.தி.மு.க. வைச் சேர்ந்த சேகர்பாபு குறிப்பிட்டார். காவல் துறைக்கு கலைஞர் அரசு எப்பொழுதும் உயர் முன்னுரிமை அளித்து வந்துள்ளது. தி.மு.க. ஆட்சி காலத்தில் மட்டுமே காவலர் நலம் பேணும் வண்ணம் போலீஸ் கமிஷன்கள் அமைக்கப்பட்டன. மேலும் இந்த முதல் வரவு செலவுத் திட்டத்தில் காவல் துறைக்கான ஒதுக்கீடுகளை இந்த அரசு எந்த அளவிற்கு உயர்த்தியுள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கடந்த ஆட்சி காலத்தின்போது 2005–2006 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீடுகளின்படி காவல் துறைக்கான மொத்த ஒதுக்கீடு ரூ.1,339.33 கோடி ஆகும். இந்த ஒதுக்கீட்டை 22.9 சதவிகிதம் அளவிற்கு உயர்த்தி ஏறத்தாழ 23 சதவிகிதம் உயர்த்தி 2006–2007 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவுத் திட்டத்தில் ரூ.1,645.6 கோடி ஒதுக்கீடு செய்திருப்பதிலேயே இந்த அரசு காவல் துறைக்கு எந்த அளவிற்கு முன்னுரிமை அளித்து வருகிறது என்பதை அனைவரும் புரிந்து கொள்வர். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொகை கடந்த அரசின் 2006–2007 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில் அந்த அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.1,575.98, ரூ.1,576 கோடியை விட அதிகமே என்பதையும் இந்தத் தருணத்தில் நான் சுட்டிக் காட்ட விழைகின்றேன். மேலும், வேலை நியமனத் தடை காவல் துறைக்குப் பொருந்தாது என ஏற்கெனவே அவர்களாலே அறிவிக்கப்பட்டும் கடந்த ஆட்சி காலத்தில் இருந்து இத்துறையில் காலி இடங்கள் விடப்பட்டு இருப்பதையும் அந்த இடங்களை நிரப்ப இந்த அரசு ஆவன செய்துள்ளதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.




அதுமட்டுமன்றி அரசின் பல்வேறு முக்கிய துறைகளுக்கான ஒதுக்கீடுகள் 2005–2006 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடுகளைவிட எந்த அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளன என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன். 2005–2006 ஆம் ஆண்டில் மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு ரூ.1,652.24 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தத் துறைக்காக இந்த ஆண்டு ரூ.1951.55 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ.1,652 கோடி அவர்கள் ஒதுக்கியிருந்தார்கள். இப்போது நாம் ரூ.1,951 கோடியாக உயர்த்தியிருக்கிறோம். சென்ற ஆண்டு நெடுஞ்சாலைத் துறைக்கு ரூ.2,991 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தத் துறைக்காக இந்த ஆண்டு ரூ.3,583 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. ரூ.2,991 கோடியிலிருந்து சுமார் 600 கோடி அதிகமாக்கி ரூ.3,583 கோடியாக இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டில் ஊரக வளர்ச்சித் துறைக்கு ரூ.2,416 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டு இந்தத் துறைக்காக ரூ.3,212 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த ஆட்சி போய் இந்த






ஆட்சி வந்த காரணத்தால் ரூ.800 கோடி அதிகம் ஊரக வளர்ச்சித் துறைக்கு. அதேபோல் 2005–2006 ஆம் ஆண்டில் சமூக நலத் துறைக்காக ஒதுக்கப்பட்ட ரூ.5,58.18 கோடி ஒதுக்கீடு உயர்த்தப்பட்டு இந்தத் திருத்த வரவு செலவு திட்டத்தில் ரூ.967.28 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ.558 கோடி – ரூ.967 கோடியாக உயர்த்தப்பட்டது.

கடந்த ஆண்டில் நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கு ரூபாய் 1,490 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. இந்தத் துறைக்காக, இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.2,381 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஏறத்தாழ ரூ.1,400 கோடி என்பது 1,500 கோடி என்பது ரூ.2,400 கோடியாக 1½ மடங்குக்கு மேலாக உயர்த்தப் பட்டிருக்கிறது.

2005–2006 ஆம் ஆண்டின் வரவு–செலவுத் திட்டத்தில் போக்குவரத்துத் துறைக்கு ஒதுக்கப்பட்ட ரூ.269 கோடி என்ற அந்தத் தொகை இந்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.484 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது.

2006–2007 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்டத்தை மிகக் குறைந்த சதவிகிதமே பற்றாக்குறை உள்ள வரவு–செலவுத் திட்டமாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்றும் அரசின் நிதிப் பற்றாக்குறை உயர வாய்ப்புள்ளது என்றும் மாண்புமிகு உறுப்பினர் மறுமலர்ச்சி தி.மு.க.வைச் சார்ந்த கண்ணப்பன் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். மக்கள் நலன் கருதி இந்த அரசு அறிவித்துள்ள பல்வேறு நலத் திட்டங்களுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதன் விளைவாக 2005–2006 ஆம் ஆண்டில் ஏற்பட்டதைவிட இந்த ஆண்டு வருவாய்ப் பற்றாக்குறை சிறிது உயர்ந்துள்ளது.

ஏழை மக்களின் பசிப் பிணியைப் போக்கிட ரூபாய் இரண்டுக்கு ஒரு கிலோ அரிசி வழங்குதல். ரூபாய் இரண்டுக்கு — ஒரு கிலோ அரிசி; 3½ ரூபாய்க்கு ஏறத்தாழ 15 ஆண்டு காலமாக, 12 ஆண்டுகட்கு மேலமாக வழங்கி வந்த அந்த அரிசி இடைக் காலத்திலே, செல்வி ஜெயலலிதாவினுடைய ஆட்சிக் காலத்திலே 6 ரூபாய் வரையிலே உயர்த்துவதற்கு முயற்சிக்கப்பட்டு பின்னர் எதிர்ப்பால் கைவிடப்பட்ட அந்த அரிசி இந்த ஆண்டு மக்களுடைய நிலை கருதி, குறைந்த விலையில் அரிசி வழங்குவதுதான் ஏழைகளுடைய பசிப் பிணியைப் போக்கும் மருந்து என்று கருதி இரண்டு ரூபாய்க்கு — ஒரு கிலோ அரிசி வழங்குவதால். இதற்காக இந்தப் பற்றாக்குறையை, நஷ்டங்களை ஏற்றுக்கொள்ளலாம். இரண்டு ரூபாய்க்கு வழங்குகிற வகையிலே எவ்வளவு இழப்பு என்றால், ஏறத்தாழ ஒரு ஆண்டுக்கு ரூ.650,700 கோடி ரூபாய் இதற்காக அதிக செலவு. மொத்தத்திலே அரிசி விலை காரணமாக ரூ.1,900 கோடி ரூபாய் அளவுக்கு இந்த அரசு இழப்பை ஏற்றுக்கொள்கிறது.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குதல், விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்கள் தள்ளுபடி, நலிந்தோருக்கான உதவித் தொகைகளை அதிகப்படுத்தி வழங்குதல், மகப்பேறு உதவி என சமூதாயத்தின் அனைத்து தரப்பினரும் பயன் பெறும் வகையில் பல்வேறு நலத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப் பட்டு முன் எப்போதும் இல்லாத அளவுக்கு சமூகப் பாதுகாப்பு கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு நல்ல அரசு என்பது, இன்னும் சொல்லப்போனால் Social Welfare என்பது சமுதாயத்தினுடைய அடித்தட்டு மக்களுடைய வாழ்க்கையில் எப்படிப்பட்ட நிறைவை ஏற்படுத்துகிறதோ, எந்த வகையிலே அந்த அடித்தட்டு மக்களுடைய குறைகளை மெல்ல, மெல்ல போக்குகிறதோ அதுதான் சிறந்த சமுதாய நல அரசு, சமுதாய நல வளர்ச்சியிலே அக்கறை உள்ள அரசு. அந்த அடிப்படையில்தான் இவை எல்லாம் ஏற்று செய்யப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

நலிந்த பிரிவினரின் சமூகப் பாதுகாப்புக்காக 2005–2006 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் ஒதுக்கியிருந்தது ரூ.8,118 கோடி. அது இப்போது 39 சதவிகிதம் உயர்த்தப்பட்டு 2006–2007 ஆம் ஆண்டு திருத்த வரவு–செலவுத் திட்டத்தில் ரூ. 11,292 கோடியாக உயர்த்தி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல்வேறு நலத் திட்டங்களுக்குக் கூடுதலாக ரூ.3,175 கோடி (additional) – கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த நிதிநிலை அறிக்கையில் அவர்களால் வழங்கப்பட்ட இடைக்கால அறிக்கையைவிட நம்முடைய இந்த அறிக்கையின் மூலமாக சமூக நலத்தின் அடிப்படையில் அதிகப்படுத்தப்பட்ட தொகை மட்டும் ரூ.3,175 கோடி ரூபாய். அப்படி ஒதுக்கப்பட்ட போதிலும் எந்த புதிய வரிகளும் விதிக்கப்படாமலேயே, அனைத்து நிதி ஆதாரங்களையும் திரட்டி வருவாய்ப் பற்றாக்குறை ரூ.1,129 கோடி அளவிலேயே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. வருவாய்ப் பற்றாக்குறை இவ்வளவு செலவுக்குப் பின்னரும் ரூ.1,129 கோடி ரூபாய். நிதிக் கமிஷன் அறிவித்திருக்கிற, தெரிவித்திருக்கிற ஒரு கட்டுப்பாடு, நிதிப் பற்றாக்குறை 3 விழுக்காட்டுக்கு மேல் அமையக்கூடாது என்பது. இப்போது ரூ.1,129 கோடி ரூபாய் என்பது ரூ.1,200 கோடியானால்தான் 3 விழுக்காடு ஆகும். அதைவிடக் குறைவாகத்தான் இன்றையதினம் நமக்கு வருவாய்ப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்த வருவாய்ப் பற்றாக்குறையும் 12வது நிதிக் குழு பரிந்துரைத்துள்ள 2006–2007 ஆம் ஆண்டிற்கான இலக்கைவிட, அவர்கள் குறித்த வரம்பைவிட குறைவானதே என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

2008–2009 ஆம் ஆண்டில் எய்தப்பட வேண்டிய இலக்கான மாநில மொத்த உற்பத்தி மதிப்பில், 3 சதவிகிதத்திற்கு மேற்படாமல் நிதிப் பற்றாக்குறை இருக்கலாம் என்ற வரம்பினை மீறாத நிலையிலேயே, நிதிப் பற்றாக்குறைக் கட்டுப்படுத்தப் பட்டுள்ளது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த வரவு–செலவுத் திட்டத்தில், திட்டச் செலவுகள் குறைந்துள்ளதாகவும், திட்டப் பணிகள் இல்லாத இனங்களுக்கான செலவுகள் அதிகரித்துள்ளதாகவும் மாண்புமிகு உறுப்பினர் திரு.கண்ணப்பன் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள்.

2006–2007 ஆம் ஆண்டிற்கான ஆண்டு திட்ட மதிப்பீடு, இதுவரை முன் எப்போதும் இல்லாத உயர்ந்த அளவான ரூபாய் 12,500 கோடிக்கு ஒப்புதல் பெறப் பட்டுள்ளது; திட்டக் குழுவிடமிருந்து அந்த இசைவைப் பெற்றிருக்கிறோம். இது, 2005–2006 ஆம் ஆண்டின் திட்ட ஒதுக்கீட்டைவிட 37 சதவிகிதம் அதிகமாகும். மூன்றிலே ஒரு பங்கு அதிகமாகும் என்பதை நிதிநிலை அறிக்கையில் ஏற்கெனவே தெரிவித்துள்ளேன். இத்திட்டப் பணிகளை நிறைவேற்றத் தேவையான நிதி ஒதுக்கீடுகள், இந்த வரவு–செலவுத் திட்டத்தில் முழுமையாகச் செய்யப்பட்டுள்ளன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியில்லாத அனைத்துக் குடும்பங்களுக்கும் –– வறுமைக் கோட்டிற்குக்கீழே உள்ளவர்கள் பெரும்பான்மையாக இருப்பார்கள் –– வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. –– மற்ற ஏழைகளுக்கும் –– அவர்கள் அனைவருக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்க இந்த அரசு உறுதிபூண்டுள்ளது. இதுகுறித்து ஏற்கெனவே வரவு–செலவுத் திட்ட உரையில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.



முதற்கட்டமாக, தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில், அங்கே வாழ்கின்ற குடும்பங்களுக்கு வழங்கப்பட வேண்டிய 30,000 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்காக ரூ.9 கோடி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இதன்பின்னர், சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழுவின் மேற்பார்வையில் திறந்த ஒப்பந்தப்புள்ளி முறையில் — open tender — திறந்த ஒப்பந்தப்புள்ளி முறையில், அந்த முறையின்மூலம் மேலும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வாங்கத் தீர்மானித்து, அதற்காக ரூ.750 கோடி இந்த நிதிநிலை அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது.வரும் நிதியாண்டுகளில், மேலும் போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, எஞ்சியுள்ள வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டியில்லாத குடும்பங்களுக்கு வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் ஏழை விவசாயிகள் ஆகியோருக்கான நலத் திட்டங்களுக்கு முந்தைய தி.மு.க. அரசால், 2001ஆம் ஆண்டு விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டன. பின்னர் வந்த அரசால், இந்த நல வாரியம் செயற்படாது முடக்கப்பட்டு, நாலரை ஆண்டுகளாக நலத் திட்ட உதவிகள் எதுவும் வழங்கப்படாத நிலையில், நடக்கவிருந்தத் தேர்தலை முன்னிட்டு, 2005 ஆவது ஆண்டில், அன்றைய முதலமைச்சர், உழவர் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது. விவசாயத் தொழிலாளர்களின் நலன் காக்கும் ஒரே நோக்கத்துடன் அப்போது அமைக்கப்பட்ட, விவசாயத் தொழிலாளர் நல வாரியத்தை இப்பொழுது மீண்டும் சட்டபூர்வமாக இந்த அரசு அமைத்து, அவர்களின் நலனைக் காக்க உறுதிபூண்டிருக்கிறது. தற்போது சட்டப்பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள, சட்டமுன்வடிவின் இணைப்பைப் படித்தாலே, கடந்த கால அரசால் அறிவிக்கப்பட்ட சலுகைகளைவிட, அதிக சலுகைகள் மற்றும் நலத் திட்ட உதவிகள் இந்த வாரியத்தின் மூலம் வழங்கப்பட உள்ளதைப் புரிந்துகொள்ளலாம்.

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. விஜயகாந்த் அவர்கள், இளைஞர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, தொலைநோக்குக் கொண்ட ஒரு விரிவான திட்டம் தேவை என்பதை அவர் வலியுறுத்தினார். வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் வகையில், இந்த நிதிநிலை அறிக்கையில் பல்வேறு திட்டங்கள் இடம் பெற்றுள்ளன என்பதை நான் இங்கே தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

உதாரணமாக, 15-6-2006 அன்று, தமிழக முதலமைச்சர் அவர்கள், பெங்களூரில் உள்ள WIPRO மற்றும் Infosys நிறுவனங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆலோசனை நடத்தியதன் அடிப்படையில், Infosys நிறுவனம், ரூ.1,250 கோடி முதலீட்டில் 50 இலட்சம் சதுர அடிகள் கொண்ட மென்பொருள் நிறுவனத்தினை தமிழகத்தில் தொடங்கி, அதற்கு வேண்டிய கட்டடங்களைக் கட்டி 25,000 மென் பொறியாளர்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும் அந்தத் திட்டத்தைக் குறித்த நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மென்பொருள் தொழிலில் பல்லாயிரக்கணக்கான பொறியியல் பட்டதாரிகளுக்கும், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைப் பணிகளில் இலட்சக்கணக்கான பட்டதாரிகளுக்கும் வேலைவாய்ப்பைத் தரவல்லதாக அது விளங்கும்.



தகவல் தொழில்நுட்பத் துறைக்கு முன்னுரிமை அளிக்கும், ஒரு புதிய தகவல் தொழில் நுட்பக் கொள்கை வகுக்கப்படும். A new policy. ஒரு புதிய தகவல் தொழில் நுட்பத் துறைக்கான கொள்கை வகுக்கப்படும் என்று இந்த அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னையில் இரண்டாவது டைடல் பூங்காவும், முதல் டைடல் பூங்கா நம்முடைய ஆட்சிக் காலத்திலே கட்டி முடிக்கப்பட்டு, அன்றைய பிரதமர் வாஜ்பாய் அவர்கள், அதைத் துவங்கி வைத்ததை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். அதைத் தொடர்ந்து, இப்பொழுது இரண்டாவது டைடல் பூங்காவும், கோவையிலும் டைடல் போன்ற ஒரு அமைப்பை உருவாக்குவது குறித்தும், இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.




தமிழ்நாட்டில் புதிய கணினி உற்பத்தி செய்யும் தொழிற் சாலைகளை நிறுவ, தொழில் முனைவோர்களை ஈர்க்கும் வகையில், ஒரு பெரும் விற்பனை வரி விலக்குத் திட்டம், விற்பனை வரியை அந்த வகையிலே விலக்குவது மூலமாக, ஒரு புதிய ஊக்கத்தை ஏற்படுத்துகிற திட்டம் இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பல புதிய கணினி தொழிற் சாலைகள் தமிழ்நாட்டில் நிறுவப்படுவதுடன், இந்தப் புதிய தொழிற்சாலைகளில் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போதுள்ள அரசின் அணுகுமுறை, தொழில்களை நிறுவ முன்வரும் தொழில் முனைவோர்களை ஊக்கப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதால், மோட்டோரோலா போன்ற பெரும் நிறுவனங்கள், தமிழ்நாட்டில் தங்கள் தொழிற்சாலைகளை நிறுவ முன்வந்துள்ளன. தொழில் முதலீட்டை ஈர்க்கவும், தொழில் துறையில் வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும், ஒரு புதிய தொழில்கள் கொள்கை அறிவிக்கப்பட உள்ளது. தொழில் கொள்கை புதியதாக உருவாக்கப்படவுள்ளது.

தமிழகத்தில் தொழில் பெருகுவதற்கு ஏதுவாகுமாறு, சிறப்புத் தொழில் பெரு வழிச்சாலை ஒன்றினை, தொழில் வளர்ச்சிக்கு ஏதுவாகும் பெரு வழிச்சாலை ஒன்றினை உருவாக்க கருதப்பட்டுள்ளது. Highway. அது புதிய தொழில்கள் அமைவதற்கு ஏதுவான முறையில் அந்த Highway அமைக்கப்படும். இச்சிறப்பு தொழில் பெரு வழிச்சாலை, உலகத் தரம் வாய்ந்த கட்டமைப்பு வசதிகளுடன் அமைக்கப்படும் என்பதால், பெருமளவில் புதிய தொழிற்சாலைகள் அமையவும், அதன் காரணமாக வேலைவாய்ப்புகள் பெருகவும் நல்ல வாய்ப்பு ஏற்படும்.

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள பகுதிகளில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், இப்பகுதிகளில் நிறுவப்படும் சிறு மற்றும் குறுந் தொழில்களுக்கான முதலீட்டு மானியச் சலுகைத் திட்டத்தை, முதலீட்டிலே மானியம் வழங்குவது, அந்த மானியச் சலுகைத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்த இந்த அரசு முடிவு எடுத்துள்ளது. இதனால் தொழில் துறையில் பின்தங்கியுள்ள பகுதிகளில் புதிய குறுந் தொழில்கள் மூலம், சிறு தொழில்கள் மூலம், வேலைவாய்ப்புகள் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

படித்த இளைஞர்களுக்கு சுய வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் வகையில், இளைஞர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கும் திட்டத்திற்காக, இந்தத் திருத்த வரவு

செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தனியார் துறை மட்டுமின்றி அரசுத் துறைகளிலும், இளைஞர்களுக்கு பெரும் எண்ணிக்கையில் வேலை வாய்ப்பு உருவாகும் வகையில், இந்த அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

குறிப்பாக, கடந்த 5 ஆண்டுகளாக அரசுப் பணிகளில் நேரடி நியமனம் தடை செய்யப்பட்டிருந்ததை கருத்தில் கொண்டு, அதனால் வாய்ப்பு மறுக்கப்பட்டவர்கள், மறுபடியும் வாய்ப்பு பெறுமாறு அரசுப் பணிக்கு விண்ணப்பிப்பதற்கான அந்த வாய்ப்பை பெறுமாறு, அதிகபட்ச வயது வரம்பைத் தளர்த்தி, தற்போதுள்ள வயதை 5 ஆண்டுகள் வரை நீட்டிக்க ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேலும், வேலை நியமனத் தடை ஆணை நீக்கப்பட்டு, பல்வேறு அரசுத் துறைகளில் காலியாக இருக்கும் பல்லாயிரக்கணக்கான பணியிடங்களை நிரப்ப, துரிதமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆகவே, இந்த அரசு, தனியார் துறைகளிலும், அரசுத் துறைகளிலும், வேலைவாய்ப்புகளை பெருமளவில் உருவாக்க அனைத்து நடவடிக்கைகளையும் முனைப்பாக எடுத்து வருகிறது என்பதை நான் அவையிலே உள்ள மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.




நாடு முழுவதும் மதிப்புக் கூட்டு வரி அறிமுகப் படுத்தப்பட்டு, தமிழ்நாட்டில் அந்த வரி அறிமுகப் படுத்தப்படாத நிலை இருந்ததால், மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக்கு ஒரு முட்டுக்கட்டையாக இருந்தது என அரசு கூட்டிய கலந்தாய்வுக் கூட்டத்தில், உற்பத்தியாளர்கள் மற்றும் வணிகச் சங்க அமைப்பின் பிரதிநிதிகளால் அவர்கள் சார்பில் முறையிடப்பட்டது. மேலும், இவ்வரி மதிப்புக் கூட்டு வரி அறிமுகப் படுத்தப்படாததால், புதிய தொழில் முனைவோர் தமிழ்நாட்டிற்கு வர விரும்பாமலும் ஏற்கெனவே இருக்கக்கூடிய பெரும் தொழில்கள் புதிய உற்பத்தி அலகுகளை ஏற்படுத்துகிறபோது new production unit ஏற்படுத்துகிறபோது வேறு மாநிலங்களில் அமைக்கக்கூடிய நிலையும் இருந்து வந்தது. இதை கருத்தில் கொண்டு வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் தொழில்கள் தமிழ்நாட்டில் அமையப்பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு மதிப்புக் கூட்டு வரி முறை ஏற்கப்பட்டு இந்த மாநிலத்திலே வரும் ஜனவரி முதல் தேதி முதலாக அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதனால் புதிய தொழில்கள் தமிழ்நாட்டில் அமைக்கப் படுவதுடன், மூலப்பொருள்கள் மீதாக செலுத்தப்பட்ட வரியை உற்பத்திப் பொருள்களின்மீது செலுத்த வேண்டிய வரியிலிருந்து கழித்துக் கொள்வதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. தமிழ்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் சந்தையில் போட்டியிடும் வாய்ப்பைப் பெறும் என்பதையும் இதனால் சந்தையில் போட்டியிடுவதற்கு ஏற்ப விலை குறையும் என்பதனை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், சிறு வணிகர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, ஆண்டு ஒன்றுக்கு பத்து இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் இந்த மாநிலத்திற்குள்ளேயே பொருட்களை வாங்கி விற்கும் வணிகர்களுக்கு மதிப்புக் கூட்டு வரியின்கீழ் பதிவு செய்து கொண்டு கணக்கு வைப்பதிலிருந்து, வரிக் கணக்கு வைப்பதிலிருந்தும் வரி செலுத்துவதிலிருந்தும் விலக்கு அளிக்கப்படும். மதிப்புக்

கூட்டு வரி இங்கே கொண்டு வருகிறபோது பெரிய தொழிலதிபர்கள், வணிகர்கள் மட்டும்தான் பயன்பெறுவார்கள் என்ற கருத்து சிறு வணிகர்களுக்கு இருக்கிற காரணத்தால், அந்தச் சிறு வணிகர்களைக் கண்டறிய ஒரு வரம்பாக ஏறத்தாழ பத்து இலட்சம் ரூபாய் வரையிலே, அதற்கு மிகாமல் வியாபாரம்—வணிகம் செய்கிறவர்களுள் இந்த மாநிலத்திற்குள்ளேயே பொருள்களைக் கொடுத்து வாங்குபவர்களுக்கு இந்த மதிப்புக் கூட்டு வரியிலேயிருந்து விலக்கு அளிக்கப்படும் என்று அரசு சார்பாக அறிவிக்கப் பட்டிருக்கிறது. மேலும், நிதிநிலை அறிக்கையில் சில விற்பனை வரிகள் குறைக்கப் பட்டிருக்கின்றன, நீக்கப் பட்டிருக்கின்றன. அது உள்ளபடியே தமிழ்நாட்டு மக்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு வரவேற்கிற ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை நான் குறிப்பாக தெரிவிக்க விரும்புகிறேன். முழு விவரமும் தெரிவிக்க ஆரம்பித்தால் ஒரு வேளை நீங்கள் உங்களைப் பட்டினி போட்டதாகக் கருதுவீர்கள். விற்பனை வரியைக் குறைத்து, உணவுப் பண்டங்களின் விலையை குறைக்க வழி செய்துவிட்டு, உங்களைப் பகல் உணவு இல்லாமல் நிறுத்தி வைப்பது முறையல்ல. ஆகவே நான் கூறக்கூடிய முழு விவரம் எல்லோருக்கும் தெரிந்த உண்மையே. தெரிந்த உண்மைகளை நான் திரும்பத் திரும்ப சொல்ல வேண்டிய ஒரு அவசியம் இல்லை என்றும் நான் கருதுகிறேன். குறிப்பாக மட்டும் சொல்கிறேன், நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்ட பருப்பு, பயறு வகைகள் மற்றும் எண்ணெய் மீதான விற்பனை வரி நீக்கத்தின் விளைவாக இந்தப் பொருட்களின் சந்தை விலை உடனடியாகக் குறையத் தொடங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணமாக, உளுந்து, பச்சைப் பயறு, துவரம் பருப்பு, போன்றவற்றின் விலை 4.5 சதவீதத்திலிருந்து 6 சதவீதம் வரை குறைந்துள்ளது. துவரம் பருப்பு கிலோ ஒன்று ரூ.34 என்று இருந்தது, ரூ.32 ஆகக் குறைந்துள்ளது. உளுந்து கிலோ ஒன்று ரூ.50 என்று இருந்தது, ரூ.48 ஆகக் குறைந்துள்ளது. மேலும், கடலை எண்ணெய், தேங்காய் எண்ணெய், வனஸ்பதி போன்றவற்றின் விலைகள் இரண்டு சதவீதம் முதல் நான்கு சதவீதம் வரை குறைந்துள்ளது. கடலை எண்ணெய் லிட்டர் ஒன்று ரூ.53லிருந்து ரூ.52 ஆகக் குறைந்துள்ளது. தேங்காய் எண்ணெய் லிட்டர் ஒன்று ரூ.73 லிருந்து ரூ.70 ஆகக் குறைந்துள்ளது.




மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர், எதிர்க்கட்சியைச் சார்ந்த திரு. சேகர்பாபு கடந்தகால ஆட்சியில் அதிக எண்ணிக்கையில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டதாகவும், இந்த ஆண்டு குறைவான எண்ணிக்கையிலே மகளிர் சுய உதவிக் குழுக்கள் தொடங்க அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். கடந்த ஆட்சியில் புதிய மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்படுவதற்கான ஆண்டு இலக்கு, கடந்த முதல் மூன்று ஆண்டுகளில் 25,000 ஆக மட்டுமே நிர்ணயிக்கப்பட்டிருந்தது. ஆனால், நடைபெறவிருந்த தேர்தலை உள்ளத்தில் கொண்டு, மனதில் கொண்டு 2005–2006 ஆம் ஆண்டு மட்டும் இரண்டு இலட்சம் குழுக்கள் அமைக்கப்படுவதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. ஆண்டுக்கு 25,000 வழக்கமாக உருவாக்குவது எங்கே, ஒரே ஆண்டிலே இரண்டு இலட்சம் குழுக்கள் அமைக்கப்படுவது எப்படி? அதன்படி, ஒரு இலட்சத்து 16 ஆயிரத்து 608 குழுக்கள் அமைக்கப் பட்டன. அவற்றில் உறுப்பினர் சேர்க்கையின்போது செய்யப்பட்ட முறைகேடுகள் குறித்தும் ஏற்கெனவே

இந்த அவையிலே திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சுட்டிக்காட்டிப் பேசினார். ஒரு அமைப்பிலே இருப்பவர்கள் பலர் இன்னொரு அமைப்பிலும் இடம் பெற்று, பெயர்ப் பட்டியலை மாற்றி, மாற்றி அமைத்து, குழுக்களுடைய எண்ணிக்கையைப் பெருக்கியிருக்கிறார்கள் என்று விவரமாக இங்கே எடுத்துச் சொன்னார்கள்.




ஆகவே, அவர்கள் தெரிவித்ததுபோல, தவறான காரியங்கள் நடைபெற்று, முறை கேடுகள் நடைபெற்று, 1,16,000 குழுக்கள் என்று ஒரு புள்ளிவிவரம் காட்டப் படுகிறது. இந்த அரசு மகளிர் சுய உதவிக் குழுக்களை, மகளிர் மேம்பாட்டை உயர்த்துவதற்கான ஒரே நோக்கத்துடன் அமைக்கும் என்பதையும் மகளிருடைய முன்னேற்றத்திற்குப் பயன் படுவதாக இருக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அமைக்கப்படும் என்பதையும், சுய உதவிக் குழுக்கள் செம்மையாகச் செயல்பட அனைத்து அரசு உதவி–களையும் நல்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான மணல், சிமெண்ட், ஜல்லி போன்ற கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு பற்றி மாண்புமிகு உறுப்பினர், எதிர்க்கட்சி உறுப்பினரும், காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களும் இங்கே குறிப்பிட்டார்கள். மணல் விலையைக் கட்டுப்படுத்த பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:

(1) பொதுப் பணித் துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து, புதிய மணல் குவாரிகளைக் கண்டறிவதற்கான அதிகாரம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(2) குவாரிகளில் மூன்று ஷிப்டுகளில் மணல் எடுக்கவும், அதிக இயந்திரங்களை ஈடுபடுத்தவும் வகை செய்யப்பட்டுள்ளது.

(3) கள்ளத்தனமாக மணல் எடுப்பதைத் தடுப்பதற்காக இரவு நேரங்களில் காவலருடைய ரோந்துப் பணிகள் அதிகப்படுத்தப்பட்டுள்ளன.

(4) 5–7–2006 அன்று அவசரச் சட்டத்தின் மூலம் கள்ளத்தனமாக மணல் அள்ளுவோரை, அதை விற்றுப் பணம் சம்பாதிப்பவர்களை குண்டர் சட்டத்தின்கீழ் கைது செய்ய உரிய சட்டத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

கருங்கல் ஜல்லி, செங்கல் ஆகியவற்றின் விலை குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி தொழில் துறை செயலர் அவர்கள், புவியியல் மற்றும் சுரங்கத் துறை ஆணையருடன் முதற்கட்டமாக திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட கருங்கல் மற்றும் ஜல்லி உற்பத்தியாளர்கள் சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துபேசி, இவற்றின் விலையை உடனடியாகக் குறைக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். இதன்படி 17–7–2006 அன்று முதல் கட்டுக்கல் 20m.m. மற்றும் 40m.m. ஜல்லி ஆகியவற்றின் விலயைக் குறைத்துவிற்க ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதனால் இவற்றின் விலை குறைந்துள்ளது. இதுபோலவே மாவட்ட ஆட்சியர்கள் மூலமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் கோவை, சேலம், நாமக்கல், திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களிலும் இவற்றினுடைய விலை குறைக்கப் பட்டிருக்கிறது.

சிமெண்டைப் பொறுத்தவரையில், இந்தப் பொருள் விலைக் கட்டுப்பாடு வரையறைக்கு உட்பட்டது அல்ல என்பதால் மாநில அரசு சிமெண்டின் விற்பனை விலையை நிர்ணயம் செய்வதில்லை. மாநில அரசாங்கத்திற்கு அந்த அதிகாரம் கிடைப்பதற்கு வாய்ப்பில்லை. உற்பத்தி மற்றும் தேவையைப்பொறுத்து, வெளிச் சந்தை நிலவரப்படி சிமெண்டின் விலையில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. அது ஏறத்தாழ இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு மாநிலங்களிலே உள்ள தேவைகள் காரணமாக விலை ஏற்றம், விலை குறைவு, என்று அவ்வப்போது அமைகின்றன. நமது நாட்டின் கட்டுமானத் துறையில் சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள உயர் வளர்ச்சியின் காரணமாக இந்தியா முழுவதும் ஏற்பட்டுள்ள உயர் வளர்ச்சியின் காரணமாக சிமெண்டிற்கான தேவை மிகவும் அதிகரித்துள்ளது. இதனால் நாடெங்கிலும் சிமெண்ட் விலை உயர்ந்துள்ளது. உதாரணமாக, சராசரி விலையாக, டெல்லியில் ரூ.205–க்கும், மும்பையில் ரூ. 240–க்கும் பெங்களூரில் ரூ.225–க்கும் திருவனந்தபுரத்தில் ரூ. 220–க்கும் என்ற அந்த அளவில், அந்த விலையில் சிமெண்ட் விற்கப்படுகிறது. சென்னையில் சிமெண்ட் விலை சராசரியாக ரூ. 200 என்ற அளவில் உள்ளது. எனவே, மற்ற நகரங்களை ஒப்பிடும்போது சென்னையில் சிமெண்டின் விலை அதிகமாக இல்லை என்பதை எல்லோரும் ஏற்பார்கள்.

இந்தியக் கடல் எல்லைப் பகுதியில் இந்திய மீனவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள் குறித்தும், கச்சத் தீவு பகுதியில் அவர்கள் மீன்பிடிக்க வசதியான, மீன்பிடி உரிமைகள் குறித்தும் இவ்வரசு உரிய நடவடிக்கை எடுக்கும். கச்சத் தீவு பகுதியில் இந்திய மீனவர்கள் மீன்பிடித்தல், வலைகளைக் காய வைத்தல் ஆகியவற்றை மேற்கொள்ள இலங்கை அரசிடம் தொடர்பு கொண்டு, கொள்கை முடிவு எடுக்க மத்திய அரசை இந்த அரசு கேட்டுக்கொள்ளும், வலியுறுத்தும். இந்திய மீனவர்கள் கடல் எல்லையைத் தாண்டிச் சென்றால், நம்முடைய இந்தியக் கடல் எல்லையைத் தாண்டிச் சென்றால், அவர்களைக் கைது செய்தாலும்கூட, உடனடியாக விடுவித்து, எந்தவிதமான கொடுமைக்கும் ஆளாக்காமல், சுட்டுத் தள்ளுவது போன்ற கொடுமைக்கு ஆளாக்காமல் இருக்க, இருதரப்பு ஒப்பந்தம் ஏற்பட, இந்தியாவுக்கும், இலங்கைக்கும் ஒப்பந்தம் ஏற்பட வழிவகை செய்ய இந்த அரசு மத்திய அரசினிடத்திலே வலியுறுத்தும்.

நலிந்த பிரிவினருக்கு வீட்டு மனைப் பட்டா வழங்க வேண்டியதன் அவசியத்தைப்பற்றி இங்கு சில உறுப்பினர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். நலிந்த, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினருக்கு நிலம் கையகப்படுத்தி, வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்கான திட்டம் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இடையில், கடந்த ஆட்சியில் அந்தத் திட்டம் செயல்படுத்தப்படாமல் இருந்த அந்த நிலையை இப்போது மாற்றி, மீண்டும் செயல்படுத்தத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்துவற்காக அரசாங்கம் ஆர்ஜிதம் செய்வதற்காக போதிய நிதி ஒதுக்கீடுகள் இந்த வரவு செலவுத் திட்டத்தில் செய்யப்பட்டுள்ளது.




தென்னை மற்றும் பனை மரங்கள் சார்ந்த மரம் ஏறும் தொழிலாளர்கள் சந்தித்து வரும் இன்னல்களைக் குறிப்பிட்டு, கள் இறக்கி விற்க அனுமதிக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் கண்ணப்பன் அவர்கள் இங்கே கோரிக்கை விடுத்தார்கள். அத்தகைய அனுமதியை வழங்க இயலாது என்றாலும், தென்னை மற்றும் பனைத் தொழிலாளர்கள் நலனைக் காப்பாற்றுவதற்காக பனைத் தொழிலாளர் நல வாரியம் ஒன்றை மீண்டும் ஏற்படுத்தி, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த நல உதவிகள் அவர்களுக்கு வழங்குவது மேலும் செம்மையாக்கப்பட்டு, இந்தத் தொழிலாளர் நலம் –

அந்த ஏழைத் தொழிலாளர்களுடைய நலன் காக்கப்படுவது உறுதி செய்யப்படும் என்பதை இந்த அவைக்கு நான் அரசு சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் — நான் வேறு பல செய்திகளை இந்த அவைக்குத் தெரிவிக்கலாம், தெரிவிக்கும் ஆர்வத்தோடுதான் வந்தேன். தெரிவிக்கிற வாய்ப்பு குறைந்திருக்கிறது, நேரம் இல்லாத காரணத்தால். எனவே என்னுடைய உரையைச் சுருக்கமாக நான் முடித்துக்கொள்ள விரும்புகிறேன். உள்ளபடியே இந்த விவாதத்திலே கலந்துகொண்டு உரையாற்றிய அத்தனை பேரும் கருத்துக்களோடு பேசினார்கள். ஏறத்தாழ 52 மணி நேரம், பஜனை இல்லாமல், இந்த விவாதம் நடைபெற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதன் மூலமாக பல்வேறு பிரச்சினைகள் இந்த அவையில் எடுத்து வைக்கப்பட்டிருக்கின்றன.




ஜனநாயகம் தழைக்கும் வழி என்று சொன்னாலே அது கருத்துப் பரிமாற்றம்தான். அந்தக் கருத்துப் பரிமாற்றம் முழு அளவில் நடைபெற வேண்டும் என்பது கலைஞருடைய நீண்ட நாள் விருப்பம். (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழியிலே வந்த நாங்கள், அதை என்றும் வரவேற்போம். எல்லோரும் பேசுங்கள், எப்போதும் பேசுங்கள், என்றும் உங்களுடைய பேச்சு தடைப்படாமல் தொடரட்டும், நமது எண்ணங்கள் கலந்து பரிமாறப்படட்டும். அதன் விளைவாக நாடு தழைக்கட்டும் என்று எண்ணுகிறவர்கள் நாங்கள். இருந்தாலுங்கூட, அந்த வகையிலே இந்த முறை நம்முடைய சட்டமன்றத்திலே 52 மணி நேரம் விவாதம் நடைபெற்றது என்றால் கடந்த கால நடைமுறையில் அது சாதாரணமானது அல்ல, அது ஒரு பெரிய வெற்றி, பேரவைத் தலைவருடைய வெற்றி என்று நான் அவரைப் பாராட்டிக் குறிப்பிட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய வழிகாட்டுதலின்கீழ் தயாரிக்கப்பட்ட இந்த வரவு செலவுத் திட்டம் சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்னும் அடிப்படையில் (மேசையைத் தட்டும் ஒலி) சொன்னதையும் செய்வோம், சொன்னதற்கு மேலும் செய்வோம் என்பது இன்றைய நிலை. இருந்தாலும் சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம் என்ற இந்த ஆட்சியின் சூளுரையை மெய்ப்பித்துள்ளது என்பதை நான் இங்கே பெருமையுடன் தெரிவித்துக்கொள்வதுடன், நடைபெற்ற பொது விவாதத்தில் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் கூறிய பல்வேறு அரிய கருத்துக்கள், வேண்டுகோள்கள் குறித்து இந்த அரசு ஆழ்ந்து சிந்தித்து முடிவெடுத்து அதைச் செயலாற்றும் என்று நான் இந்த அவையிலே உள்ள அனைவருக்கும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த வரவு செலவுத் திட்டத்தை இம்மாமன்றத்தின் முன் வைக்க எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, பேரவைத் தலைவர் அவர்கள் நான் உரையாற்றுவதற்கு அனுமதித்து நேரத்தை நீட்டித்துத் தருவதற்கு முன்வந்ததற்காக அவருக்கும் நன்றி தெரிவித்து உங்களை எல்லாம் இப்போது நான் விடுதலை செய்கிறேன். வணக்கம்.

* * *

# முதற்கட்டமாக 5 இலட்சம் ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தரிசு நிலத்தை மேம்படுத்தி வழங்க பணிகள் தொடக்கம்

தமிழக சட்டமன்ற பேரவை விதி 110இன் கீழ்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள்
1.8.2006 அன்று சட்டப்பேரவையில்
படித்தளித்த அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,**

நேற்று நம்முடைய நிதியமைச்சர் அவர்களுக்கு போதிய நேரம் கிடைக்காத காரணத்தால் நான் இங்கே சொல்வதாக இருந்த சில கருத்துக்களை, சில செய்திகளை வேறு வழியின்றி 110ஆவது விதியின் கீழ் இந்த மாமன்றத்தில் வைக்கிறேன்.





நடந்து முடிந்த 2006ஆம் ஆண்டு சட்டப் பேரவைப் பொதுத் தேர்தலில் ஜனநாயக முற்போக்குக் கூட்டணி ஆதரவுடன் திராவிட முன்னேற்றக் கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட வாக்குறுதிகள் இந்த மூன்று மாதக் காலத்திற்குள்ளாகவே பெரும் பகுதி நிறைவேற்றப்பட்டுள்ளன.

* ஒரு கிலோ அரிசி இரண்டு ரூபாய்
* பள்ளிக் குழந்தைகள் சத்துணவில் வாரம் இரு முட்டைகள்.
* ஏழாயிரம் கோடி ரூபாய் விவசாயிகள் கூட்டுறவு கடன் ரத்து.
* பள்ளிகளில் தமிழ் கட்டாயம்.
* திருமண நிதி உதவித் திட்டம்.
* மாணவர்களுக்கு உயர்த்தப்பட்ட கல்விக் கட்டணம் குறைப்பு.
* வேலையில்லா இளைஞர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை.
* நெசவாளர்களுக்கும் இலவச மின்சாரம்.
* கூட்டுறவு வங்கிக் கடன்களுக்கு வட்டிக் குறைப்பு.
* சுயநிதி சிறப்புத் தொகை கட்டி முன்னுரிமை பெற்ற விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம்.
* அமைப்பு சாரா தொழிலாளர்களுக்குத் தனித்தனி வாரியம்.
* ஒப்பந்தமுறை ஆசிரியர்கள், அரசு அலுவலர்களுக்கு காலமுறை ஊதியம்.
* அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராக ஆணை.
* காமராஜர் பிறந்த நாள் கல்வி வளர்ச்சி நாளாக அறிவிப்பு.
* திரைப்படத் துறைக்குத் தாராளச் சலுகைகள்.
* சமூக நீதி – இடஒதுக்கீடு தீர்மானம்.
* கண்ணகி சிலை மீண்டும் அமைப்பு.
* சிவாஜி சிலை திறப்பு.






✶ விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு மற்றும் நல உதவி சட்டம்.

✶ முதியோர், நலிந்த கலைஞர்கள், ஊனமுற்றோருக்கு உதவித் தொகை உயர்வு.

✶ எஸ்மா, டெஸ்மா சட்டங்கள் நீக்கம்.

✶ மதமாற்றத் தடைச் சட்டம் நீக்கம்.

✶ வணிகர்களுக்கு வரிச் சலுகைகள்.

✶ அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு வரி நீக்கம்.

✶ அரசு அலுவலர்களுக்கு அளப்பரிய சாதனைகள்.



தேர்தல் வாக்குறுதிகள் ஒரே கட்டமாக நிறைவேற்றப்படுவதும் – பல கட்டங்களில் நிறைவேற்றப்படுவதும்தான் நடைமுறை சாத்தியமானதாகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அனுபவரீதியாக அறிவார்கள்– அவற்றில் ஒன்றான வண்ணத் தொலைக்காட்சியில்லாத வீடுகளுக்கு அந்தத் தொலைக்காட்சிப் பெட்டி வழங்கிட ஒரு அனைத்துக் கட்சித் குழுவையே அமைத்து ஆலோசனைகளைப் பெற்று முதல் கட்டமாக வரும் செப்டம்பர் மாதம் 30 ஆயிரம் வீடுகளுக்கு அத்தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தருவதென்றும் – அடுத்த கட்டமாக தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கிட 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை தொடர்ந்து வழங்குவதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மற்றொரு வாக்குறுதியான தரிசு நில வாக்குறுதி பற்றி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஏடான " தீக்கதிர்'' 1.8.2006 அன்று எழுதியுள்ள தலையங்கத்தில்,

"தேர்தல் வாக்குறுதியாக தொடங்கி, பட்ஜெட் அறிவிப்பாக இரண்டு ஏக்கர் தரிசு நிலத் திட்டம் கவன ஈர்ப்பைப் பெற்றுள்ளது. நல்ல அம்சம் என்றும், இந்த அறிவிப்பை அமலாக்குவது அவ்வளவு சுலபமல்ல என்பது உண்மை எனினும் இத்திட்டம் நிறைவேற ஆக்கபூர்வமான யோசனைகள் கூறுவதே மாநில மக்கள் நலனில் அக்கறையுள்ளோரின் தலையாய பணியாகும் – என்றும்;



அ.தி.மு.க. அரசு முன்பு சமர்ப்பித்த பட்ஜெட் உரையில் ஐம்பது இலட்சம் ஏக்கர் தரிசு நிலம் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும்; இந்தியா முழுவதும் உள்ள விவசாய நிலப் பரப்பில் 3.5 சதவீதமே மேற்கு வங்கத்தில் உள்ளது ஆனால் இந்தியா முழுவதும் விநியோகிக்கப்பட்ட நிலத்தில் 20 சதவீதம் மேற்கு வங்கத்தில் விநியோகிக்கப்பட்டவை என்பது சாதாரணச் செய்தியல்ல – என்றும்; அதிலும் 10.63 இலட்சம் ஹெக்டேர் நிலங்களை 26 இலட்சத்து 46 ஆயிரம் குடும்பங்களுக்கு விநியோகித்துள்ளனர் – என்றும்; தரிசு நில விநியோகத் திட்டம் உரிய முறைப்படி செயல்படுத்தப்பட்டால் அதன் பலன் அடித்தட்டு மக்களுக்குக் கிடைக்கவே செய்யும்'' – என்றும்;

கருத்தமைந்த பகுதியைச் சுட்டுக் காட்டுவதோடு, தரிசு நிலம் பற்றிய தேர்தல் அறிக்கை வாக்குறுதியை இந்த அரசு நிறைவேற்றுவதற்கு தொடக்கம் செய்து விட்டது. என்பதற்கான புள்ளி விவரத்தையும் இந்த அவைக்கு வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அந்த விவரம் வருமாறு :–

தமிழகத்திலே உள்ள தரிசு நிலங்களை பண்படுத்தி நிலமற்ற ஏழை எளிய விவசாயக் குடும்பங்களுக்கு இரண்டு ஏக்கர் வீதம் அளிப்பது என்று தி.மு.கழகத் தேர்தல் அறிக்கையிலும், ஆளுநர் உரையிலும், நிதிநிலை அறிக்கையிலும் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, தற்போது தமிழகத்திலே உள்ள தரிசு நிலங்கள் எவ்வளவு என்பது குறித்து கணக்கெடுக்கும் பணி கடந்த ஒரு மாத காலமாக தமிழக அரசின் வருவாய்த் துறை மூலமாக மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் வட்டாட்சியர்கள், கிராம நிருவாக அலுவலர்கள் ஒத்துழைப்புடன் நடைபெற்று, முதற்கட்ட புள்ளி விவரங்கள் தற்போது அரசுக்கு வந்துள்ளன.

**“ஆக்கிரமிப்பு இல்லாத அரசுக்குச் சொந்தமான ஒரு இலட்சத்து 95 ஆயிரம் தரிசு நிலத்தினை மேம்படுத்தி நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு தலா இரண்டு ஏக்கர் வீதம் பிரித்து வழங்க நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுவிட்டன”**

ஆக்கிரமிப்பு இல்லாத ஒப்படை செய்யக் கூடிய அரசு புறம்போக்கு தரிசு நிலம் 95 ஆயிரம் ஏக்கர்.

சிறு–குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள அரசு புறம்போக்கு தரிசுநிலம் 67 ஆயிரம் ஏக்கர். 98 ஆயிரம் ஏழை விவசாயிகள் இந்த நிலத்தினை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர்.

சிறு –குறு விவசாயிகளுக்குச் சொந்தமான பட்டா தரிசு நிலம் ஏழு இலட்சம் ஏக்கர். இது 4 இலட்சத்து 25 ஆயிரம் ஏழை விவசாயிகளுக்குச் சொந்தமானதாகும்.

1. ஆக்கிரமிப்பு இல்லாத அரசுக்குச் சொந்தமான ஒரு இலட்சத்து 95 ஆயிரம் தரிசு நிலத்தினை மேம்படுத்தி நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு தலா இரண்டு ஏக்கர் வீதம் பிரித்து வழங்க நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுவிட்டன.

2. சிறு–குறு விவசாயிகளால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள அரசு புறம்போக்கு தரிசு நிலமான 67 ஆயிரம் ஏக்கரை பண்படுத்தி, அதனை ஆக்கிரமித்துள்ள 98 ஆயிரம் விவசாயிகளுக்கே மீண்டும் வழங்கப்பட இருக்கிறது.

3. சிறு–குறு விவசாயிகளுக்குச் சொந்தமான ஏழு இலட்சம் ஏக்கர் தரிசு பட்டா நிலத்தைப் பொறுத்த வரையில் அவர்களாகவே விரும்பிக் கேட்டுக் கொண்டால் அந்த நிலத்தினை விவசாயம் செய்யத்தக்க நிலமாகப் பண்படுத்தி அவர்களுக்கே திருப்பி வழங்கப்படும்.

எனவே இந்த வகையில் முதற்கட்டமாக தமிழகத்திலே உள்ள சுமார் ஐந்து இலட்சம் ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு தரிசு நிலத்தை மேம்படுத்தி இந்த அரசினால் வழங்கப்படும். அதற்கான தொடக்கப்பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்து அமைகிறேன். ✿

# அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை முறைப்படுத்த புதிய முறை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



தமிழகத்திலுள்ள அனைத்து நகரப் பகுதிகளிலும் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை முறைப்படுத்துதல் மற்றும் அந்தப் பகுதிகளில் சாலை வசதி, குடிநீர் வசதி, சாக்கடை வசதி போன்ற அடிப்படை வசதிகளை அளிப்போம் என்று தி.மு. கழகத் தேர்தல் அறிக்கையில் கொடுத்த வாக்குறுதி குறித்த அறிக்கை ஒன்றை, சட்டமன்றப் பேரவை விதி 110இன் கீழ் தங்கள் அனுமதியுடன் இம்மாமன்றத்திற்கு அளிக்கிறேன்.

2. தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களில் அனுமதி இன்றி அமைக்கப்பட்ட மனைப்பிரிவுகளில், மனைகளை வாங்கி வீடுகள்



தமிழ்நாடு சட்டமன்ற
விதி 110இன் கீழ்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி
மற்றும்
உள்ளாட்சித்துறை
அமைச்சர்
**திரு. மு.க.ஸ்டாலின்**
அவர்களின்
அறிக்கை
(25-7-2006)

கட்டியுள்ள பெருவாரியான பொதுமக்களிடமிருந்தும், நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்தும், இம்மனைகளை வரன்முறைப் படுத்துவதற்கு கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன. நான் பல்வேறு மாவட்டங்களுக்கு வளர்ச்சிப் பணிகளை ஆய்வு செய்யச் சென்ற போதும் இக்கோரிக்கை, மக்கள் பிரதிநிதிகளாலும், மக்களாலும் வலியுறுத்தப்பட்டது.

3. தற்போது தமிழகத்தில் உள்ள நகர்ப்புறங்களில் சுமார் 2,600 மனைப்பிரிவுகள் (LAYOUTS) அங்கீகரிக்கப்படாத நிலையில் உள்ளன. இதனால் ஏறக்குறைய சுமார் 90,000 மனைகள் அங்கீகரிக்கப்படாமல் உள்ளன. இதற்கு முன்பு நான்கு முறை அரசால் இந்த அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை வரன்முறைப் படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டு அரசாணைகளும் 1999, 2000, 2001 மற்றும் 2006ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. இதற்கான முதல் முயற்சியை 1999ஆம் ஆண்டிலேயே மேற்கொண்டதும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட கழக அரசுதான் என்பதையும் இங்கு சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.

4. கடந்த காலத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களின்படி, அபிவிருத்திக் கட்டணம், திறந்த வெளிக் கட்டணம் மற்றும் வரன்முறைக் கட்டணம் என்று மூன்றுவித கட்டணங்களை மனைகளுக்குச் சொந்தக்காரர்கள் செலுத்த வேண்டியிருந்தது. மேலும் திறந்தவெளிக் கட்டணம், இன்றைய வழிகாட்டி நில மதிப்பீட்டின் அடிப்படையிலும், அபிவிருத்திக்கட்டணம் இன்றைய கட்டுமான விலை நிலவரப்படியும் செலுத்த வேண்டியிருந்ததால், கூடுதலான தொகையை மக்கள் செலுத்த வேண்டியிருந்தது. எனவே, இந்தத் திட்டங்கள் யாவும் எதிர்பார்த்த அளவுக்குப் பயனளிக்கவில்லை. இதுவரை இத்திட்டங்களின் கீழ் 5 விழுக்காடு மனைகள் மட்டுமே வரன்முறைப் படுத்தப்பட்டுள்ளன.

5. இதுதவிர அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் வாழ்ந்து வருவோர்க்கு, உள்ளாட்சி அமைப்புகள் தங்களின் பொது நிதியிலிருந்து லாரிகளில் குடிநீர் விநியோகம் செய்கின்றன. இதனால் உள்ளாட்சி அமைப்புகளின் செலவினங்கள் அதிகரிக்கின்றன. அங்கீகாரம் பெறப்படாத மனைப்பிரிவுகளில் உள்ள மனைகள் விலை குறைவாக கிடைக்கிறது என்பதால் பெரும்பாலும் ஏழை – எளிய மக்களும், நடுத்தர வர்க்கத்தினரும் இவற்றை வாங்கியுள்ளனர். அங்கீகாரம் இல்லாத மனைப்பிரிவுகள் என்பதால் அவற்றிற்கும் கட்டட

*“அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை வரன் முறைப்படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டு அரசாணைகளும் 1999, 2000, 2001 மற்றும் 2006ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்டன. இதற்கான முதல் முயற்சியை 1999ஆம் ஆண்டிலேயே மேற்கொண்டதும், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட கழக அரசுதான் என்பதையும் இங்கு சுட்டிக்காட்டிட விரும்புகிறேன்.”*

வரைபட அனுமதி பெற முடியாது; கட்டடம் கட்ட நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளில் கடன் பெற முடியாது. மேலும் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களும் குடிநீர், சாலைகள், தெருவிளக்கு, வடிகால் போன்ற அடிப்படை வசதிகளையும் இப்பகுதிகளுக்குச் செய்து தர இயலாத நிலை தொடர்ந்து இருந்து வருகிறது.

6. விதிகளின்படி அங்கீகாரம் பெறாத மனைப் பிரிவுகளுக்கு பரிவு காட்டுதல், இதுபோன்ற தவறுகளை ஊக்குவிப்பதாக அமைந்துவிடும் என்ற கருத்து ஒரு புறம் இருப்பினும், இப்பகுதிகளில் வாழ்ந்து வருவோர்க்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளான குடிநீர், சாலை, தெருவிளக்கு மற்றும் சாக்கடை வசதிகள் போன்றவற்றை ஒரு பொறுப்புள்ள அரசு வெகுகாலம் செய்து தராமல் இருக்கவும் முடியாத ஒரு இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே உள்ளாட்சி அமைப்புகளுக்கு வர வேண்டிய வருமானத்தைக் கருத்தில் கொண்டும், ஏழை – எளிய மக்களுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும் என்ற இந்த அரசின் குறிக்கோளையும் கருத்தில் கொண்டு இந்தப் பிரச்சினைக்கு இம்முறை நிரந்தர தீர்வு காண எளிமைப்படுத்தப்பட்ட திட்டம் ஒன்றிற்கு, 20.7.2006 அன்று நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன்படி திறந்த வெளிக் கட்டணம், அபிவிருத்திக் கட்டணம் மற்றும் முறைப்படுத்துதல் கட்டணம் ஆகிய மூன்று வகையான கட்டணங்களை வசூலிப்பதற்கு பதிலாக பின்வருமாறு ஒரே ஒரு கட்டணத்தை மட்டுமே வசூலித்துக் கொண்டு 1.1.1980க்குப் பிறகு அங்கீகரிக்கப்படாது உள்ள மனைப் பிரிவுகளை முறைப்படுத்தலாம் என இவ்வரசு முடிவு செய்துள்ளது:

| | |
|---|---|
| அ. மாநகராட்சிப் பகுதிகள் (சென்னை பெருநகர் வளர்ச்சிப் பகுதி நீங்கலாக) | ஒரு சதுர அடிக்கு 5 ரூபாய் |
| ஆ. நகராட்சிப் பகுதிகள் | ஒரு சதுர அடிக்கு 2 ரூபாய் |
| இ. பேரூராட்சி பகுதிகள் | ஒரு சதுர அடிக்கு 1 ரூபாய் |

7. அத்துடன், 1.1.1980க்கு முன்னர் ஏற்படுத்தப்பட்ட அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகள் அனைத்தும் ஒரு சதுர அடிக்கு 1 ரூபாய் என்ற அடிப்படையில் கட்டணம் வசூலித்த பின்னர் முறைப்படுத்தப்படும். ஏனைய அடிப்படை நிபந்தனைகள் தொடரும்.

8. இத்திட்டம் 31.12.2006 வரை மட்டுமே நடைமுறையில் இருக்கும் என்பதுடன் இத்திட்டம் மனைப்பிரிவு அபிவிருத்தியாளர்களிடமிருந்து வீட்டுமனை வாங்கியவர்களுக்கு மட்டுமே பொருந்தும். மனைப் பகுதி அபிவிருத்தியாளர்கள் விற்காமல் வைத்திருக்கும் வீட்டுமனைப் பிரிவுகளுக்கு இந்தச் சலுகை பொருந்தாது.

9. இந்த புதிய திட்டத்தின் கீழ் கட்டணம் செலுத்தி வரன் முறைப்படுத்தப்பட்டவுடன், ஒப்புதல் பெறப்படாத கட்டட வரை படங்களுக்கு விதிகளின் படி ஏற்பளிப்பு வழங்கப்படும். மேலும் குடிநீர் வசதி, சாலைகள், தெரு விளக்கு மற்றும் சாக்கடை வசதி போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றை உடனடியாகச் செய்து தர நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்கள் நடவடிக்கை எடுக்கும்.

10. இனி வரும் காலங்களில் இது போன்ற அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் உருவாவதை தடுத்திட இது தொடர்பான விதிகளில் தக்க திருத்தங்கள் மேற்கொள்ளவும், இதுபோன்ற சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் ஈடுபட்டு ஏழை எளியோரை ஏமாற்ற முயற்சிப்போர் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்திடவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது.

11. இதனால் மாண்புமிகு முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் தலைமையிலான அரசு எடுத்துள்ள இந்த முடிவின் காரணமாக, தமிழ்நாட்டில் நீண்ட காலமாகத் தீராமல் இருந்து வரும் இப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படும் என்பதையும், இப்பகுதிகளில் வாழும் மக்கள் அடிப்படை வசதிகளை உடனடியாகப் பெறுவார்கள் என்பதையும், மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

12. இன்று இதற்கான விரிவான அரசாணை தனியே வெளியிடப்படுகிறது.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை (சென்னை பெருநகர்ப் பகுதி நீங்கலாக) முறைப்படுத்துதல் மற்றும் அப்பகுதிகளுக்கு குடிநீர், சாலை, தெருவிளக்கு, சாக்கடை போன்ற அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி 1) துறை

அரசாணை (நிலை) எண். 59 நாள். 25.07.2006.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண். 130, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 3.6.1999
2. அரசு கடித எண். 26331/நநி 1/99–10 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 8.1.2000
3. அரசாணை (நிலை) எண். 79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 16.6.2000
4. அரசாணை (நிலை) எண். 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 1.2.2001
5. அரசு கடித எண். 33105/நநி 1/ 2001 –3 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 20.3.2002
6. அரசாணை (நிலை) எண். 11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 19.1.2006

மீண்டும் படிக்கப்பட்டது:

7. நகராட்சி நிர்வாக ஆணையரது நேர்முகக் கடிதம் எண். 39153/2006/டிபி 3 நாள். 11.7.2006.

ஆணை :–

மேலே படிக்கப்பட்ட பல்வேறு அரசாணைகளின் வாயிலாக தமிழ்நாட்டில் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை (சென்னை பெருநகர்ப் பகுதியைத் தவிர) முறைப்படுத்தவும் அங்கு குடிநீர், சாலை, தெருவிளக்கு போன்ற அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கான சில நிபந்தனைகளை விதித்து ஆணைகள் வெளியிடப்பட்டன. இவ்வாணைகளின் சில முக்கிய அம்சங்கள் பின்வருமாறு :–

1. அரசாணை (நிலை) எண். 130, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள். 3.6.1999.

* குடியிருப்போர் சங்கம் அமைக்க வேண்டும்.
* சங்கம் மூலம் கூட்டாக விண்ணப்பிக்க வேண்டும்.

* 3 ஆண்டுகளுக்குள் 6 தவணைகளில் அபிவிருத்திக் கட்டணம் செலுத்த வேண்டும்; அபிவிருத்திக் கட்டணம் இருமடங்காக செலுத்த வேண்டும். முறைப்படுத்த இறுதி நாள். 30.11.1999.

* மனைப்பிரிவு 31.3.99–க்கு முன் அமைக்கப்பட்டு இருக்க வேண்டும்.

* 50 சதவீதம் மனைகள் விற்கப்பட்டிருக்க வேண்டும்.

* மனைப்பிரிவு சாலை குறைந்தது 20 அடி அகலம் இருக்க வேண்டும்.

* நகர் ஊரமைப்பு திட்டப்படி குடியிருப்பு மற்றும் கலப்பு குடியிருப்புப் பகுதியில் அமையும் மனைப்பிரிவுகளை மட்டுமே முறைப்படுத்த வேண்டும்.

* திறந்த வெளிக்கட்டணம் மனைப்பரப்பின் 10% பரப்பிற்கு இணையான மதிப்பிற்கு செலுத்த வேண்டும்.

II. <u>அரசாணை (நிலை) எண். 79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை</u>
<u>நாள். 16.6.2000</u>

* மனைப்பிரிவுகளில் உள்ள மொத்த சாலைகளில் 75% சாலைகள் 20' அகலத்திற்கு குறையாமல் இருக்க வேண்டும்.

* 20 அடிக்கு குறைவாக அகலம் உள்ள சாலைகளில் உள்ள மனைகளின் உரிமையாளர்கள், அந்த சாலையினை 20' அகலத்திற்கு விரிவாக்கத் தேவையான இடத்தினை அளிக்க முன்வர வேண்டும்.

* திறந்தவெளி கட்டணமாக மனையின் நிலப்பரப்பில் 10% பரப்பிற்குண்டான விலையில் 50 சதவீதம் தொகை செலுத்த வேண்டும். அபிவிருத்திக் கட்டணம் இருமடங்கிலிருந்து 1.5 மடங்காக குறைக்கப்பட்டது.

III. <u>அரசாணை (நிலை) எண். 16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை</u>
<u>நாள். 1.2.2001.</u>

* மனைப்பிரிவு 22.9.2000–க்கு முன்னர் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

* அபிவிருத்திக் கட்டணம் ஒரு மடங்காக குறைக்கப்பட்டது.

* முறைப்படுத்துதல் கட்டணம் செலுத்த வேண்டும்.

IV. <u>அரசாணை (நிலை) எண். 11, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை,</u>
<u>நாள். 19.1.2006.</u>

* அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவானது ஏற்கெனவே உள்ள பொது சாலை வழியாக <u>அல்லது</u> அங்கீகரிக்கப்பட்ட மனைப் பிரிவு சாலையிலிருந்து வழி பெறுவதாக இருத்தல் வேண்டும்.

* கல்குவாரி, கல் உடைக்கும் பகுதிகளைச் சுற்றியுள்ள குடியிருப்புப் பகுதியாக அபிவிருத்தி செய்ய தடை செய்யப்பட்ட பகுதி நீங்கலாகவும் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட கடற்கரைப் பகுதி, விமான நிலையப் பகுதி போன்றவற்றிற்கான கட்டுப்பாட்டு விதிகளுக்குட்பட்டதுமாக வீட்டு மனைகள் இருக்க வேண்டும்.

* அபிவிருத்திக் கட்டணம் ஒரே தவணையில் செலுத்த வேண்டும்.

* 22.9.2000க்கு முன்னர் பதிவு செய்யப்பட்ட மனைகளுக்கு மனை பதிவு செய்யப்பட்ட தேதிய வழிகாட்டி மதிப்பீட்டிலும் 22.9.2000 வரை பதிவு செய்யப்படாத மனைகளுக்கு மனை வழங்கப்பட்ட தேதிய வழிகாட்டி மதிப்பீட்டிலும் 50 சதவீதம் தொகை திறவிட கட்டணமாக வசூலிக்க வேண்டும்.

2. பார்வை 7ல் படிக்கப்பட்ட நேர்முகக் கடிதத்தில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் மேற்கூறப்பட்ட அரசாணைகள் வெளியிடப்பட்ட பின்பும் இத்திட்டத்திற்கு பொதுமக்களிடமிருந்து 5 சதவீதத்திற்கும் குறைவான வரவேற்பே இருந்தது எனவும் பொதுமக்களும், மக்கள் பிரதிநிதிகளும் மேலே படிக்கப்பட்ட அரசாணைகளில் குறிப்பிட்டுள்ள திறந்தவெளிக் கட்டணம் (Open Space Reservation Charges) மற்றும் அபிவிருத்திக் கட்டணம் (Development Charges) மிக அதிகமாக உள்ளதாக ஆட்சேபணை தெரிவித்துள்ளதாகவும் இவ்விரண்டு கட்டணத்தையும் ஒரே தவணையில் செலுத்துவதில் சிரமம் இருப்பதால் இதனை எளிமைப்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர் என்றும், அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளில் உள்ள பகுதிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகள் தங்களின் பொது நிதியிலிருந்து லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்வதால் உள்ளாட்சி அமைப்புகளின் செலவினங்கள் அதிகரிக்கிறது எனத் தெரிவித்துள்ளார்.

3. தற்போது தமிழகத்தில் உள்ள நகராட்சிகளில் சுமார் 2,600 அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் சுமார் 90,000 மனைகள் அங்கீகரிக்கப்படாமல் உள்ளன என்பதால் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டி உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் பொதுமக்களும் பல்வேறு கட்டங்களில் கலந்தாலோசிக்கப்பட்டனர். மேலும், நகராட்சி நிர்வாக ஆணையர், நகர் ஊரமைப்பு இயக்குநர் மற்றும் சிறப்பு சிற்றூராட்சி இயக்குநர் ஆகியோருடன் விவாதிக்கப்பட்டது. மேலும், 20.7.2006 அன்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இப்பொருள் விவாதிக்கப்பட்டது. இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட அரசாணைகள் வாயிலாக பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டும் இத்திட்டம் வெற்றி பெறவில்லை என்பதால் இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் முகத்தான் அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளை முறைப்படுத்துவதை எளிமைப்படுத்தும் வகையில், திறந்த வெளிக் கட்டணம் (Open Space Reservation Charge), அபிவிருத்திக் கட்டணம் (Development Charge), முறைப்படுத்துதல் கட்டணம் (Regularisation fee), ஆகிய மூன்று கட்டணங்களை தனித்தனியே வசூலிப்பதற்கு பதிலாக, சில நிபந்தனைகளுக்குட்பட்டு ஒரே ஒரு தொகையை வசூலித்துக் கொண்டு அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை முறைப்படுத்தலாம் என அப்போது முடிவெடுக்கப்பட்டது.

4. அதற்கிணங்க நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளில் (சென்னை பெருநகர்ப் பகுதி நீங்கலாக) உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறை செய்யலாமென அரசு ஆணையிடுகிறது :–

i) குடும்ப பாகப்பிரிவினைக்காக அல்லது வேறு நோக்கங்களுக்காக நிலத்தை 8 மனைகள் வரை உட்பிரிவினை செய்வது ஒரு மனைப்பிரிவாகக் கருதப்படமாட்டாது;

ii) இத்திட்டம் மனைப்பிரிவு அபிவிருத்தியாளர்களிடமிருந்து வீட்டு மனை வாங்கியவர்களுக்கு மட்டுமே பொருந்தும். மனைப்பிரிவு அபிவிருத்தியாளர்கள் விற்காமல் வைத்திருக்கும் வீட்டுமனைப் பிரிவுகளுக்கு இந்த சலுகை பொருந்தாது.;

iii) 1.1.1980–க்கு முன்னர், மாநகராட்சி, நகராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட அனைத்து அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளும், ஒரு சதுர அடிக்கு ரூ.1/– என்ற வீதம் கட்டணம் வசூலித்த பின் முறைப்படுத்தப்பட வேண்டும்.

iv) 1.1.1980 – க்குப் பின்னர், ஆனால் இவ்வாணை பிறப்பிக்கப்பட்ட நாளுக்கு முன்னர்வரை உருவாக்கப்பட்ட அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகளில் அமைந்துள்ள வீட்டு மனைகள் பின் வரும் நிபந்தனைகளுக்குட்பட்டு முறைப்படுத்தப்பட வேண்டும்.

அ) அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவு, ஒரு பொது சாலையை அல்லது முறைப்படுத்தப்பட்ட மனைப் பிரிவிலுள்ள ஒரு சாலையை ஒட்டியிருக்க வேண்டும். இவ்வாறு அணுகுசாலை இல்லாத மனைப் பிரிவுகளில் உள்ள உரிமையாளர்கள் அதற்கான அணுகுசாலையை அவர்களே சொந்தப் பொறுப்பில் ஏற்படுத்தித் தர வேண்டும்.;

ஆ) அங்கீகாரம் பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ள அங்கீகாரம் பெறாத மனைப் பிரிவில் அமைந்த வீட்டுமனை குறைந்தது 16 அடி (4.8 மீட்டர்) அகலமுள்ள சாலையை ஒட்டியிருக்க வேண்டும்.;

இ) வீட்டு மனைகள், கடற்கரையோர முறைப்படுத்து மண்டலம், சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் ஏனைய விதிமுறைகளுக்கு ஒத்திசைவாக இருக்க வேண்டும் என்பதுடன், அபாயகரமான மண்டலங்கள், கல்லுடைக்கும் இடங்கள், கல் வெட்டியெடுக்கும் இடங்கள் முதலியவற்றைச் சுற்றியுள்ள இடங்கள் போன்று, குடியிருப்பு மேம்பாட்டுக்குத் தடை விதிக்கப்பட்ட பகுதிகளுக்குள் அமைந்திருக்கக் கூடாது.;

ஈ) அபிவிருத்திக் கட்டணம், திறவெளிக் கட்டணம் மற்றும் முறைப்படுத்துவதற்கான கட்டணம் ஆகியவை தனித்தனியே வசூலிக்கப்படாமல், கீழ்க்கண்ட ஒரே ஒரு தொகையை ஒட்டுமொத்தமாக பெற்றுக் கொண்டு வரன்முறை செய்ய வேண்டும் :—

வரன் முறைப்படுத்துவதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணம்

| | | |
|---|---|---|
| i) | மாநகராட்சிப் பகுதிகள் (சென்னை பெருநகரப் பகுதி நீங்கலாக) | ரூ. 5/— ஒரு சதுர அடிக்கு |
| ii) | நகராட்சிப் பகுதிகள் | ரூ. 2 /— ஒரு சதுர அடிக்கு |
| iii) | பேரூராட்சி பகுதிகள் | ரூ. 1 /— ஒரு சதுர அடிக்கு |

v) மனை உரிமையாளர்களிடமிருந்து மேற்கண்ட தொகையினை வசூலித்துக்கொண்டு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஒப்புதல் பெறாத வீட்டுமனைப்பிரிவுகளுக்குப் பொதுவான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளைச் செய்து தர நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக குடிநீர் வசதியை உடனடியாகச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

vi) இந்தத் திட்டத்தின் கீழ் வரன்முறைப்படுத்தப்பட்ட இனங்களில் அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பொருந்தக்கூடிய வைப்பீட்டுத் தொகை மற்றும் இணைப்புக் கட்டணங்களை வசூலித்த பின்னர் தனிப்பட்ட மனைகளுக்கு குடிநீர் இணைப்பு போன்ற வசதிகளை நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் செய்து தர வேண்டும்.;

vii) இத்திட்டத்தின்படி வரன்முறைப்படுத்தப்பட்ட இனங்களில் இதுவரை ஒப்புதல் பெறாத கட்டட வரைபடங்களுக்கு விதிகளின் படி ஏற்பளிப்பு வழங்கப்பட வேண்டும்.;

viii) இதற்கு முந்தைய ஆணைகளின்படி தொகை செலுத்தி வரன்முறை செய்யப்பட்ட மனைப் பிரிவுகள் / வீட்டு மனைகளுக்கு இத்திட்டம் பொருந்தாது.

ix) இத்திட்டம் 31.12.2006 வரை மட்டுமே நடைமுறையில் இருக்கும்.

5. இவ்வரசாணையை அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் உடனடியாக செயல்படுத்த வேண்டும். மேலும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையை நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்ப வேண்டும். இத்திட்டத்தினை முனைப்புடன் செயல்படுத்த தக்க வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களுக்கு அனுப்பி, இருவார முன்னேற்ற அறிக்கையை நகராட்சி நிர்வாக ஆணையர் அரசுக்கு அனுப்ப வேண்டும்.

6. மேலும், எதிர்காலங்களில் இது போன்று அங்கீகரிக்கப்படாத மனைப் பிரிவுகள் உருவாவதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுத்து அதைக் கண்காணிக்குமாறும், சம்பந்தப்பட்ட விதிகளில் தேவையான திருத்தங்களைச் செய்ய கருத்துருக்களை அரசுக்கு விரைவில் அனுப்புமாறும் நகராட்சி நிர்வாக ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கே. தீனபந்து,
அரசு செயலாளர்.



*ஆட்சி கடந்திருக்கும் நாட்கள் நூறு*
*மக்களின் மதிப்பீடு நூற்றுக்கு நூறு*

# ஒரு வரலாற்றின் இனிய உதயம்

**மக்களின் துயர் துடைக்க**
**எடுத்த சபதம் முடித்து**
**தமிழக முதலமைச்சர்**

## கலைஞர் அரசு

**நிகழ்த்தியுள்ள வான் சாதனை**

# முதல் நூறு நாட்களில் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள்

* 1 கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டம்
* விவசாயிகளுக்கு 7,000 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன் தள்ளுபடி
* மாணவர்களுக்கு சத்துணவில் வாரம் இரண்டு முறை முட்டை
* 1 முதல் 10 வகுப்பு வரை தமிழ் கட்டாயக் கல்விப் பாடம்
* திருமண நிதியுதவித் திட்டம் மீண்டும் அமலாக்கம் . ரூ.15,000 ஆக உயர்வு
* கருவுற்ற தாய்மார்களுக்கு ரூ. 6,000 உதவி
* 17,185 ஆசிரியர்கள், 1,759 கல்லூரி மற்றும் பாலிடெக்னிக் விரிவுரையாளர்கள் புதிதாக நியமனம்
* ஒப்பந்த முறை ஆசிரியர்கள் நியமனம் அடியோடு ரத்து
* ரூ.574 கோடி செலவில் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டடங்கள் கட்ட ஆணை
* 13,000 மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் வேலை
* நெசவாளர்களுக்கும், சுயநிதி மூலம் மின்சாரம் பெற்ற விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம்
* அரசுப் பொறியியல் கல்லூரிகளில் கட்டணம் குறைப்பு
* அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு மீண்டும் தனித் தனி வாரியங்கள்
* விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் சமூகப் பாதுகாப்பு – நல உதவித் திட்டம்.
* வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் வண்ணம் புதிய தொழிற்சாலைகள்
* ரூ.135 கோடியில் மோட்டரோலா, ரூ.520 கோடியில் அப்பல்லோ ரேடியல் டயர்ஸ், ரூ.300 கோடி மதிப்பீட்டில் கபோரா இந்தியா மற்றும் ரூ.1,000 கோடி மதிப்பீட்டில் டெசால்வ் செமிகண்டக்டர் தொழிற்சாலைகள் தொடங்க ஒப்பந்தங்கள்
* முதியோர், விதவைகள், ஊனமுற்றோர், நலிந்த கலைஞர்களுக்கு உதவித் தொகை இரட்டிப்பாக உயர்வு
* திரைத்துறைக்குச் சலுகைகள்
* வரியில்லாத நிதிநிலை அறிக்கை
* கட்டாய மதமாற்றத் தடை சட்டம் ரத்து
* சிட்டா நூலுக்கு முழு வரி விலக்கு
* அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்கு விற்பனை வரி நீக்கம்

**மிக விரைவில் செயல்படுத்தப்படவிருக்கும் திட்டங்கள் :**

* இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்
* நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 2 ஏக்கர் நிலம்
* இளைஞர் சுயஉதவிக் குழுக்கள், தொழில்நுட்பப் பூங்காக்கள்
* வேலையில்லா இளைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவித் திட்டம்
* இலவச எரிவாயு அடுப்பு மற்றும் எரிவாயு இணைப்புக்கு வைப்புத் தொகை



# ஒரு இலட்சம் மகளிருக்கு புதிய சுயஉதவிக் குழுக்கள் மூலம் கடனுதவி

தமிழக சட்டமன்றத்தில்
கூட்டுறவுத் துறை மானியக்கோரிக்கை
மீதான விவாதத்திற்கு பதிலளித்து
ஆற்றிய உரையின் போது மாண்புமிகு
கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. **கோ.சி.மணி** அவர்கள்
அறிவித்த அறிவிப்புகள் (2.08.06)



1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இளைஞர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்று அறிவித்ததற்கேற்பவும் மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணியாளர் தேவையினை யொட்டியும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் காலியாக உள்ள 125 உதவி மேலாளர் பணியிடங்கள் நிரப்பப்படும்.

2. அதே போன்று மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் காலியாக உள்ள உதவியாளர் பணியிடங்களில் முதல் கட்டமாக 250 பேர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். இதில் 75 உதவியாளர் பணியிடங்கள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் இணைப்புச் சங்கங்களான பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் போன்றவற்றில் பணியாற்றும் தகுதியுள்ள பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

3. கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில் காலியாக உள்ள 2,200 விற்பனையாளர்கள் மற்றும் 300 கட்டுநர்கள் ஆக மொத்தம் 2,500 பணியிடங்கள் நிரப்பப்படும்.

4. கூட்டுறவுச் சங்கங்களில் பணியில் இருக்கும் போது இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

5. தமிழகத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் மூலமாக பல்வேறு கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்களும் மற்றும் தனி நபர்களும் பயிற்சி பெறும் வகையில் 2006–07 ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் 3,000 நபர்களுக்கு நகை மதிப்பீடும் மற்றும் அதன் நுட்பங்களும் குறித்தான பயிற்சி வழங்கப்படும்.

6. கடந்த ஆட்சியில் 199 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளை கலைப்பதற்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. அந்த அறிவிப்புகளை ரத்து செய்து இந்த

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைப் புத்துயிரூட்டி வாழ்திறனுள்ள சங்கங்களாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7. ஏற்கெனவே கலைக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் செயல் எல்லையில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்களின் விவசாயக் கடன் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அருகில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயக் கடன்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கலைக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் செயல் எல்லையில் தகுதி மற்றும் தேவையின் அடிப்படையில் புதிய சங்கங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்படும்.

8. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பால் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் கடன் தள்ளுபடி சலுகை பெற்ற விவசாயிகளுக்கு அவர்கள் வங்கிகளில் அடமானம் வைத்துள்ள சொத்துப் பத்திரங்கள் திருப்பி வழங்கப் பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைக்கேற்ப, 31.8.2006க்குள் அனைத்து பத்திரங்களும் திருப்பி வழங்கப்படும். மேற்சொன்னவாறு கடன் தள்ளுபடி சான்றிதழ் பெற்ற, கடன்தாரர்கள் அந்தந்தப் பகுதியிலுள்ள சார்பதிவாளர் அலுவலகத்தை அணுகி, சொத்தின் மீதுள்ள அடமானத்தை ரத்துசெய்து சொத்தின் மீதான வில்லங்கத்தை விலக்கிக் கொள்ளலாம்.

9. சிறுவணிகக் கடன் திட்டத்தின் கீழ் தற்போது மகளிர் வணிகக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இனி, இந்தச் சிறு வணிகக் கடன் திட்டம் சிறுவணிகம் செய்யும் ஆடவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் விரிவாக்கப்பட்டு வாராந்திரக் கடனாக ரூ.2,000 வழங்கப்படும்.

10. விவசாயிகளின் பயிர்க்கடன் மீதான வட்டிச் சுமையைக் குறைக்க நடப்பு குறுவைப் பருவத்திலிருந்து பயிர்க் கடனுக்கான வட்டி விகிதம் 9 சதவிகிதத்திலிருந்து 7 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. இந்த 2 சதவிகித வட்டிக்குறைப்பால் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் இழப்புத் தொகையை அரசே ஏற்று அத்தொகை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கும்.

11. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகள் பெற்ற விவசாயக் கடன் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில், பண்ணைசாராக் கடன் பெற்றுள்ளவர்களின் கடன் சுமையைக் குறைக்கும் வண்ணம், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பண்ணை சாராக் கடன் பெற்று தற்போது நிலுவையிலுள்ள கடன்களுக்கான வட்டி விகிதம் 18 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாகக் குறைக்கப்படும். தவணை தவறிய கடன்தாரர்களுக்கு 31.12.2006க்குள் தவணை தவறிய தொகையை திருப்பிச் செலுத்தும் பட்சத்தில் மேற்கண்ட வட்டிக்குறைப்புடன், அபராத வட்டி 3 சதவிகிதம் முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும்.

12. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் பெண் உறுப்பினர்களின் கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக கூடுதல் பங்கு மூலதனம் பெறுவதற்கு உறுப்பினர் ஒருவருக்கு ரூ.1,000 வீதம் ஐந்து ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் வட்டியில்லாக் கடனாக 500 மகளிருக்கு மொத்தம் ரூ.5 இலட்சம் நடப்பாண்டில் வழங்கப்படும்.

13. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் பெண் உறுப்பினர்களின் கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக கூடுதல் பங்கு மூலதனம் பெறுவதற்கு உறுப்பினர் ஒருவருக்கு ரூ.500 வீதம் ஐந்து ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் வட்டியில்லாக் கடனாக 2,000 மகளிருக்கு மொத்தம் ரூ.10 இலட்சம் நடப்பாண்டில் வழங்கப்படும்.

14. நகர மற்றும் புறநகர்ப் பகுதிகளிலுள்ள நகரக் கூட்டுறவு வங்கிகளின் பெண்

உறுப்பினர்களின் கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக, கூடுதல் பங்கு மூலதனம் பெறுவதற்கு உறுப்பினர் ஒருவருக்கு ரூ.500 வீதம் ஐந்து ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் வட்டியில்லாக் கடனாக 1,000 மகளிருக்கு மொத்தம் ரூ.5 இலட்சம் நடப்பாண்டில் வழங்கப்படும்.

15. கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக உள்ள உடல் ஊனமுற்ற பெண்களுக்கு அவர்களது கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக, நபர் ஒன்றுக்கு ரூ.500 வீதம் ஐந்து ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடனாக 1,000 பெண்களுக்கு மொத்தம் ரூ.5 இலட்சம் நடப்பாண்டில் வழங்கப்படும்.

16. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் விற்பனை நடவடிக்கைகளை மேம்படுத்த தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொள்ள சங்கம் ஒன்றுக்கு ரூ.4.30 இலட்சம் வீதம் அதாவது ரூ.2.10 இலட்சம் கடனாகவும், ரூ.2.20 இலட்சம் மானியமாகவும் இரண்டு சங்கங்களுக்கு வழங்கப்படும்.

17. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் செயல்படும் கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெய் விநியோகத்தை சீராக செயல்படுத்த நடப்பாண்டில் பழுதடைந்துள்ள மண்ணெண்ணெய் பேரல்களுக்குப் பதிலாக புதிய பேரல்கள் வாங்குவதற்கு ரூ.35 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

18. கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் சரியான எடையில் வழங்கப்படுவதை உறுதி செய்ய 2,000 நியாய விலைக் கடைகளுக்கு நவீன மின்னணு எடை இயந்திரம் வாங்குவதற்கு நடப்பாண்டில் ரூ.1 கோடி மானியமாக வழங்கப்படும். படிப்படியாக அனைத்து நியாய விலைக் கடைகளிலும் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

19. பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் நாணய சங்கங்களில் தனி நபர் கடன் உச்ச வரம்பு தற்போதுள்ள ரூபாய் இரண்டு இலட்சம் அளவிலிருந்து ரூபாய் மூன்று இலட்சமாக உயர்த்தப்படும்.

20. கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகளை வெளிப்படையாக பொதுமக்கள் தகவல் அறியும் வண்ணம், நடப்பாண்டில் தொடுதிரை தகவல் அறியும் கணினிகள் அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலும் அமைக்கப்படும்.

21. சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகள் ரூ.53 இலட்சம் செலவில் கணினி மயமாக்கப்படும்.

22. கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் கணினி மயமாக்கப்படுவதோடு கூட்டுறவுத் துறையும் படிப்படியாக கணினி மயமாக்கப்படும்.

23. கூட்டுறவுச் சங்கங்களின் ஆய்வு முறைகளை நெறிப்படுத்தி கடன் வழங்கல் மற்றும் நியாய விலைக் கடைகளின் ஆய்வினை தீவிரப்படுத்தும் வகையில் வாகன வசதி இல்லாமல் இருந்த 2 மண்டல இணைப் பதிவாளர்கள் மற்றும் 19 துணைப் பதிவாளர்களுக்கு முறையே இரண்டு அம்பாஸிடர் சீருந்து மற்றும் 19 ஈப்புகள் எண்பத்தியேழு இலட்சத்தி தொண்ணூற்றி ஐந்து ஆயிரம் ரூபாய் (ரூ.87.95 இலட்சம்) செலவில் வழங்கப்படும்.

24. 1996ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்களுக்கான தேர்தல் நடத்தப்பட்டது. அப்போதைய அரசு 2001ஆம் ஆண்டு மே திங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் நிருவாகக் குழுவினை ஒட்டு மொத்தமாக கலைத்து விட்டு, தனி அலுவலர்களை நியமித்தது. கூட்டுறவுச் சங்கங்களில் புதிய உறுப்பினர்களை தனி அலுவலர்கள் சேர்க்க வழிவகை செய்ய பிரிவு 89 (A) என்ற ஒரு புதிய பிரிவினை கூட்டுறவுச் சட்டத்தில் சேர்த்து, 2001 ஜூன் திங்களில் ஒரு அவசரச் சட்டத்தினை முந்தைய அரசு பிறப்பித்தது. இப்புதிய சட்டப் பிரிவினை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் சென்னை உயர் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழு புதிதாக சேர்க்கப்பட்ட மேற்படி

சட்டப்பிரிவு 89 (A) செல்லாது என தீர்ப்பளித்தது. இதனை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் முந்தைய அரசால் மேல்முறையீடு செய்யப்பட்டது. அந்த மேல் முறையீட்டினைத் திரும்பப் பெற்று உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பினையொட்டி தனி அலுவலர் நியமனத்திற்கு முன்பாக, அதாவது 25.5.2001க்கு முன்னர் உள்ள உறுப்பினர்களின் அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்திட இவ்வரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

25. நடப்பாண்டில் ஒரு இலட்சம் மகளிருக்கு புதிய சுயஉதவிக் குழுக்கள் மூலம் கூட்டுறவு வங்கிகளால் கடன் வழங்கப்படும்.

26. கூட்டுறவு வங்கிகளில் கடன் வழங்கப்படும் வழிமுறைகளை மேலும் எளிதாக்க உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும்.

27. கூட்டுறவு வங்கிகளில் பெறப்படும் பயிர்க்கடனுக்கான காப்பீட்டுத் திட்டத்தில் மாறுதல் செய்து அனைத்து பயிர்களுக்கும் காப்பீட்டை நீட்டிக்கும் வகையில் அரசுக்கு ஆலோசனை வழங்க வல்லுநர்கள் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்படும்.

28. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் ஏற்கெனவே செயல்படுத்தப்பட்ட 14 மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் படிப்படியாக செயல்படுத்தப் படும்.

29. தமிழக அரசு, இந்திய ஆட்சிப்பணி மற்றும் அகில இந்திய பணிகளுக்கான தேர்வுக்கு, ஏற்கெனவே நடத்தி வரும் பயிற்சித் திட்டங்களில் சேர்ந்து படிப்பதற்காக கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களின் வாரிசுகளுக்கு நிதியுதவி வழங்கப்படும்.

30. கடந்த ஆட்சியிலே நியாயவிலைக் கடைகளின் காலிச் சாக்குகள் விற்பனையில் ஒரு மாவட்டத்திற்கு ஒரே விலை என்று நிர்ணயம் செய்யப்பட்டிருந்தது. ஆனால், இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் இந்த முறையை மாற்றிவிட்டு சரக வாரியாக காலிக் கோணி விற்பனைக் குழு அமைத்து திறந்த முறை ஒப்பந்தப் புள்ளி மற்றும் பகிரங்க ஏல முறையில் சாக்குகள் விற்பனை செய்யப்பட வேண்டும் என்று ஆணையிட்டது. இப்புதிய முறையின் காரணமாக இன்றைய நிலவரப்படி கணக்கிட்டால் சாக்கு ஒன்றுக்கு ரூ.2 முதல் ரூ.4 வரை அதிகமாகக் கிடைப்பதால், ஆண்டொன்றுக்கு ரூ.5 கோடி முதல் ரூ.8 கோடி வரை கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூடுதலாக வருமானம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

* * *

## அறிவியல் அறிவோம்



**தொலைத்தொடர்புப் பணிகளுக்காக செயற்கைத் துணைக்கோள்கள் (Satellite) ஏவப்படுகின்றன. அதற்குப் பதிலாக இயற்கைக்கோளாகிய நிலாவை ஏன் பயன்படுத்தமுடிவதில்லை?**

தொலைத்தொடர்புச் செயற்கைக்கோள்கள் பொதுவாக மூன்று வகையில் செயல்படுகின்றன. பூமியில் அமைந்திருக்கும் தரை நிலையத்திலிருந்து சமிக்ஞைகளைப் பெறுதல், அவற்றைச் செயல்முறைப்படுத்துதல், பின்னர் அச்சமிக்ஞைகளை மற்றொரு செயற்கைக்கோளுக்கோ அல்லது பூமியில் அமைந்துள்ள வேறொரு தரை நிலையத்திற்கோ செலுத்துதல் ஆகியனவே அவை. செயற்கைக்கோளில் அமைந்துள்ள பல நுட்பமான மின்னணு அமைப்புகளால் மேற்சொன்ன மூன்று செயல்களும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அடுத்து எல்லா தொலைத்தொடர்புச் செயற்கைக் கோள்களும் குறிப்பிட்ட சுற்றுப்பாதையில் (Orbit) செலுத்தப்படுகின்றன. இதனால் ஒரு குறிப்பிட்ட துணைக்கோள் தரை நிலையத்தோடு எளிதில் தொடர்புகொள்ள முடியும். ஆனால், நிலாவைப் பொறுத்தவரை அத்தகைய வசதி எதுவும் அங்கில்லை. அடுத்து செயற்கைக்கோளுக்கும் தரைநிலையத்திற்கும் இடையே சமிக்ஞைப் பரிமாற்றத்திற்கு கால் வினாடிக்கும் குறைவான நேரமே ஆகும். ஆனால், நிலா மிக அதிக தொலைவில் இருப்பதால் தேவைப்படும் நேரம் அதிகமாவதுடன், பெறப்படும் சமிக்ஞைகள் தளர்ந்து போயும் மெலிந்தும் எத்தகைய ஆற்றலுமின்றி இருக்கும். எனவே, நிலவுக்கோளைத் தொலைத்தொடர்புப் பணிகட்குப் பயன்படுத்த இயலுவதில்லை.

# விவசாயிகளுக்கு காப்பீட்டுத் திட்டம்



தமிழக சட்டமன்றத்தில் வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு. **வீரபாண்டி எஸ்.ஆறுமுகம்** அவர்கள் ஆற்றிய உரையில் அறிவித்த புதிய அறிவிப்புகள் (3.8.2006)

### வேளாண் காப்பீட்டுத் திட்டம்

- கூட்டுறவு வங்கிகள் மற்றும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாக காப்பீட்டுத் திட்டத்தின் பலனைப் பெற்றிட முடியாமல் இருக்கும் விவசாயிகளுக்கும், குத்தகைதாரர்களுக்கும் அவர்களுக்கென தனியே காப்பீட்டுத் திட்டமொன்றை தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடைமுறைப்படுத்த இந்த அரசு முடிவெடுத்துள்ளது. இந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக ஐந்து இலட்சம் விவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் காப்பீட்டுத் திட்டம் இந்த 2006-2007ஆம் நிதியாண்டில் நடைமுறைப்படுத்தப்படும். காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், 50 சதவீதம் காப்பீடு மானியமாக விவசாயிகளுக்கும் குத்தகைதாரர்களுக்கும் ரூ. 8 கோடி வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கியுள்ளார்கள் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
- முதல் கட்டமாக 2006-2007ஆம் நிதியாண்டில் 10 வட்டங்களில் புதிய வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகங்கள் திறக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வழங்கி உள்ளார்கள் என்பதை இங்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
- தமிழ்நாட்டில் உள்ள 80 இலட்சம் விவசாயக் குடும்பங்களில் இதுவரை 2.76 இலட்சம் குடும்பங்களுக்கு மட்டுமே மண்வள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 77.24 இலட்சம் விவசாயக் குடும்பங்களுக்கும் மண்வள அட்டையை வழங்கிட அரசு முடிவெடுத்துள்ளது. அதற்காக மாநில அரசில் இருந்து இந்த ஆண்டு ரூ.10 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, மண்வள அட்டை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.
- வேர்வாடல் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள தென்னை மரங்களை வெட்டி அகற்றுவதற்காக ஒரு மரத்திற்கு ரூ. 250 வீதம் ரூ.317.21 இலட்சம் செலவில் நீலகிரி மற்றும் சென்னை மாவட்டங்கள் தவிர அனைத்து மாவட்டங்களிலும் திட்டம் தென்னை வளர்ச்சி வாரிய 100 சதம் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும். அவ்வாறு வெட்டி அகற்றப்படும் 1 இலட்சத்து 26ஆயிரத்து 885 மரங்களுக்கு பதில் புதிய கன்றுகளை நட்டால், அவை காய்ப்பதற்கு சுமார் 3 முதல் 5 ஆண்டுகள் ஆகும். இதனை ஈடு செய்யும் பொருட்டு ஒரு தென்னை மரத்துக்கு ரூ. 1050ஐ 2006-2007ஆம் ஆண்டு முதல் 3 ஆண்டுகளுக்கு ஈட்டுதொகையாக வழங்க திட்டம் தயாரிக்கப்பட்டு ரூ.13.33 கோடியை தென்னை வளர்ச்சி வாரியத்திடம் அனுமதி பெற்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக பரிந்துரைப்படி 223.53 இலட்சம் தென்னை மரங்களில் இப்பூச்சியைக் கட்டுப்படுத்த ரூ.53.65 கோடி செலவாகும். இதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டு பரிட்சார்த்தமாக சில மாவட்டங்களில் அமல்படுத்த, தென்னை வளர்ச்சி வாரியத்திற்கு அனுப்பி குறைந்தபட்ச 50 சதம் நிதி உதவி பெற்று 2006-2007ஆம் ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.
- தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ளபடி, மாநில அளவில் விவசாயக் கடன் உட்பட வேளாண்மையில் உள்ள பல பிரச்சினைகளை அவ்வப்போது ஆய்வு செய்து உடனடி நிவாரண

நடவடிக்கைகளை அரசுக்கு பரிந்துரை செய்யவும், விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருளுக்கு உரிய நியாயவிலை கிடைக்க விலை நிர்ணயம் செய்வதற்கும் விவசாய மேம்பாட்டுக் குழு 2006–2007ஆம் ஆண்டிலேயே அமைக்கப்படும்.

**பயோ டீசல்**

- தமிழக விவசாயிகளுக்கு 2006–2007ஆம் ஆண்டில் 20 ஆயிரம் எக்டேர் வீதம் 5 வருடத்திற்கு ஒரு இலட்சம் எக்டேர் நிலப்பரப்பில் காட்டாமணக்கு சாகுபடி செய்யவும், கன்றுகள் மானிய விலையில் வழங்கவும், சொட்டு நீர்ப்பாசன கருவிகள் 50 சதவிகிதம் மானிய விலையில் வழங்கவும், விவசாயிகள் உற்பத்தி செய்யும் விதைகளின் விலையை ஒப்பந்த பண்ணைய அடிப்படையில் நிர்ணயம் செய்யவும் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.
- தென்னிந்திய அளவிலான தோட்டக்கலை பயிர்களின் வளர்ச்சிக்காக மண்டல தேசிய தோட்டக்கலை வாரியம் ஒன்றை சென்னையில் 2006–2007ஆம் நிதி ஆண்டில் அமைக்க, மைய அரசுக்கு கருத்துரு அனுப்பி அனுமதி பெற நடவடிக்கை எடுக்கப்படும்.
- ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒன்று அல்லது இரண்டு முன்னோடி விவசாயிகள் தேர்வு செய்து பிறமாநிலங்களில் கடைபிடிக்கும் நவீன தொழில் நுட்பங்களில் பயிற்சியும் மற்றும் இஸ்ரேல், சீனா மற்றும் ஐரோப்பா போன்ற வெளிநாடுகளுக்கும் அழைத்துச் சென்று உயர் தொழில்நுட்ப முறைகளான ஒருங்கிணைந்த உர மேலாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை, இயற்கைப் பண்ணையம் மற்றும் பாதுகாக்கப்பட்ட சூழலில் பயிர் வளர்த்தல், சொட்டு நீர்ப்பாசனம், உணவு பதப்படுத்துதல், மதிப்பூட்டுதல், சொட்டு நீர் மூலம் உரமிடுதல் போன்ற பயிற்சிகள் வழங்க திட்டமிடப் பட்டுள்ளது. இவ்வாறு பயிற்சி பெற்ற முன்னோடி விவசாயிகள் தாங்கள் அறிந்த தொழில் நுட்பங்களை இதர விவசாயிகளுக்கு தெரிவித்து வேளாண் உற்பத்தியை தமிழகத்தில் பெருக்க, தேசிய தோட்டக்கலை இயக்க நிதியிலிருந்து 2006–2007ஆம் நிதி ஆண்டில் ரூ.25 இலட்சம் செலவில் முன்னோடி விவசாயிகளுக்கான பயிற்சி அளிக்கப்படும்.
- பூக்கள் உற்பத்தியை பெருக்க ஒரு மலரியல் ஆராய்ச்சி நிலையம் தேசிய தோட்டக்கலை இயக்கம் மூலம் ரூ.342 இலட்சம் செலவில் 2006–07 ஆம் ஆண்டில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை பகுதியில் தென்னைக்கென ஒரு வணிக வளாகம் ரூ.400 இலட்சம் (ரூ. 4 கோடி) செலவில் மாநில மற்றும் மத்திய அரசு தனியார் பங்கேற்பு நிதியுதவியுடன், 2006–07ஆம் நிதியாண்டிலேயே தொடங்க முடிவு செய்து இருக்கிறது.
- கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரில் தக்காளி பயிரிடும் விவசாயிகளின் நலனுக்கென குளிர்பதன கிடங்கு வசதியுடன் கூடிய வணிக வளாகம் மத்திய, மாநில அரசுகளின் உதவியுடன் மற்றும் தனியார் பங்கேற்புடன் ரூ. 2 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட உள்ளது.
- தேனி மாவட்டம், ஒடைப்பட்டியில் திராட்சையை தரம் பிரித்து பக்குவப்படுத்தி அட்டைப் பெட்டிகளில் அடைத்து ஏற்றுமதி செய்யும் வகையில் ரூ. 3.75 கோடி செலவில் குளிர்பதன கிடங்குடன் அமைக்க 2006 – 2007 ஆம் நிதி ஆண்டில் நடவடிக்கை எடுக்கப்படும்.
- கடலூர், தஞ்சாவூர், பெரம்பலூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகள் பயனடைய கடலூரில் முந்திரி ஏற்றுமதி மண்டலம் ரூ.10.36 கோடி மதிப்பீட்டில் 2006 – 2007 ஆம் நிதி ஆண்டில் அமைக்கப்பட உள்ளது. இதில் மாநில அரசின் பங்கு ரூ.150 இலட்சம் என்பதை இங்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.
- கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் மாங்கனிக்கென ரூ.2 கோடி செலவில் ஒரு வணிக வளாகம் 2006–2007ஆம் நிதி ஆண்டில் அமைக்கப்படும்.
- சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் கோயம்புத்தூர் மாவட்டம் பல்லடத்தில் ரூ. 2 கோடி செலவில் வெங்காயத்திற்கென ஒரு வணிக வளாகம் அமைக்கப்படும்.
- வேளாண் விற்பனைக் கூடங்களில் இயங்கி வரும் இலவச மருத்துவமனையில் பணியாற்றிவரும் பகுதி நேர மருத்துவர்களுக்கு தொகுப்பூதியம் ரூ. 3,500 லிருந்து ரூ. 4,500 ஆகவும் மருத்துவ உதவியாளருக்கு ரூ. 1,250லிருந்து ரூ. 1,750 ஆகவும் உயர்த்தி வழங்க அரசு தீர்மானித்துள்ளது.
- ஆராய்ச்சியின் மூலம் மிக நீண்ட இழை பருத்தி இரகங்களை உருவாக்க பெரம்பலூர் மாவட்டத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் புதியதாக ஆராய்ச்சி நிலையம் 25 எக்டேர் நிலப்பரப்பில் ரூ. 75 இலட்சம் செலவில் 2006–07 ஆம் ஆண்டில் தொடங்கப்படும்.

- திண்டுக்கல் மாவட்டத்தில் மக்காச்சோள ஆராய்ச்சி நிலையம் ரூ.75 இலட்சம் நிதி செலவில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் மூலம் 2006 –2007 ஆம் நிதியாண்டில் தொடங்கப்படும்.
- நமது முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் தேர்தலின்போது 5 தென் மாவட்டங்களில் வேளாண்மைப் பட்டய படிப்பு தொடங்கப்படும் என அறிவித்தார். 2006–07ஆம் ஆண்டு இரண்டு மாவட்டங்களில் மட்டும் பட்டயப் படிப்புகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலம் தொடங்கப்படும். இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.
- முந்தைய அ.தி.மு.க. ஆட்சியில் பணி நியமனம் செய்யப்பட்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தொகுப்பு ஊதியம் பெறும் 133 உதவி ஆசிரியர்களுக்கும் (8000–275–13000) காலமுறை ஊதியம் 1.6.2006 முதல் வழங்கப்படும்.
- தமிழ்நாட்டில், மைய அரசின் ரூ. 57.60 கோடி நிதியுதவியுடன் ஒரு தேசிய உயிரிய தொழில் நுட்பவியல் நிறுவனம் 2006–2007 ஆம் ஆண்டில் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.
- ரூ. 45.15 கோடியை மத்திய அரசிடமிருந்து பெற்று, தமிழகத்தில் தேசிய தாவர உயிரியல் நிறுவனம் 2006–07 ஆம் நிதி ஆண்டிலேயே தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- 1999–2000ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட பள்ளிகளில் வேளாண்மைக் கல்வியை அறிமுகப்படுத்தும் பாடத்திட்டம் 200 பள்ளிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த ஆட்சியில் செயல்படுத்தப் படாத இத்திட்டம் மீண்டும் விரிவுபடுத்தி அனைத்து பள்ளிகளிலும் செயல்படுத்தப் படும். இத்திட்டம் வரும் கல்வி ஆண்டில் கூடுதலாக 100 பள்ளிகளில் செயல்படுத்தப் படுவதோடு தொடர்ந்து ஐந்து ஆண்டுகளில் அனைத்து பள்ளிகளிலும் வேளாண்மையை ஒரு பாடமாக கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் புதிய பட்டப்படிப்பு மற்றும் பட்டயப்படிப்புகள்**

- தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் 2006–2007ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட பட்டப்படிப்பு மற்றும் பட்டயப் படிப்புகள் தொடங்கப்பட உள்ளது. 1. பி. டெக். (உயிர் தகவலியல்) 4 ஆண்டு பட்டப்படிப்பு, 40 மாணவர்கள், 2. முதுநிலைப் பட்டயப் படிப்பு (மூலதனம் மற்றும் வணிக பொருள் சந்தைகள்) 25 மாணவர்கள், 3. முதுநிலைப் பட்டயப் படிப்பு (அங்கக வேளாண்மை ) 25 மாணவர்கள். ஒரு பட்டப்படிப்புக்கும், இரண்டு பட்டயப் படிப்புக்கும் ஆகும் செலவினத்தை சுயநிதிக் கல்வித் திட்டத்தின் மூலம் பெறப்படும் தொகையிலிருந்தே செலவு செய்யப்படும்.

**தமிழகத்தில் புதிய சர்க்கரை ஆலைகள்**

- புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து, சொட்டு நீர்ப்பாசன முறை செயல்படுத்தி நீர்மேலாண்மை, உயிரியியல் ஆய்வு மையம், திசு வளர்ப்பு மையம் மற்றும் புதிய கரும்பு ரகங்கள் சாகுபடி செய்தல் போன்ற புதிய தொழில்நுட்பங்களை அவர்களது ஆலைப்பரப்பில் செயல்படுத்த வேண்டுமென்ற நிபந்தனையோடு, 2006 – 2007ஆம் ஆண்டில் புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க சாத்திய கூறுகள் உள்ள பகுதிகளில் புதியதாக சர்க்கரை ஆலைகள் தொடங்க அனுமதி வழங்கப்படும்.

**கரும்பு உற்பத்தியில் சொட்டு நீர்ப்பாசனம்**

- கரும்பு உற்பத்தி திறனில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது. சொட்டு நீர்ப்பாசனம் மூலம் 40 சதவீதம் பாசன நீர் சேமிக்கப்படுகிறது. ஆகையால், விவசாயிகள் பயன்பெறும் வகையில், சொட்டு நீர்ப்பாசனத்தை விவசாயிகள் மத்தியில் ஊக்குவிக்கும் வகையிலும் 2006–07ஆம் ஆண்டில் 15,000 எக்டேர் பரப்பில் ரூ. 84 கோடி திட்ட செலவில் சொட்டு நீர்ப்பாசன வயல்கள் அமைக்கப்பட உள்ளது. ஒரு எக்டேர் சொட்டு நீர்ப்பாசன வயல் அமைக்க ரூ. 56,000 செலவாகும். இச்செலவில் 50 சதவீத மானியமாக ரூ. 28,000க்கு மிகாமல் அரசு ஏற்றுக் கொள்ளும். மேலும், அனைத்து கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் 8.5 எக்டேரில் மாதிரி வயல்களை ஆலைக்கரும்பு பண்ணைகளில் அமைத்து கரும்பு விவசாயிகளுக்கு செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும்.
- விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று மீண்டும் மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலை மற்றும் பொதுத்துறை பாண்டியராஜபுரம் மதுரா சர்க்கரை ஆலை தொடங்குவது குறித்து அரசால் பரிசீலிக்கப்படும். ★

# தமிழ்நாட்டில் புதிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள்



தமிழக சட்டமன்றத்தில்
உயர் கல்வித்துறை
மானியக் கோரிக்கை மீதான
விவாதத்திற்கு பதிலளித்து
மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர்
டாக்டர் **க.பொன்முடி** அவர்கள் ஆற்றிய
உரையின் போது அறிவித்த அறிவிப்புகள்
(4.8.2006)

**நுழைவுத் தேர்வு ரத்து பற்றிய வல்லுநர் குழு**

தொழில் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கு நுழைவுத் தேர்வு ரத்து செய்வது குறித்து ஆலோசனை தெரிவிக்க அண்ணா பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் அனந்தகிருட்டிணன் தலைமையில் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் நுழைவுத் தேர்வு ரத்து பற்றி அரசு சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கும்.

**தனியார் சுயநிதிக் கல்லூரிகளுக்கான சட்டம்**

தொழில் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கை குறித்து விரிவான சட்டம் இந்த ஆண்டே கொண்டுவரப்படும்.

**பொதுப் பல்கலைக்கழகச் சட்டம்**

தமிழ்நாட்டில் 18 பல்கலைக்கழகங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பல்கலைக் கழகத்திற்கும் ஒரு சட்டம் நடைமுறையில் உள்ளது. இதனால் பல்வேறு நிருவாகச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. இதனைத் தவிர்த்திட அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் பொதுவான சட்டம் ஒன்று இந்தக் கல்வியாண்டு முடிவதற்குள்ளேயே கொண்டுவரப்படும்.

**அரசுக் கல்லூரிகளில் சுழற்சி முறை**

ஏழை, எளியோர் மிக அதிக அளவில் அரசுக் கல்லூரிகளில் சேர்கின்றனர். ஒரு சில கல்லூரிகளில் 50 இடங்களுக்கு 1,000 விண்ணப்பங்கள் வருகின்ற சூழ்நிலை. ஆகையால், அதிக மாணவர்களைச் சேர்க்கின்ற முகத்தான் அனைத்து அரசுக் கல்லூரிகளிலும், அடுத்த ஆண்டு முதல் சுழற்சி (Shift) முறை அறிமுகப்படுத்தப்படும். இந்த ஆண்டு கீழ்க்கண்ட 10 கல்லூரிகளில் முதற்கட்டமாக சுழற்சிமுறை அமல்படுத்தப்படும்.

1. காயிதேமில்லத் அரசு பெண்கள் கலைக்கல்லூரி, சென்னை.

2. அரசு ஆண்கள் கலைக்கல்லூரி, நந்தனம், சென்னை.

3. மாநிலக் கல்லூரி, சென்னை.

4. டாக்டர் அம்பேத்கர் அரசு கலைக் கல்லூரி, வியாசர்பாடி, சென்னை.

5. அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம்.

6. ராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருநெல்வேலி.

7. குந்தவை நாச்சியார் அரசு மகளிர் கலைக்கல்லூரி, தஞ்சாவூர்.

8. அரசு ஆண்கள் கலைக்கல்லூரி, கும்பகோணம்.

9. அரசினர் பெண்கள் கலைக்கல்லூரி, கும்பகோணம்.

10. அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி, செய்யாறு.

**அரசுக் கல்லூரிகளில் சுயநிதி பாடப்பிரிவுகளை பொதுப் பாடப்பிரிவுகளாக மாற்றல்**

ஏழை மாணவர்கள் அரசுக் கல்லூரிகளில் அனைத்துப் பாடப்பிரிவுகளிலும் சேர்ந்து படிப்பதற்கு வசதியாக, முந்தைய ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட, வசதி உள்ளவர்கள் மட்டுமே படித்துவந்த சுயநிதி பாடப்பிரிவுகள் அத்தனையையும் பொதுப் பாடப்பிரிவுகளாக மாற்றி அரசு உத்தரவிட்டுள்ளது. இப்பாடப்பிரிவுகளுக்கு கட்டணமும் வெகுவாகக் குறைக்கப்பட்டு மற்ற பொதுப்பாடப்பிரிவுகளுக்கு இணையாக மாற்றப்பட்டுள்ளது.

**தேசிய தர நிர்ணய மதிப்பீட்டுக் குழு**

தேசிய தர நிர்ணய மற்றும் மதிப்பீட்டுக் குழு, கலை அறிவியல் கல்லூரிகளின் கற்பித்தல் முறை, கட்டமைப்பு வசதிகள், ஆசிரியர்களுடைய தகுதி இவைகளின் அடிப்படையில் கல்லூரிகளுக்கு தர நிர்ணயம் செய்கிறது. தற்போது, தமிழ்நாட்டில் உள்ள 670 கல்லூரிகளில் 175 கல்லூரிகளுக்கு தர நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள கல்லூரிகளும் 2 ஆண்டுகளில் தர நிர்ணயம் பெறவேண்டும் என அரசு உத்தரவிடவுள்ளது.

**அரசுக் கல்லூரிகளில் நிரப்பப்படாத காலிப் பணியிடங்களை நிரப்புதல்**

மாநிலம் முழுவதும் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2,175 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. இதில் உடனடியாக 1,020 பணியிடம் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்ய உத்தரவு இடப்பட்டுள்ளது. மீதம் உள்ள ஆசிரியர் பணியிடங்களையும் உடனடியாக நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல, அரசு பொறியியல் கல்லூரிகளில் 1.5.2006இல் 180 ஆசிரியர் பணியிடங்கள் காலியாக இருந்தன. இவற்றில் 66 பணியிடங்கள் இந்த ஆட்சி வந்தவுடன் நிரப்பப்பட்டுவிட்டன. அதேபோல பாலிடெக்னிக் கல்லூரிகளில் 559 பணியிடங்கள் 1.5.2006இல் காலியாக இருந்தன. அதில் 123 பணியிடங்கள், 24.7.06 அன்று நிரப்பப்பட்டு விட்டன. மீதம் உள்ள பொறியியல் மற்றும் பாலிடெக்னிக் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர் காலிப் பணியிடங்கள் அனைத்தும் இன்னும் நான்கு மாதங்களில் நிரப்பப்படும்.

**கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய கட்டடங்கள்**

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய கட்டமைப்புகள் உருவாக்க வேண்டும் என்று இந்த அரசு முனைப்புடன் செயல்படுகிறது. இந்த

ஆண்டு ரூ.3.40 கோடியில் 80 கூடுதல் வகுப்பறைகள் கீழ்க்கண்ட 13 கல்லூரிகளில் கட்டப்படும்.

1) அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, விழுப்புரம் .................... 10

2) திரு.வி.க அரசு கலைக் கல்லூரி, திருவாரூர் .................... 8

3) ராணி அண்ணா அரசு மகளிர் கலைக் கல்லூரி, திருநெல்வேலி .................... 8

4) பெரியார் அரசு கலைக் கல்லூரி, கடலூர் ..... 8

5) அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை . 6

6) காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி, சென்னை –2. .................... 6

7) மாமன்னர் கல்லூரி, புதுக்கோட்டை .............. 5

8) அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, செய்யாறு .................... 5

9) மன்னை ராஜகோபால சுவாமி அரசு கலைக் கல்லூரி, மன்னார்குடி .................... 5

10) அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி, முசிறி .................... 5

11) அரசு ஆடவர் கலைக் கல்லூரி, (தன்னாட்சி) நந்தனம், சென்னை .................... 5

12) அரசினர் கலைக் கல்லூரி, தருமபுரி.............. 5

13) இரா. வே. அரசினர் கலைக் கல்லூரி, செங்கல்பட்டு .................... 4

### கட்டடங்களைப் புதுப்பித்தல்

ஒரத்தநாடு கல்வியியல் கல்லூரியின் பொன்விழா ஆண்டினையொட்டி இக்கல்லூரியில் பொன்விழா நினைவுக் கட்டடம் ரூ.50 இலட்சம் செலவில் உருவாக்கப்படும். சென்னை மாநிலக் கல்லூரியில் உள்ள கட்டடங்கள் ரூ.3.23 கோடியில் புதுப்பிக்கப்படும். சென்னை எழும்பூரில் உள்ள ஆசியாவிலேயே மிகப் பழமையான ஆவணக் காப்பகங்களில் ஒன்றான தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் கட்டடங்களைப் புதுப்பித்தல் மற்றும் பழமையான ஆவணங்களைப் பாதுகாக்க இந்த ஆண்டு ரூ. 7.71 கோடி செலவிடப்படும்.

### அண்ணா பல்கலைக்கழகம்

அண்ணா பல்கலைக்கழகம் உலகத் தரம் வாய்ந்த மாணவர்களை உருவாக்கி புகழ் மிக்கதாக விளங்குகிறது. ஆனால், இங்கு உள்கட்டமைப்பு வசதிகள் மிகக் குறைவாக உள்ளன. இதைக் கருத்தில் கொண்டு அண்ணா பல்கலைக்கழகத்தை ஒட்டியுள்ள நெடுஞ்சாலை ஆராய்ச்சி மையத்திற்கு சொந்தமான 34 ஏக்கர் நிலத்தில் ரூ.100 கோடி செலவில் மாணவர்கள் தங்கும் விடுதிகள், சோதனைக் கூடங்கள், ஆராய்ச்சி மையங்கள் போன்றவை உலகத்தரம் வாய்ந்த வசதிகளுடன் உருவாக்கப்படும்.

*ஒரத்தநாடு கல்வியியல் கல்லூரியின் பொன்விழா ஆண்டினையொட்டி இக்கல்லூரியில் பொன்விழா நினைவுக் கட்டடம் ரூ.50 இலட்சம் செலவில் உருவாக்கப்படும். சென்னை மாநிலக் கல்லூரியில் உள்ள கட்டடங்கள் ரூ.3.23 கோடியில் புதுப்பிக்கப்படும். சென்னை எழும்பூரில் உள்ள ஆசியாவிலேயே மிகப் பழமையான ஆவணக் காப்பகங்களில் ஒன்றான தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் கட்டடங்களைப் புதுப்பித்தல் மற்றும் பழமையான ஆவணங்களைப் பாதுகாக்க இந்த ஆண்டு ரூ. 7.71 கோடி செலவிடப்படும்.*

**சென்னை திறந்தநிலை பல்கலைக்கழகத்திற்கு புதிய வளாகம்**

வளர்ந்து வரும் திறந்தநிலைப் பல்கலைக் கழகத்திற்கு இதுகாறும் சொந்தமான கட்டடம் இல்லை. இதனை கருத்தில் கொண்டு சென்னை திறந்தநிலை பல்கலைக்கழகத்திற்கு ரூ.10 கோடியில் புதிய வளாகம் உருவாக்கப்படும். கட்டடப் பணிகள் இந்த ஆண்டே துவக்கப்படும்.

**"உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக் கழகத்திற்கு இதுகாறும் சொந்தமான கட்டடம் இல்லை. இப்பல்கலைக்கழகத்திற்கு, கேளம்பாக்கத்தில் 125 ஏக்கர் நிலத்தில் புதிய வளாகம் உருவாக்கப்படும்".**

உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக்கழகத்திற்குப் புதிய வளாகம்

உடற்கல்வி மற்றும் விளையாட்டுப் பல்கலைக் கழகத்திற்கு இதுகாறும் சொந்தமான கட்டடம் இல்லை. இப்பல்கலைக்கழகத்திற்கு, கேளம்பாக்கத்தில் 125 ஏக்கர் நிலத்தில் புதிய வளாகம் உருவாக்கப்படும்.

புதிய தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள்

தற்போது தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பொறியியல் கல்லூரிகளும் அண்ணா பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. எல்லா பொறியியல் கல்லூரிகளையும் ஒரே பல்கலைக் கழகத்தின் மூலம் நிருவாகம் செய்வது மிகுந்த சிக்கலை ஏற்படுத்துகிறது. இதனைக் கருத்தில் கொண்டு,திருச்சியில் அண்ணா பல்கலைக்கழகம், திருச்சி என்றும், கோயம்புத்தூரில் அண்ணா பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் என்றும், இரண்டு புதிய தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்கள் ஏற்படுத்தப்படும்.

**உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம்**

உயிரி தொழில்நுட்பம் (Bio-Technology), தகவல் தொழில்நுட்பத்திற்கு அடுத்தபடியாக வளர்ந்துவரும் ஒரு துறை ஆகும். உயிரி தொழில் நுட்பத்துறையில் நம்முடைய மாநிலம் சிறப்பிடம் பெற வேண்டும் என்ற அடிப்படையில் சென்னை தரமணியில் இருக்கிற அண்ணா பல்கலைக் கழகத்தினுடைய உயிரி தொழில்நுட்ப மையத்தில் உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம் உருவாக்கப்படும். மேலும், டைசல் உயிரி தொழில் நுட்பப் பூங்கா, சென்னை பல்கலைக்கழகம் மற்றும் அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய மூன்றும் இணைந்து உயிரி தொழில்நுட்பத் தொழில்களுக்குத் தேவையான ஆராய்ச்சியை இந்த மையத்தில் மேற்கொள்ளும். இந்த ஆண்டே இந்த மையம் செயல்படத் தொடங்கும்.

**உயிரி தொழில்நுட்பம் (Bio - Technology), தகவல் தொழில்நுட்பத்திற்கு அடுத்தபடியாக வளர்ந்துவரும் ஒரு துறை ஆகும். உயிரி தொழில் நுட்பத்துறையில் நம்முடைய மாநிலம் சிறப்பிடம் பெற வேண்டும் என்ற அடிப்படையில் சென்னை தரமணியில் இருக்கிற அண்ணா பல்கலைக் கழகத்தினுடைய உயிரி தொழில்நுட்ப மையத்தில் உயிரி தொழில்நுட்ப ஆராய்ச்சி மையம் உருவாக்கப்படும்.**

அதிக கட்டணம் வசூலிக்கும் கல்லூரிகள் மீது நடவடிக்கை

நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணத்தை விட அதிகமாக வசூலிக்கும் பொறியியல் கல்லூரிகளின் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். ❖

# நிலவரி தள்ளுபடி

**தமிழக சட்டமன்றத்தில் வருவாய்த்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து, மாண்புமிகு வருவாய் மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு. இ. பெரியசாமி அவர்கள் ஆற்றிய உரையின்போது அறிவித்த அறிவிப்புகள் - 8.8.2006**

1) <u>தலைமைச் செயலகம்</u>

* வருவாய்த் துறையில் கணினிகள், நிகரி இயந்திரங்கள், ஒளி நகலிகள் முதலிய வசதிகளை உருவாக்க ரூ. 6.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2) <u>வட்ட அலுவலகம் கட்டுதல்</u>

* நடப்பு நிதியாண்டில் திருக்குவளை, காட்பாடி, ஆலங்குளம், திருக்கழுக்குன்றம், ஸ்ரீரங்கம், கீழ்வேலூர் மற்றும் மணச்சநல்லூர் ஆகிய வட்டங்களில் வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்டப்படும். காட்டுமன்னார் கோவில் வட்டாட்சியர் அலுவலகம் புனரமைக்கப்படும். இந்தப் பணிகளை முடிப்பதற்கான மொத்த செலவு ரூ. 10.20 கோடி ஆகும்.

3) <u>வருவாய் அலுவலர்களுக்கு செல்லிடைத் தொலை பேசி (Mobile phone) வழங்குதல்</u>

* நடப்பு நிதியாண்டில் மாநிலத்திலுள்ள அனைத்து 73 வருவாய் கோட்டாட்சித் தலைவர்கள் மற்றும் அனைத்து 206 வருவாய் வட்டாட்சியர்களுக்கும் முதல் முறையாக மொபைல் போன்கள் வழங்கப்படும். இதற்காக ரூ. 19.53 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

* வருவாய் நிருவாகத் துறைக்கு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் முதலிய பணிகளுக்காக



ரூ. 8.67 இலட்சமும், உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ. 7.30 இலட்சமும், நாகப்பட்டினம், திருச்சிராப்பள்ளி, கரூர், திருநெல்வேலி, திருவள்ளூர், வேலூர் ஆகிய மாவட்டங்களில் EPABX (Electronic Automatic Private Branch Exchange) ஏற்பாட்டு முறையை நிறுவுவதற்காக ரூ. 25.01 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

4) <u>நிலவரி தள்ளுபடி</u>

* காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, சேலம், நாமக்கல், தருமபுரி, கிருஷ்ணகிரி, ஈரோடு, திருச்சி, பெரம்பலூர், கரூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், மதுரை, திண்டுக்கல், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய 22 மாவட்டங்களில் 2005–ஆம் ஆண்டில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் பயிர்கள் சேதமடைந்தது. மேற்படி வெள்ளப்பெருக்கால்

பாதிக்கப்பட்ட 4,92,722 ஹெக்டேர் பரப்பிற்கு உண்டான நிலவரித்தொகை ரூ.11,52,40,077 (பதினொன்று கோடியே ஐம்பத்தி இரண்டு இலட்சத்து நாற்பதாயிரத்து எழுபத்தேழு மட்டும்) 1,415 ஆம் பசலி (1.7.2005 முதல் 30.6.2006) ஆண்டுக்கான நிலவரி தள்ளுபடி செய்யப்படும்.

5) மாவட்டம், வட்டங்கள் பிரிப்பு

* மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தப் பேரவையில் 25.7.2006 அன்று பல்வேறு தரப்பினரின் கோரிக்கையை ஏற்று, ஏற்கெனவே கடந்த ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டு தொடர்ந்து வந்த ஆட்சியால் கைவிடப்பட்ட, அரியலூர் மாவட்டம் மீண்டும் உருவாக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். எனவே, இனி தமிழகத்தின் 31ஆவது மாவட்டமாக அரியலூர் மாவட்டம் ஏற்படுத்தப்படும். இதற்கான தொடர் நடவடிக்கைகள் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது போலவே திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டத்தை பிரித்து தண்டராம்பட்டை தலைமையிடமாகக் கொண்டு ஒரு வட்டமும், திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டத்தைப் பிரித்து ஆத்தூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு வட்டமும் அமைக்க அரசு முடிவு செய்துள்ளது. இது தொடர்பாக எல்லை வரையறை ஆணையத்தை அணுகி மாவட்டம், வட்டங்கள் பிரிப்பது குறித்து அனுமதி பெறப்பட்டு உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

6) வட்டாட்சியர்களுக்கு (துயர் துடைப்பு பணிகள்) ஈப்புகள் வழங்குதல்

* மக்கள் நலப் பணிகளை மேற்கொள்வதுடன், விவசாயத் தொழிலாளர் விவசாயிகள் சமூக பாதுகாப்பு (ம) நலத்திட்டத்தை நிறைவேற்றும் பணிக்காக தமிழ்நாட்டில் உள்ள 201 துயர் துடைப்பு வட்டாட்சியர்களில், முதற்கட்டமாக 67 வட்டாட்சியர்களுக்கு வாகனம் வழங்கப்படும். மேலும், தமிழக அரசின், ஒரு கிலோ அரிசி ரூ. 2/–க்கு வழங்கும் திட்டத்தை கண்காணிக்கவும், ரேஷன் அரிசி பதுக்கல் / கடத்தல் / கள்ளச்சந்தையில் விற்பனை செய்வதை தடுக்கவும் வட்ட வழங்கல் அலுவலர்களும் மேற்படி வாகனங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். ஓட்டுநர் உள்ளிட்ட 67 ஈப்புகள் ரூ. 2,83,23,701/–(ரூபாய் இரண்டு கோடியே எண்பத்தி மூன்று இலட்சத்து இருபத்தி மூன்றாயிரத்து எழுநூற்றி ஒன்று மட்டும்) செலவிலும் ரூ. 2,42,200/– (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரத்து இருநூறு மட்டும்) செலவில் எரிபொருளும் வழங்கப்படும்.

7) நில நிருவாகம்

* நில நிருவாகத் துறையில் கணினிகள், ஏனைய துணைப் பாகங்கள், வாங்குவது உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக ரூ. 7.55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

8) நில அளவை மற்றும் நிலவரித் திட்டம்

* வட்ட அலுவலகங்கள் மற்றும் தலைமை இடங்களில் அடிப்படைக் கட்டமைப்பு வசதியை உருவாக்குவதற்கு ரூ. 11 இலட்சமும், கணினி வரைபட மையத்தை வலுப்படுத்தும் திட்டத்திற்காக ரூ. 34.56 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. □



# விவசாயிகள் வசதிக்காக புதிதாக நெல் கொள்முதல் நிலையங்கள்

**தமிழக சட்டமன்றத்தில் உணவுத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தண்டராம்பட்டு எ.வ.வேலு அவர்கள் அறிவித்த அறிவிப்புகள்**

**(2.08.2006)**

1. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பொருட்கள் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்குகளிலிருந்து நியாய விலைக் கடைகளுக்கு முழுமையாக சென்றடைவதையும், அவை பொது மக்களுக்கு முறையாக வழங்கப் படுவதையும் கண்காணிப்பதற்கு ஒருங்கிணைந்த கணினிமயமாக்கும் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. தேசிய மின் ஆளுமை குழுமத் திட்டத்தின் கீழ் நிதியுதவி பெறப்பட்டு இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

2. மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்தவாறு அந்த்யோதயா அன்ன யோஜனா திட்டத்தில் தற்போது பயன் பெறுவோரின் பட்டியலில் தகுதியற்ற பயனாளிகள் உள்ளதாக பல புகார்கள் எழுந்துள்ளன. எனவே, இந்தப் பட்டியலை மறு ஆய்வு செய்து தகுதியான பயனாளிகள் மட்டுமே இத்திட்டத்தில் பயன்பெறத்தக்க வகையில் ஒரு குழு அமைத்து நடவடிக்கை எடுக்கப்படும்.

3. நியாய விலைக் கடைகளை தீவிரமாகக் கண்காணிப்பதற்கு, ஒவ்வொரு உள்வட்ட அளவிலும் (பிர்க்கா) வருவாய் ஆய்வாளரை அல்லது கூட்டுறவுத் துறை சார் பதிவாளரை



ஒருங்கிணைப்பாளராக கொண்ட குழு ஒன்று அமைக்கப்படும். இக்குழுவில் 2 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், 3 பொது நல ஆர்வலர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர் இடம் பெறுவர். இந்தக் குழு மாவட்டத்திலுள்ள 5 உள் வட்டங்களில் (பிர்க்கா) பரீட்சார்த்தமாக செய்து பின்பு படிப்படியாக அனைத்து வருவாய் உள் வட்டங்களிலும் அமைக்கப்படும்.

4. கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள வால்பாறை மலைப்பகுதிக்கு, நீலகிரி மாவட்ட மலைப் பகுதிக்கு வழங்கப்படும் அளவில் குடும்ப அட்டைதாரர்களுக்கு கூடுதல் மண்ணெண்ணெய் வழங்கப்படும்.

5. பொதுமக்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படுவதை சீரமைப்பதற்கும், கண்காணிப்பதற்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் 36 மண்ணெண்ணெய் நிலையங்களும் நடப்பாண்டில் கணினி மயமாக்கப்படும்.

6. வெளிமாநிலங்களுக்கு அரிசி மற்றும் மண்ணெண்ணெய் கடத்துவதைத் தடுப்பதற்கு கோயம்புத்தூர், கன்னியாகுமரி, திருநெல்வேலி, கிருஷ்ணகிரி மற்றும் வேலூர் மாவட்டங்களில் தலா ஒரு சிறப்புப்படை வீதம் 5 சிறப்புப் படைகள் அமைக்கப்படும். ஒவ்வொரு சிறப்புப் படையிலும் 1 துணை கண்காணிப்பாளர், 2 உதவி ஆய்வாளர்கள் மற்றும் 6 காவலர்களும் இடம் பெறுவர். இச்சிறப்புப்படை மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டில் இயங்கும்.

7. பொது விநியோகத்தினை சிறப்பாகக் கண்காணிப்பதற்கும், அரிசி மற்றும் மண்ணெண்ணெய் கடத்தலை கட்டுப் படுத்துவதற்கும், பறக்கும் படை வட்டாட்சியர் அனைவருக்கும் நடப்பாண்டில் வாகன வசதி செய்து தரப்படும்.

8. நியாய விலைக் கடைகளை கண்காணிக்கவும், பொது விநியோகத் திட்ட அரிசி மற்றும் மண்ணெண்ணெய் வெளிச் சந்தைக்கு கடத்தப்படுவதைத் தடுக்கவும், நுகர்பொருள் வழங்கல் துறையின் களப்பணியாளர்களுக்கு செல்லிட தொலைபேசி இணைப்புகள் ரூ.15 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

9. அரிசி மற்றும் உணவுப் பொருள்கள் கடத்துபவர்களைப் பற்றி துல்லியமாகத் தகவல் கொடுப்போருக்கு சன்மானம் வழங்கப்படும். இவர்களின் பெயர் மற்றும் முகவரி இரகசியமாக வைக்கப்படும். உணவு அமைச்சர் அலுவலகம், உணவுத் துறைச் செயலர், சிறப்பு ஆணையர், உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைவர் மற்றும் நிருவாக இயக்குநர், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள் ஆகியோருக்கு இத் தகவல்கள் தெரிவிக்கப்பட வேண்டும். சன்மானம் வழங்குவதற்கான இரகசிய நிதி, மாவட்ட ஆட்சித் தலைவர்களால் நிருவகிக்கப்படும்.

10. குடிமைப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறையில் எல்லையோர மாவட்டங்களில், மாவட்டம் ஒன்றிற்கு ஒரு பிரிவு வீதம் நான்கு பிரிவுகள் கூடுதலாக அமைக்கப்படும்.

11. போலி குடும்ப அட்டைகளை வைத்திருக்கும் ஒரு சில நியாய விலைக் கடை விற்பனையாளர்கள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் அவற்றை திருப்பி ஒப்படைக்கவில்லையென்றால், அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கை செய்யப்படுவார்கள். காலக்கெடு முடிந்த பின்னர், அவர்களிடம் போலி அட்டைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் பணி நீக்கம் செய்யப்படுவதோடு குற்ற நடவடிக்கையும் தொடரப்படும். நியாய விலைக் கடைகளில் முறைகேடுகள் செய்யும் விற்பனையாளர்கள் மீது தயவு தாட்சண்யமின்றி இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.

12. நெல் கொள்முதல், நிலையங்களில் விவசாயிகள் நெல்லை கொண்டு வந்து விற்பனை செய்ய ஏதுவாக கிடங்கு, களம், அலுவலகம் ஆகிய வசதிகளுடன் 2001–2002ஆம் ஆண்டு வரை கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டு வந்தன. ஆனால், முந்தைய ஆட்சியில் 2002–2003ஆம் ஆண்டு முதல் இப்பணி

நிறுத்தப்பட்டு விட்டது. விவசாயிகளின் வசதிக்காக இப்பணியை தொடர்ந்து செயல்படுத்தவும் நடப்பு நிதியாண்டில் 10 கொள்முதல் நிலையங்கள் கட்டவும் அரசு முடிவு செய்துள்ளது.

13. ஆண்டுதோறும் நெல் கொள்முதல் செய்யும்பொழுது கொள்முதல் நிலையங்களில் தவறுகள் நடைபெறுவதாகவும், விவசாயிகள் துன்புறுத்தப்படுவதாகவும் புகார்கள் எழுவதுண்டு. இத்தகைய புகார்கள் இந்தாண்டு எழாத வண்ணம், நெல் கொள்முதல் பணி குறைபாடின்றி நடைபெற ஒவ்வொரு தாலுக்கா அளவிலும் சட்டமன்ற அரசியல் கட்சியின் பிரதிநிதிகள் மற்றும் உயர் அலுவலர்கள் அடங்கிய குழுவை அமைத்து, கொள்முதலில் ஏற்படும் குறைபாடுகளை அவ்வப்போது களைய நடவடிக்கை எடுக்கப்படும். இந்த கண்காணிப்புக் குழுக்களை மாவட்ட ஆட்சியர்கள் நியமிப்பார்கள்.

14. தமிழ்நாட்டில் தற்பொழுது 209 வட்டார செயல்முறை கிடங்குகள் மூலமாக பொது விநியோகத் திட்டத்திற்கான அத்தியாவசியப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வழங்கி வருகிறது. இதில் 37 கிடங்குகள் தனியாருக்கு சொந்தமான வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இந்தக் கிடங்குகளில் போதிய வசதிகள் இல்லாததாலும், அறிவியல் நுட்பப்படி அமைக்கப்படாததாலும் படிப்படியாக இந்த இடங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக புதிய கிடங்குகள் அமைக்கப்படும். இந்த ஆண்டு பவானி, பேரையூர், வால்பாறை மற்றும் ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் வட்டார கிடங்குகள் ரூ.125 இலட்சம் செலவில் கட்டப்படும்.

15. நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் எடை குறைவை தவிர்ப்பதற்கு மின்னணு எடை இயந்திரங்களே இனி முழுமையாகப் பயன்படுத்தப்படும். இதனால் கிடங்குகளில் எடை சீரமைப்பு பணி துரிதப்படுத்தப்படும்.

16. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் 1,149 அமுதம் நியாய விலைக்கடைகள் நடத்தப்பட்டு வருகின்றன. அவைகளில், 824 கடைகளில் மின்னணு எடை இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ளன. அனைத்து கடைகளிலும் மின்னணு எடை இயந்திரங்கள் நிறுவும் நோக்கத்துடன் மீதமுள்ள 325 கடைகளிலும் ரூ.16.25 இலட்சம் செலவில் நடப்பாண்டில் மின்னணு எடை இயந்திரங்கள் நிறுவப்படும்.

17. நடப்பாண்டில் தமிழ்நாடு சேமிப்பு நிறுவனம், 6,250 மெ.டன். கொள்ளளவு கொண்ட கிடங்கு ஒன்றினை தருமபுரியிலும், 3,400 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கினை பல்லடத்திலும், 2,000 மெ.டன் கொள்ளளவு கொண்ட கிடங்கினை அவிநாசியிலும் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

18. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் பொது மக்களுக்கு ஏற்படும் எந்தவொரு குறைபாட்டினையும் உணவு அமைச்சருக்கும், அவருடைய அலுவலகத்திற்கும் தொலைபேசி அல்லது தொலைநகல் மூலம் தெரிவிப்பதற்கு, தொடர்பு தொலைபேசி எண்கள் பத்திரிகைகள் மற்றும் தொலைக்காட்சி மூலமாக விளம்பரப்படுத்தப்படும். குடும்ப அட்டைகள் பெறுவதில் ஏற்படும் சிரமங்கள், எடை குறைவு, பொருட்கள் வழங்கப்படாதது, கூடுதல் விலையில் பொருட்களை விற்பது, கடைகளை உரிய நேரத்தில் திறக்காமல் இருப்பது, இதர பொருட்களை வாங்குவதற்கு நிர்பந்திப்பது போன்ற குறைகளைக் குறித்த தகவல்களை இந்தத் தொலைபேசி எண்களுக்குத் தெரிவிக்கலாம். தகவல்கள் பெற்ற 48 மணி நேரத்திற்குள் இக்குறைகளைக் களைய நடவடிக்கை எடுக்கப்படும்.

19. பொதுமக்களின் வசதியை கருத்தில் கொண்டு பகுதி நேர கடைகள் திறக்க இரு நியாய விலைக் கடைகளுக்கு இடையே உள்ள தூரம் குறைந்தது 2 கிலோ மீட்டர் என்பதை 1 1/2 கிலோ மீட்டராக குறைத்தும், ஒரு நியாய விலைக் கடைக்கு குறைந்தபட்சம் 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் என்பதை தளர்த்தி 150 குடும்ப அட்டைகள் என்றும் வழிமுறைகள் மாற்றி அமைக்கப்படும். இதனால், பல குக்கிராமங்களில் உள்ள ஏழை மக்கள் அப்பகுதியிலேயே பொது விநியோகத் திட்டத்தில் பொருட்களைப் பெற இயலும்.



# கல்வி வளர்ச்சிக்கு புதிய அறிவிப்புகள்

தமிழக சட்டமன்றத்தில்,
கல்வித்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து,
மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர்
திரு. **தங்கம் தென்னரசு** அவர்கள் அறிவித்த அறிவிப்புகள்
(4.8.2006)

**கூடுதலாக புதிய பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்துதல்**

2006–07 ஆம் கல்வியாண்டில் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 8 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கல்வி கற்றுக் கொடுக்க கூடுதலாக 7,979 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள்.

மேலும், வேலையில்லா பட்டதாரி ஆசிரியர்களின் நீண்ட நாள் கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பரிவுடன் ஏற்று, இப்பணியிடங்கள் அனைத்தும் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு மூப்பு அடிப்படையில் தகுதியுள்ள ஆசிரியர்களைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும் என்று ஆணையிட்டுள்ளார்கள். இவ்வாசிரியர்கள் உரிய புத்தாக்கப் பயிற்சி பெற்று பணியிடங்களில் அமர்த்தப்படுவார்கள்.



மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2006 - 07 ஆம் கல்வியாண்டில் இந்த 525 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் பட்டதாரி தமிழாசிரியர் பணியிடங்கள் வழங்கிட அனுமதி அளித்துள்ளார்கள்.

### பட்டதாரி தமிழாசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்துதல்

கடந்த சில ஆண்டுகளில் தொடங்கப்பட்ட 525 உயர்நிலைப் பள்ளிகளுக்கு பட்டதாரி தமிழாசிரியர் பணியிடங்கள் இதுவரை வழங்கப்படவில்லை. இது ஒரு பெரும் குறையாக உணரப்பட்டது.

எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் 2006 – 07ஆம் கல்வியாண்டில் இந்த 525 உயர்நிலைப் பள்ளிகளுக்கும் பட்டதாரி தமிழாசிரியர் பணியிடங்கள் வழங்கிட அனுமதி அளித்துள்ளார்கள்.

இப்பணியிடங்கள் கூடுதலாக உருவாக்கப்படும் 7,979 பணியிடங்களில் அடங்கும்.

### 500 வட்டார வளமைய ஆசிரியர்கள் பள்ளிகளுக்கு மாற்றம் செய்தல்

அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் பணிபுரியும் வட்டார வளமைய ஆசிரியர்களின் கோரிக்கையினை இவ்வரசு ஏற்று, நடப்பு கல்வியாண்டில் 500 வட்டார வளமைய ஆசிரியர்களின் பணிமூப்பு அடிப்படையில் தற்பொழுது அரசு உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் மாற்றம் செய்ய ஆணையிட உள்ளது.

### உதவி தொடக்க கல்வி அலுவலர்களின் பணி மாறுதல்

தொடக்க கல்வித் துறையில் பணிபுரியும் உதவி தொடக்க கல்வி அலுவலர்கள், இதுவரை அவர்கள் கடைசியாக நடுநிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களாகப் பணிபுரிந்த கல்வி மாவட்டத்தில் பணிபுரிய அனுமதிக்கவில்லை.

இவர்களின் கோரிக்கையை ஏற்று, அவர்கள் கடைசியாகப் பணிபுரிந்த ஒன்றியத்தை தவிர மற்ற ஒன்றியங்களில் பணிபுரிய அனுமதிக்கப்படுவார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

### மேல்நிலைப் பள்ளி தொழிற்கல்வி ஆசிரியர்கள் நலன்

தற்பொழுது அரசு மற்றும் நிதி உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகளில், பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகம் / நிருவாகத்தால் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் பகுதி நேர தொழிற்கல்வி ஆசிரியர்களாக நியமனம் பெற்று பணிபுரிபவர்களில், முழு கல்வித் தகுதி பெற்ற 213 தொழிற்கல்வி ஆசிரியர்கள், அரசால் அனுமதி வழங்கப்பட்டு காலியாக உள்ள தொழிற்கல்வி ஆசிரியர் பணியிடங்களில் முறையான ஊதிய விகிதத்தில் முன்னுரிமைப்படி நியமனம் செய்யப்பட மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை வழங்கி உள்ளார்கள்.

### கணினி ஆசிரியர்கள் நலன்

அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தற்பொழுது தொகுப்பூதியத்தில் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் கணினி ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள்.

இவ்வாசிரியர்களின் கோரிக்கையை அரசு ஏற்று, முழு கல்வித் தகுதியோடு பணிபுரியும் கணினி ஆசிரியர்களை போட்டித் தேர்வின் மூலம் முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்ய பரிவுடன் பரிசீலனை செய்ய முடிவெடுத்துள்ளது.

### அனைத்து பள்ளிகளுக்கும் கட்டமைப்பு வசதிகளை அமைத்து கொடுத்தல்

மாநிலத்தில் செயல்படும் அனைத்து அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் அனைத்திற்கும் அடுத்த மூன்று ஆண்டுகளில் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள், ஆய்வுக்கூடம், அறிவியல் உபகரணங்கள், மாணவர் இருக்கைவசதி, கழிப்பறை

வசதி, குடிநீர் வசதி போன்ற அனைத்து அடிப்படை வசதிகளையும் நபார்டு வங்கி உதவி, அனைவருக்கும் கல்வித் திட்டம், சட்டமன்ற, நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி ஆகியவற்றைக் கொண்டு இவ்வரசு செய்து தரும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கப் படுகிறது.

**நபார்டு வங்கி உதவியுடன் மேற்கொள்ளும் பணி**

இதுவரை 5 கட்டங்களில் 1,154 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 413.87 கோடி மதிப்பில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வுக்கூடம், கழிப்பறை மற்றும் குடிநீர் வசதி அமைத்துத் தரப்பட்டுள்ளது.

நடப்பு கல்வியாண்டில் 6, 7 கட்டங்களில், 429 உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ. 293 கோடி மதிப்பில் இவ்வசதிகள் செய்து தரப்படும்.

**நபார்டு வங்கியின் 8ஆவது கட்டத்திற்கான பணிகள்**

இதுவரை நபார்டு வங்கி அனுமதிக்கப்படாத அறிவியல் உபகரணம், மாணவர்களுக்கான பெஞ்சு, டெஸ்க் இருக்கைகள் மற்றும் சுற்றுச்சுவர் போன்ற அடிப்படை வசதிகளையும் 8ஆவது கட்டத்திலிருந்து பள்ளிகளுக்கு அளித்திட நபார்டு வங்கி முன்வந்துள்ளதால், 8ஆவது கட்டத்தில் தெரிவு செய்யப்படும் அனைத்து பள்ளிகளுக்கும் எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க அரசு முடிவெடுத்துள்ளது.

முதல் 7 கட்டத்தில் தெரிவு செய்யப்பட்டுள்ள 1,583 பள்ளிகளுக்கும் கூடுதலாக அறிவியல் உபகரணங்கள் மற்றும் மாணவர்களுக்கான இருக்கை வசதிகள் செய்து தரப்படும்.

**அனைவருக்கும் கல்வித் திட்டம்**

அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் கீழ் 2006–07 ஆம் ஆண்டில் 1,075 பள்ளி தொகுப்பு கருத்தாய்வு மையங்கள் நடைபெற கட்டடங்கள் ரூ. 21. 75 கோடி மதிப்பில் கட்டப்படும்.

மேலும், 14, 354 கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் ரூ. 281. 28 கோடி மதிப்பில் நடப்பு கல்வி ஆண்டில் கட்டப்படும்.

**207 மூன்றாம் நிலை நூலகர் பணியிடம் ஏற்படுத்துதல்**

12ஆம் வகுப்பு மற்றும் CLIS தகுதிப் பெற்று மாதம் ரூ.1,500 தொகுப்பூதியத்தில் 207 பேர், பகுதிநேர நூலகர்கள் மற்றும் ஊர்ப்புற நூலகர்களாக 5 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரிந்து வருகிறார்கள்.

இவர்களின் கோரிக்கையை ஏற்று பணிமூப்பு அடிப்படையில் இவர்களை மூன்றாம் நிலை நூலகர்களாக முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்ய மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள்.

**புதிய உயர்நிலைப் பள்ளிகள்**

2006–2007 ஆம் கல்வி ஆண்டில் இவ்வரசு ஏற்கெனவே 100 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி ஆணை பிறப்பித்துள்ளது.

பொதுமக்களின் வேண்டுகோளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்று இக்கல்வி ஆண்டில் கூடுதலாக மேலும் 20 நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி ஆணை வழங்கியுள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**புதிய மேல்நிலைப் பள்ளிகள்**

2006–2007 ஆம் ஆண்டில் இவ்வரசு பொறுப்பேற்றவுடன் 100 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி ஆணை வழங்கியுள்ளது.

தற்போது பொதுமக்களின் வேண்டுகோளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏற்று நடப்பு கல்வி ஆண்டிலேயே கூடுதலாக மேலும் 20 அரசு உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தி ஆணை வழங்கியுள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

உயர்கல்வி – அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் – சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளை முறையான பாடப்பிரிவுகளாக மாற்றுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

உயர்கல்வித் (ஜி1)துறை

அரசாணை (நிலை)எண்.230 நாள் 20.7.2006

படிக்கப்பட்டவை:

கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித எண்.7152/C1/2006/நாள் 12.6.2006

*******************

ஆணை:

அரசுக் கல்லூரிகளில் சுயநிதிஅடிப்படையில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளுக்கான கட்டணம் மிகவும் அதிகமாக இருப்பதால் ஏழை எளிய மாணவர்கள் அக்கட்டணத்தை செலுத்தி பாடப் பிரிவுகளில் படிப்பது மிகவும் கடினமாக இருப்பதாகவும், எனவே, அப்பாடப்பிரிவுகளை அரசு சார்பில் நடத்தப்படும் முறையான பாடப்பிரிவுகளாக மாற்றும்படி அரசுக்கு கோரிக்கைகள் வரப்பெற்றன. இதனடிப்படையில் கல்லூரிக் கல்வி இயக்குநரிடம் கருத்துரு கோரப்பட்டது.

2. 51 அரசு கலைக் கல்லூரிகளில் வேலைவாய்ப்பு அதிகமுள்ள சுயநிதி பாடப்பிரிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன என்றும், அந்தந்த கல்லூரி முதல்வர்களால் ரூ.4,000/– சம்பளத்தில் கௌரவ விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர் என்றும், இப்பாடப்பிரிவுகளில் சேர்க்கப்படும் மாணவர்களிடமிருந்து பெறப்படும் கட்டணம் ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் அக்கல்லூரியில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை பொறுத்தும் மாறுபடுகிறது என்றும், அரசுக் கல்லூரிகளில் சுயநிதி அடிப்படையில் சேர்க்கப்படும் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணம் அக்கல்லூரி முதல்வரால் தனியாக பராமரிக்கப்படும் கணக்கில் பற்று வைக்கப்பட்டு கௌரவ விரிவுரையாளர்களுக்கான சம்பளம் அதிலிருந்து வழங்கப்படுகின்றன என்றும், சுயநிதி பாடப்பிரிவுகள் அரசு சார்பில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளாக மாற்றப்பட்டால் புதிதாக விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும், மேலே படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும், அரசு கலைக் கல்லூரிகளில் முதலாமாண்டு மாணவர்களின் சேர்க்கை தற்போது நடைபெற்று வருகின்றன என்றும், சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் பாடப் பிரிவுகளில் இக்கல்வியாண்டில் மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்தால் அவர்களிடமிருந்து சுயநிதி பாடப் பிரிவுகளுக்கான கட்டணம் வசூலிக்கப்பட்டிருக்கும் என்றும், எனவே இப்பாடப்பிரிவுகள் அரசு சார்பில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளாக மாற்றப்பட்டால், கூடுதலாக வசூலிக்கப்பட்ட கட்டணத்தை மாணவர்களுக்கு திருப்பி அளிக்க வேண்டியிருக்கும் என்றும், மேலும் உடனடியாக விரிவுரையாளர்கள் நியமனம் செய்யப்பட வேண்டும் என்றும், அரசுக்குத் தெரிவித்து இப்பொருள் குறித்து கீழ்க் குறிப்பிட்டுள்ளவற்றிற்கு தெளிவுரை வழங்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அரசினைக் கேட்டுக் கொண்டார்.

i. சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளை இக்கல்வி ஆண்டிற்கும் சுயநிதி அடிப்படையிலேயே நடத்தலாமா? அடுத்த கல்வியாண்டு முதல் இப்பாடப்பிரிவுகளை அரசு சார்பில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளாக மாற்றலாமா?

ii. இக்கல்வி ஆண்டிலேயே சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் பாடப்பிரிவுகள் அரசு சார்பில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளாக மாற்றப்பட்டால் வசூலிக்கப்பட்ட கட்டணத்தை மாணவர்களுக்கு திரும்ப வழங்கலாமா?

iii. இப்பாடப் பிரிவுகளுக்கு கௌரவ விரிவுரையாளர்களை நியமனம் செய்யலாமா அல்லது நிரந்தர விரிவுரையாளர்களை நியமனம் செய்யலாமா ?

iv. இப்பாடப்பிரிவுகளில் முதல், இரண்டாம் மற்றும் மூன்றாமாண்டு மாணவர்களுக்கு எத்தகைய கட்டணங்களை பின்பற்றுவது ?

v. இத்தகைய மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கட்டணத்தை அரசுக் கணக்கில் செலுத்துவதா அல்லது இச்செலவினங்களை மேற்கொள்ள தனியாகப் பராமரிக்கப்படும் கணக்கில் செலுத்துவதா ?

3. கல்லூரிக் கல்வி இயக்குநரின் மேற்கண்ட கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு அரசு ஆணையிடுகிறது.

i. அரசுக் கல்லூரிகளில் தற்போது சுயநிதி அடிப்படையில் நடத்தப்படும் அனைத்து பாடப்பிரிவுகளும் இந்த கல்வி ஆண்டு முதல் அரசு சார்பில் நடத்தப்படும் பாடப்பிரிவுகளாக மாற்றப்படுகிறது.

ii. சுயநிதி பாடப்பிரிவு மாணவர்களிடமிருந்து கூடுதலாக வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் உடனடியாக திருப்பி வழங்க உத்தரவிடப்படுகிறது. இது இரண்டாம் மற்றும் மூன்றாமாண்டு மாணவர்களுக்கும் பொருந்தும்.

iii. தற்பொழுது நடைமுறையில் உள்ள 264 சுயசார்பு பாடப்பிரிவுகளை முறையான பாடப்பிரிவுகளாக மாற்றுவதால், அந்த வகுப்புகளை கையாளுவதற்குத் தேவைப்படும் ஆசிரியர் பணியிடங்களுக்கு கௌரவ விரிவுரையாளர்களை அமர்த்திக் கொள்ளவும், அவர்களுக்கான மாத ஊதியம் ரூ.4,000/– அரசு நிதியிலிருந்து வழங்கப்படும் எனவும் ஆணையிடப்படுகிறது.

4. மேற்படி செலவினத்திற்காக ரூ.5,06,88,000/– (ரூபாய் ஐந்து கோடியே ஆறு லட்சத்து எண்பத்தி எட்டாயிரம் மட்டும்) வழங்க அரசு ஒப்புதலளித்து ஆணையிடுகிறது. இச்செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

"2202 பொதுக்கல்வி – 03 பல்கலைக்கழக கல்வியும் உயர்கல்வியும் – 103 அரசு கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் I திட்டத்தில் சேராதது – AZ ஆடவர் கல்லூரிகளில் நடைமுறையிலுள்ள சுயசார்பு பாடப்பிரிவுகளை முறையான பாடப்பிரிவுகளாக மாற்றுதல் – 33 தொழில்முறை சிறப்புப் பணிகளுக்கு தொகை கொடுத்தல் – 02 ஊதியம் (த.தொ.கு.2202 03 103 AZ 3320)

"2202 பொதுக்கல்வி – 03 பல்கலைக்கழக கல்வியும் உயர்கல்வியும் – 103 அரசுக் கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் I திட்டத்தில் சேராதது – BA மகளிர் கல்லூரிகளில் நடைமுறையிலுள்ள சுயசார்பு பாடப்பிரிவுகளை முறையான பாடப்பிரிவுகளாக மாற்றுதல் – 33 தொழில்முறை சிறப்புப் பணிகளுக்கு தொகை கொடுத்தல் – 02 ஊதியம் (த.தொ.கு.2202 03 103 BA 3329)

5. இச்செலவினம் **"புதுப்பணித்திட்டமாக"** கருதப்படும். துணை மதிப்பீடுகளில் மேற்காணும் செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினத்தை எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வ.செ.தி.பொ–1) துறையில் பிறப்பிக்கப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவையான முன்பணம் பெறுவதற்கு நிதித் (வ.செ.தி.பொ–1) துறைக்கு தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் அனுப்பி வைக்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.199/SS (KSG) / 06 நாள் 20.7.2006–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண்.305.

(ஆளுநரின் ஆணைப்படி)

க. கணேசன்
அரசு செயலாளர்

# சென்னையில் தமிழக அரசு நடத்திய குழந்தைகள் திரைப்பட விழா

தமிழக அரசின் செய்தித்துறை சார்பில் குழந்தைகள் திரைப்பட விழா மீண்டும் நடத்தப்பட்டது.

சென்னை, கலைவாணர் அரங்கத்தில் 1.8.2006 முதல் 9.8.2006 வரை குழந்தைகள் திரைப்படவிழா, தமிழக அரசின் செய்தித்துறை சார்பில், குழந்தைகள் திரைப்பட வளர்ச்சிக் கழகம் மற்றும் யூனிசெப் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்டது.



இந்நிகழ்ச்சியின் தொடக்க விழா 1.8.2006 அன்று நடந்தது. செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலாளர் திரு. வெ. இறையன்பு இ.ஆ.ப. அவர்கள், அனைவரையும் வரவேற்றுப் பேசினார். மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் தலைமையுரையாற்றினார். குழந்தைகள் திரைப்பட விழாவினைத் தொடங்கி வைத்து மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் அவர்கள் விழாப்பேருரையாற்றினார். மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது :–

'குழந்தைகள் அரங்கம்' என்று வழங்கப்பட்டு வந்த இந்த கலைவாணர் அரங்கத்தில், மறுபடியும் குழந்தைகளுக்காக திரைப்பட விழா நடத்தப்படுவது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். மைய அரசு நிறுவனமாக செயல்பட்டு வருகின்ற குழந்தைகள் திரைப்பட வளர்ச்சிக் கழகத்துடன் இணைந்து ஏழு நாட்கள் இந்த நிகழ்ச்சி நடத்தப்படுவது வரவேற்கத்தக்க ஒன்று. குழந்தைகள் இதயத்தில் நல்ல கருத்துக்களையும், நம்பிக்கையையும் சரியான விகிதத்தில் விதைத்துவிடுவோமேயானால் எதிர்காலச் சமுதாயம் காப்பாற்றப்படும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. எது நல்ல திரைப்படம் என்பதை அவர்கள் அறிந்து கொண்டால் நச்சுப் போல்



பொழுதுபோக்குகளில் தங்கள் கவனத்தைச் செலுத்தமாட்டார்கள்.

ஒரு நல்ல திரைப்படம் விதையைப் போல் விழுந்து அவர்கள் உள்ளத்தில் வளர்ந்து விருட்சமாக செழித்து, அவர்கள் செயல்களிலும், சிந்தனைகளிலும் நறுமணத்தைப் பரப்பும் ஆற்றல் வாய்ந்தது. தான் சிறுவயதில் பார்த்த நாடகமே, தன் வாழ்க்கையில் உண்மையைக் கடைப்பிடிக்க உந்துதலாய் இருந்தது என்று மகாத்மா காந்தியடிகள் குறிப்பிடுவது உண்டு. நல்ல பொழுதாக்கமாக திரைப்படம் இருக்க வேண்டுமே தவிர, வீண் பொழுதுபோக்காக இருக்கக் கூடாது.

குழந்தைகள் தங்கள் காதுகளில் விழுகிற கருத்துக்களை இதயத்தில் பதியம் போட்டுக் கொள்ளுகிற பருவத்தில் இருப்பவர்கள். அவர்களுக்கு நல்ல செய்திகளே தரப்பட வேண்டும். அவர்கள் இதயத்தில் மலர்களைப் போல, மௌனமாக அவை தூவப்பட வேண்டும். உழைப்பு, நேர்மை, திறமை ஆகிய ஒப்பற்ற பண்புகளை அவர்களுக்கு ஆழமாக வேர்விட வைத்துவிடுவோமேயானால், ஒரு மாபெரும் சமுதாயக் கடமையை ஆற்றியவர்களாக நாம்அங்கீகரிக்கப்படுவோம். மூளை மட்டும் வலுவாகிற கல்வி ஒரு பகுதியை மட்டுமே நிறைவு செய்யும். மனத்தையும் பண்படுத்தும் கல்வி அதோடு இணையும்போது தான் தேவைப்படுகிற போது பாறையைப் போல் திடமாகவும், அவசியம் ஏற்படுகிறபோது பஞ்சைப் போல் மென்மையாகவும், வாழ்வதற்கு அவர்களுக்கு சாத்தியப்படும்.

என்னதான், சின்னத்திரையில் படங்களைப் பார்த்தாலும் அது பெரிய அரங்கத்தில் பார்க்கிற தாக்கத்தை ஏற்படுத்தாது. சம வயது குழந்தைகளோடு திரைப்படங்களைப் பார்க்கிறபொழுது ஏற்படுகிற குதூகலம் அலாதியானது. அந்த வாய்ப்பைச் செய்தித்துறை ஏற்படுத்தி இருக்கிறது என்பது பாராட்டுக்குரியது. இதற்காக அயராது உழைத்த கல்வித்துறை அதிகாரிகளும் போற்றுதலுக்குரியவர்கள்.

"யுனிசெப்" நிறுவனம் இந்தக் குழந்தைகள் திருவிழாவிற்குப் பெருந்தன்மையுடன் உதவி புரியவும் அவர்களுக்கு விழிப்புணர்வை ஊட்டவும் முன் வந்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இந்தத் திரைப்படங்களைப் பார்த்து மட்டும் சென்றுவிடாமல் அவை குறித்து எழுதப்படுகின்ற கட்டுரைகளுக்கு பதக்கங்கள் தருவதற்கும் "யுனிசெப்" முன்வந்திருக்கிறது. எனவே, மாணவர்கள் திரைப்படங்களை உன்னிப்பாகப் பார்த்து அவற்றிலிருக்கும் சிறந்த காட்சிகளை உருவகப்படுத்தி, அது எவ்வாறு தன்னுடைய வாழ்க்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்பதை விரிவாக எழுதி பரிசுகள் பெறுவதற்கு என்னுடைய வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாணவர் பருவம் கொண்டாட்டத்திற்குரியது. அதை நீங்கள் உற்சாகமாக ஏற்றுக் கொண்டு ஒவ்வொரு நொடியையும் மகிழ்ச்சி மகரந்தம் பூசி திருவிழாவாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையோடு இந்த நிகழ்ச்சியைத் தொடங்கி வைப்பதில் பூரிப்பு அடைகிறேன்''.

விழாவில் குழந்தைகள் திரைப்பட வளர்ச்சி கழக விநியோக அலுவலர் திரு. கே. பி. ராமகிருஷ்ணன், யுனிசெப் நிறுவனத்தின் திரு. தாமஸ் ஜார்ஜ், மற்றும் முதன்மைக் கல்வி அலுவலர் திரு. தர்மராஜேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். செய்தி மக்கள் தொடர்பு துறையின் துணை இயக்குநர் (நினைவகங்கள்) திரு. கா. சம்சுதீன் நன்றி கூறினார்.

ஆகஸ்டு 1 முதல் 9 வரையில் நடைபெற்ற இந்த விழாவில் மல்லி, வெற்றிப்பாதை, அதிசய கோட், துபாஸி, தன்னம்பிக்கை, பால்யமேதை, ஹலோ ஆகிய 7 திரைப் படங்கள் திரையிடப்பட்டன. ஒவ்வொருநாளும் 3 காட்சிகள் என 21 காட்சிகள் திரையிடப்பட்டன. சென்னை முழுவதிலுமிருந்து 152 பள்ளிகளைச் சேர்ந்த 21,000 குழந்தைகள் இத்திரைப்படங்களைக் கண்டுகளித்தார்கள்.

குழந்தைகள் திரைப்பட விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சி 9.8.06, அன்று, முதன்மைக் கல்வி அலுவலர் திரு. தர்மராஜேந்திரன் அவர்களின் வரவேற்புரையுடன் தொடங்கியது. செய்தி மற்றும் சுற்றுலாத்துறை செயலாளர் திரு. வெ. இறையன்பு இ.ஆ.ப. அவர்கள், குழந்தைகள் திரைப்பட வளர்ச்சிக் கழக விநியோக அலுவலர் திரு. கே. பி. இராமகிருஷ்ணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். பின்னர், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் நிறைவு விழாப் பேருரை ஆற்றினார். அப்போது அவர், "மிகச் சிறப்பாக இந்த குழந்தைகள் திரைப்பட விழா நடைபெற்றிருக்கிறது. படங்களைப் பார்த்த குழந்தைகள் அதிலிருந்து அவர்கள் என்ன உணர்ந்து கொண்டோம் என்பதை கட்டுரையாக எழுதி அனுப்பினால் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கட்டுரைக்கு பரிசுகளை "மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்குவார்கள்'', எனக் கூறினார். முடிவில் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. சி. கோசலராமன் இ.ஆ.ப. அவர்கள் நன்றி கூறினார்.

* * *

# விடுகதைகள்

1. தள்ளாடிப் போகும். ஆனால்
   தடம் மாறிப் போகாது ...................... அது என்ன ?
2. பூத்தபோது மஞ்சள். காய்த்தபோது சிவப்பு.
   பழுத்தபோது கறுப்பு ........................ அது என்ன ?
3. வட்ட வட்ட குயில்களாம் வாயில்லாக்
   குயில்களாம் சுற்றுகின்ற போதிலே
   சுகமான ராகமாம். ............................ அது என்ன ?
4. எண்ணெய் இல்லை திரியும் இல்லை
   ஏற்றிவைக்க ஆளும் இல்லை, ஆனாலும்
   வெளிச்சம் தரும் ................................ அது என்ன ?
5. வளைந்து நெளிந்து போனாலும்
   வழியைச் சொல்லும் சரியாக. ......... அது என்ன ?
6. பறந்து திரியும் அதன் படுக்கை மட்டும்
   தலைகீழ் இருக்கும். ............................ அது என்ன ?
7. ஊரில் இருந்து வாங்கிவந்த மாட்டுக்கு
   உரிக்க உரிக்கத் தோல். .................. அது என்ன ?
8. எட்டி நின்று பார்ப்பான் பெட்டியுள்
   போட்டுக் கொள்வான் ..................... அவன் யார் ?
9. உலகமெங்கும் படுக்கை விரித்தும்
   உறங்காமல் அலைகிறான் ............... அவன் யார் ?
10. உலகமெல்லாம் திரிவான் அவனை ஒருவரும்
    கண்டதில்லை ...................................... அவன் யார் ?

**விடைகள்**

1. ரயில் 3. இசைத்தட்டு 5. சாலை 7. வெங்காயம் 9. கடல்
2. பேரீச்சம் பழம் 4. சூரியன் 6. வௌவால் 8. கேமரா (புகைப்படக்கருவி) 10. காற்று


சென்னை மெரீனா கடற்கரை

# சென்னை தினம்


சென்னை எழும்பூர் இரயில் நிலையம் (உள்தோற்றம்)

நமது சென்னை மாநகரத்திற்கு, இந்நாள் வரை பிறந்த நாள் விழா எடுக்கப் பட்டதில்லை. நாம் நம்முடைய சென்னை மாநகரை அவ்வாறு ஒதுக்கி விடுதல் கூடாது அல்லவா?

சென்னை மாநகரின் 300ஆவது ஆண்டு நிறைவினையொட்டி, சென்னை மாநகரம் குறித்தும் மக்கள் பற்றியும் குறிப்பிடத்தக்க நிறுவனங்களின் விவரங்களையும் உள்ளடக்கிய தொகுப்பு ஒருமுறை வெளியிடப்பட்டுள்ளது. ஆனால், அதன் பிறகு சென்னை மாநகர் உருவான தினமாகக் கருதப்படும் 1639 ஆகஸ்ட் 22 ஆம் நாள் மறக்கப்பட்டு விட்டது. அன்றைய தினத்தில்தான் தற்பொழுது தலைமைச் செயலகமாகத் திகழ்ந்து கொண்டிருக்கும் செயின்ட் ஜார்ஜ் கோட்டை கிழக்கிந்திய கம்பெனியிடம் ஒப்படைக்கப் பட்டது. அதற்கான ஒப்பந்தம் பிரான்சிஸ் டே, துபாஷ் பெர்ரி திம்மப்பா மற்றும்


சென்னை சென்ட்ரல் இரயில் நிலையம்



சேப்பாக்கம் கிரிக்கெட் மைதானம்



கொத்தவால்சாவடி (காய்கறிச்சந்தை)

ஆன்ட்ரூ கோகன் ஆகியோருக்கும், நாயக்க மன்னர்களுக்கும் இடையே 1639 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 22ஆம் நாள் ஏற்பட்டது.

அந்தக் கோட்டைக்குப் வெளிப்புறத்தில் குடில்கள் உருவாயின. சுற்றுப்புறங்களிலிருந்த கிராமங்கள் ஒருங்கிணைக்கப் பட்டன. அதனைத் தொடர்ந்து பழைய மற்றும் புதிய நகரங்கள் இணைக்கப்பட்டு, ஒரு மாநகரமாக சென்னை உருவெடுத்தது.

இன்றைய நாளில் சென்னை மாநகரில் கல்வி, மருத்துவம், தகவல் தொடர்பு, வரலாறு, சுற்றுலா, திரைப்படம், மோட்டார் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு துறைகள் உயரிய நிலையை எட்டியுள்ளன. இத்தகையச் சூழலில் இந்தியாவில் உள்ள ஒரு சில மாபெரும் நகரங்களில் ஒன்றான சென்னையின் வரலாற்றை நினைவு கூறும் வகையில் சென்னை தினத்தை கொண்டாட முடிவு செய்து, வரலாற்று வல்லுநர் திரு. எஸ். முத்தையா, பத்திரிகையாளர்கள் திரு. சசி நாயர் மற்றும் பி.டி. சௌகா ஆகிய மூவரும் கடந்த 2004 ஆம் ஆண்டிலிருந்து சென்னை தினத்தினைக் கொண்டாடி வருகின்றனர். சென்னை மாநகரின் கடந்த கால மற்றும் நிகழ் கால வரலாற்றை கொண்டாட்டங்களின் வாயிலாக மக்கள் மனதில் பதியச் செய்வதே, இந்தச் சென்னை தினக்கொண்டாட்டத்தின் நோக்கமாகும்.

சென்னைக்குள் நடைப் பயணங்கள், புகைப்படக் கண்காட்சி, பள்ளிகளுக்கிடையிலான பேச்சுப்போட்டி, இசை மற்றும் வினா – விடை போட்டிகள், உணவு விழாக்கள், ஊர்வலங்கள், மோட்டார் பயணம் போன்ற நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த நிகழ்ச்சிகளில் வானொலிகள், உணவு விடுதிகள், பள்ளி மற்றும் கல்லூரிகள், குடியிருப்போர் சங்கங்கள், மனமகிழ் மன்றங்கள், சுற்றுலா இயக்குநர்கள் மற்றும் பல்வேறு சங்கங்கள் பங்கேற்கின்றன.

இந்த ஆண்டும் (2006) ஆகஸ்ட் 20ஆம் நாள் தொடங்கி 27ஆம் நாள் வரை பல்வேறு நிகழ்ச்சிகளுடன் சென்னை தினம் கொண்டாடப் பட்டது. அதனையொட்டி சென்னையின் பழைய தோற்றங்களைக் காட்டும் புகைப்படங்கள் சிலவற்றை இங்கே வெளியிட்டுள்ளோம். ★



பாரதி சாலை (பைகிராப்ட்ஸ் சாலை)

"ஓங்கலிடை வந்து உயர்ந்தோர்
தொழவிளங்கி
ஏங்கொலி நீர் ஞாலத்து இருளகற்றும்
ஆங்கவற்றுள்
மின்னோர் தனியாழி வெங்கதிரொன்
றேனையது
தன்னே ரிலாத தமிழ்''

– தண்டியலங்கார மேற்கோள் செய்யுள்





# தமிழ் மாமலை
# பரிதிமாற் கலைஞர்

**தோற்றம் : 06.07.1870** **மறைவு : 02.11.1903**

தமிழ் மொழியாம் செம்மொழியைத் தம் உயிரினும் மேலாக மதித்து வாழ்ந்தவர் அவர். நலிவடைந்திருந்த நாடகத் தமிழுக்கு புத்துயிரூட்டிய பெருமகனார் அவர். 'தமிழ் மொழியின் வரலாறு' என்னும் ஒப்பற்ற நூலைப் படைத்த பெரும்புலவர் அவர். அனைத்திற்கும் மேலாகத் தமிழை முதன் முதலில் செம்மொழி என அறிவித்த அருந்தமிழ்ச் செம்மலார். இத்தனைப் பெருமைகளுக்கும் உரியவர் யார் என்று என்னத்தோன்றுகிறதல்லவா ? அவர்தான் சூரிய நாராயண சாஸ்திரியார் என்று அழைக்கப்பட்ட பரிதிமாற் கலைஞர் ஆவார்.

**பிறப்பு**

செட்டிநாட்டைச் சேர்ந்த 96 ஊர்களில் கண்டரமாணிக்கம் என்னும் ஊரும் ஒன்று. அவ்வூரில் வாழ்ந்த அந்தணர் ஒருவரின் திருப்பெயர் கோவிந்தராச சாஸ்திரியார் என்பது. அவருடைய குடும்பம் மதுரைக்குத் தெற்கே 4 மைல் தொலைவிலுள்ள விளாச்சேரி என்னும் ஊருக்குக் குடிப் பெயர்ந்தது. அவ்வூரில்தான் 6.7.1870–ஆம் ஆண்டு அன்னைத் தமிழின் கண்ணீரைத் துடைத்தெறிந்த பரிதிமாற் கலைஞர் பிறந்தார். பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் சூரிய நாராயணன் என்பது. தமிழின் மேல் இருந்த தணியாத பற்றின் காரணமாகத் தமது பெயரைப் பரிதிமாற் கலைஞன் என மாற்றியமைத்துக் கொண்டார். (பரிதி – என்றால் சூரியன்; மால் – என்றால் நாராயணன்; கலைஞர் எனின் சாஸ்திரியார். ஆக சூரிய நாராயண சாஸ்திரியார் என்னும் வடமொழிப் பெயரின் தமிழ் வடிவமே பரிதிமாற் கலைஞர் என்பது.)

**கல்வி**

பரிதிமாற் கலைஞர் ,தமது 15ஆவது வயதிலிருந்து தொடர்ந்து மூன்று ஆண்டுகள் சபாபதி முதலியாரிடம் தமிழ் கற்றார். இளமை முதலே இவருக்கு இலக்கண, இலக்கியங்களின்



மேல் தணியாத ஈடுபாடு இருந்து வந்தது. தாய் மொழியில் வல்லவராக இருப்பவருக்கு மற்ற மொழிகள் மிக எளிதில் புரிய ஆரம்பித்து விடும். அதுவும் இருந்ததால் தத்துவ நூல்களையும், ஆங்கில நூல்களையும் மிக விரைவில் கற்றுத் தேர்ந்தார்.

1892ஆம் ஆண்டு பி.ஏ. (இளங்கலை) தேர்வில் தமிழ் மொழியிலும், தத்துவத்திலும் மாநிலத்திலேயே முதன்மையாகத் தேறினார். இதனால் நான்காம் தமிழ்ச் சங்கம் கண்ட வள்ளல் பாண்டித்துரைத் தேவர் இவருக்குத் தங்கப்பதக்கம் வழங்கிப் பாராட்டினார்.

## தமிழ் மொழியின் பால் ஆழ்ந்த ஈடுபாடு

பரிதிமாற் கலைஞர் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த வேளையில் அவருக்கு ஆசிரியராக இருந்தவர் வில்லியம் மில்லர் என்னும் ஸ்காட்லாந்துப் பேராசிரியராவர். இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணியாற்றியவர். மில்லர் இளங்கலை வகுப்பில் ஒரு நாள் பாடம் நடத்திக் கொண்டிருக்கையில் ஆங்கிலப் பெருங்கவிஞரான டென்னிசனின் பாடல் ஒன்றை மிகவும் வானளாவப் புகழ்ந்து கொண்டிருந்தார்.

மில்லர் பாராட்டிக் கொண்டிருந்த டென்னிசனின் வர்ணனை இதுதான். "ஒரு படகானது இரண்டு பக்கங்களிலும் துடுப்புகள் தள்ள நீரில் மிதந்து சென்று கொண்டிருக்கிறது. அது எவ்வாறு தோன்றுகின்றதெனில், ஓர் அன்னப்பறவை தன் இரண்டு சிறகுகளையும் வீசி அழகாகப் பறந்து செல்வதுபோல் உள்ளது. டென்னிசனின் இந்த அழகான வர்ணனை எந்த மொழிப் பாடல்களிலும் இருக்க முடியாது. ஏன்! தொன்மை மொழியாகிய தமிழில் கூடிய இத்தகைய வர்ணனையுடன் கூடிய பாடல் இருக்கிறதா என்பது எனக்கு சந்தேகமே'' என்று முடித்தார்.

பேராசிரியரின் பேச்சைக் கேட்ட மாணவர்கள் பதிலேதும் பேசாமல் அமைதியாய் அமர்ந்து கொண்டிருந்தனர்.

## தமிழ்ப் பணிகள்

பரிதிமாற் கலைஞர் தமிழ் மொழியின் பால் மிகுந்த பாசம் கொண்டவர். முத்தமிழுள் ஒன்றான நாடகத் தமிழுக்கு உயர்வளித்தவர். பரிதிமாற் கலைஞர் எண்ணற்ற நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் குறிப்பிடத்தக்கன கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

1. ரூபாவதி
2. கலாவதி
3. மான விஜயம்
4. தனிப்பாசுரத் தொகை
5. பாவலர் விருந்து
6. மதிவாணன்
7. நாடகவியல்
8. தமிழ் வியாசங்கள்
9. தமிழ்மொழியின் வரலாறு

என்பன. இவற்றுள் 'நாடகவியல்' என்னும் நூலானது நாடக இலக்கணங்களை விரிவாகக் கூறுகிறது.

'தமிழ்மொழி வரலாறு' என்னும் நூல் தமிழுக்குக் கிடைத்த அரிய கருவூலமாகும். பரிதிமாற் கலைஞர் இந்நூல்களேயன்றி மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்திலிருந்து வெளியான 'செந்தமிழ்' என்னும் இதழில் பல கட்டுரைகளையும் வரைந்துள்ளார்.

வேகமாய்ச் செல்லும் வானவூர்தி போலத் தம் இருக்கையிலிருந்து எழுந்தார் பரிதிமாற் கலைஞர். " பேராசிரியர் அவர்களே, உங்கள் கூற்று தவறு. உங்கள் பெருங்கவிஞனான டென்னிசன் பிறப்பதற்கு எண்ணூறு ஆண்டுகளுக்கு முன்பே எங்கள் தமிழ்ப் புலவர் இதே கற்பனை அமைந்த பாடல் ஒன்றை இயற்றியிருக்கிறார் என்பது தாங்கள் அறியாத செய்தியாகும்'' என்று துணிவுடன் கூறினார்.

"அப்படியா, நீங்கள் சொல்வது உண்மையெனில், அந்தப் புலவரின் பெயரையும், அப்பாடலையும் கூறுங்கள் பார்க்கலாம்'' என்றார் மில்லர் பெருமகனார்.

## அறிந்து கொள்வோம் தமிழ் அறிஞர்களை



பரிதிமாற்கலைஞர் நிதானமாக, கவிச் சக்கரவர்த்தி எனத் தமிழ் மக்களால் போற்றிப் பாராட்டப்படும் கம்பர் என்னும் புலவர் தாம் இயற்றிய ஒப்பற்ற காவியமான கம்பராமாயணத்தில் இக்கற்பனை சார்ந்த பாடல் ஒன்று வருகிறது. அப்பாடல் இதுதான்.

"முடுகின நெடு நாவாய் முரிதிரை
நெடுநீர்வாய் கடிதனில்
மட அன்னம் கதியது செல நின்றார் ''

என்று கூறினார். இவ்விளக்கத்தைக் கேட்ட மில்லர் பெருமகனார் பெரிதும் அக மகிழ்ந்தார். மிக்க நன்று என்று பரிதிமாற் கலைஞரைப் பாராட்டினார். இந்நிகழ்ச்சியால் பரிதிமாற் கலைஞரின் தமிழ்ப் பற்று உள்ளங்கை நெல்லிக் கனியென விளங்குகின்ற தன்றோ ?

இம்மட்டோ! இந் நிகழ்ச்சிக்குப் பின்பு மில்லர் பெருமகனார் பரிதிமாற் கலைஞர் மீது பெருமதிப்பு வைத்திருந்தார். சென்னைக் கிறித்துவக் கல்லூரியிலேயே தமிழ்ப் பேராசிரியராகப் பணியில் அமர்த்தினார்.

*__திராவிட சாஸ்திரி__*

*சி.வை.தாமோதரம் பிள்ளையவர்கள் தலைசிறந்த தமிழறிஞர். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெரும்புலவர், எண்ணற்ற தமிழ் நூல்களை ஓலைச்சுவடிகளிலிருந்து பதிப்பித்தவர். அவர் நமது பரிதிமாற் கலைஞரை, "வடமொழி பயில்வதையே தமது குலக் கடமையாகக் கொள்ளும் அந்தணர் வகுப்பில் பிறந்திருந்தும், திராவிட மொழியான தமிழின் மீது பற்றுக் கொண்டு, அதன் பெருமையை உலகுக்கு உணர்த்துவதில் உயரிய குறிக்கோள் கொண்ட உம்மைத் 'திராவிட சாஸ்திரி' என அழைப்பதே பொருத்தமானது!'' என அழைத்து மகிழ்ந்தார்.*

**'தமிழ் மொழியின் வரலாறு' தரும் சில செய்திகள்**

" வடமொழி தமிழ் மொழியாக கலக்கப் புகு முன்னரே, முன்னது பேச்சு வழக்கற்று ஏட்டு வழக்காய் மட்டிலிருக்கும் நிலைமைக்கு வந்து விட்டது. ஏட்டு வழக்கொன்றுமேயுள்ள பாஷையோடு இருவகை வழக்குமுள்ள பாஷையொன்று கூடியியங்கப் புகுமாயின் முன்னதன் சொற்களே பின்னதன்கட் சென்று சேருமேயன்றிப் பின்னதன் சொற்கள் முன்னதன்கட் சென்று சேரா. இது பாஷை நூலின் உண்மைகளுளொன்று, இதுவே வழக்காற்று முறை. இம்முறை பற்றியே வடசொற்கள் பல தமிழின் கட் புகுந்தன''

– 'தமிழ் மொழியின் வரலாறு' பக்கம் : 9

சமஸ்கிருத மொழியின் கண்ணே பால் வகுப்புச் சொன்னோக்கத்தாலேற்பட்டுளதேயன்றிப் பொருளோக்கத்தாலேற்பட்டிலது. உதாரணமாகக் கையெனப் பொருள்படும் 'கரம்' என்ற சொல் ஆண்பால்; மனைவியெனப் பொருள் படுஞ் சொற்களிலே, 'தாரம்' என்பது ஆண்பால். 'களத்திரம்' என்பது அலிப்பால், அஃதாவது ஒன்றன்பால் என ஓராற்றானமைக்கலாம். இவ்வாறுளது வடமொழிப்பால் வகுப்பின் சிறப்பு. மற்றுத் தமிழ் மொழியிலோபால் வகுப்பெல்லாம் பொருணோக்கத்தாலேற்பட்டுளவே யன்றிச் சொன்னோக்கத்தாலேற்படவேயில்லை. இது தமிழ் மொழியின் சிறப்புக்களுள் ஒன்று. வட நூன்முறை குறைபாடு உடையது. ஆரிய பாஷைகளோடியையுபட்ட பாஷைகளெல்லாம் சொன்னோக்கப்பால் வகுப்புக் குறைபாடுடையன வாகுமாறு காண்க. தமிழ் மொழியின் வழிமொழிகளெல்லாம் பொருணோக்கப்பால் வகுப்புச் சிறப்புடையன. இவ்வுண்மையொன்றே தமிழ் மொழியின் தனி நிலையை நன்கு விளக்குவதற்குத் தக்க சான்று பகரும்.

அகப்பொருளும் அதன் றுறைகளும், புறப் பொருளும் அதன் றுறை களும் இவ்விருவகைப்



பொருள்களினியை புகளும் வடமொழியினின்றும் என்றென்றும் கிடைத்தலியலாத அரிய தனித்தமிழ் விவிலியங்களாம்.''

–'தமிழ்மொழியின் வரலாறு ' பக்கம் : 9

மேற்கண்ட செய்திகளை நோக்கும்போது பரிதிமாற் கலைஞரின் தமிழ்ப்பற்று இனிது விளங்குகிறது.

" அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கி
விட்டுவிட்டால்
"இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே''

என்னும் தாயுமானவரின் கூற்றுக்கு ஒப்பவும், "என்னை இறைவன் நன்றாகப் படைத்தான் தன்னை அழகாய்த் தமிழ் செய்யுமாறே'' என்னும் திருமூலரின் பொன்வரிகளுக்கு ஏற்பவும் பரிதிமாற் கலைஞர் இறுதிவரைத் தமிழைச் செம்மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என நூல்களில் எழுதி வந்தார். அவர் இயற்றிய அரிய நூலான 'தமிழ் வியாசங்கள்' என்னும் நூலைக் கற்போர் இவ்வுண்மையை அறிவர். இங்ஙனம் ஒல்லும் வகையிலெல்லாம் தமிழ்ப் பணியாற்றிய பரிதிமாற் கலைஞர் 2.11.1903 ஆம் ஆண்டு இறைவனோடு இணைந்துவிட்டார். 32 வயது வரை மட்டுமே வாழ்ந்த பரிதிமாற் கலைஞர் நூறு ஆண்டுகள் வாழ்ந்திருந்தால் எண்ணற்ற தமிழ்ப்பணிகள் ஆற்றியிருப்பார். இவர் மறைந்தபின் இவருடைய பேராசிரியர் மில்லர் பெருமகனார் கதறியழுத காட்சி நெஞ்சை நெக்குருகச் செய்வதாகும். அக்கதறல் வருமாறு :

"என் புருவம் சுருக்கம் ஏறி, கண்களை மறைக்கும்
முதுமையில் வாடுகின்றேன் நான். ஆனால்
நடு வயது வருவதற்கு
முன்னரே நற்றமிழ்ப் பரிதி அகன்றானே''

என்று கண்ணீர் வடித்தார் அப்பெருமகனார். பரிதிமாற் கலைஞரைத் தொடர்ந்து அவர் வழியில் தமிழுக்குத் தொண்டு புரிவதே அனைத்துத் தமிழர்களின் தலையாய கடமையாகும்.

"பரிதிமாற் கலைஞரை நினைத்திடுவோம்
பயிர் போல் தமிழை வளர்த்திடுவோம்''

– "இரு நூற்றாண்டுகளும்
50 தமிழ் அறிஞர்களும்"
என்ற நூலிலிருந்து...

✧✧✧



*பரிதிமாற் கலைஞர் அவர்களின் நூல்கள் அரசுடைமையாக்கப்படும், மதுரையில் அவர் வாழ்ந்த இல்லம் நினைவு இல்லமாக்கப்படும் என அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர்* **கலைஞர் மு. கருணாநிதி** *அவர்களுக்கு* ***25.7.2006*** *அன்று பரிதிமாற் கலைஞர் குடும்பத்தினர் நன்றி தெரிவித்தனர். உடன் மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன், மாண்புமிகு மின்துறை அமைச்சர் ஆற்காடு நா. வீராசாமி ஆகியோர் உள்ளனர்.*

# படமும் செய்தியும்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள், ''பெரியார்'' திரைப்படத்துக்கு தமிழக அரசின் சார்பில் நிதி வழங்கப்படும் என்று அறிவித்ததற்கிணங்க, தலைமைச் செயலகத்தில் அதற்கான காசோலையை அந்த திரைப்பட தயாரிப்பாளரிடம் வழங்கினார். அப்போது திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. கோ.சி.மணி, மாண்புமிகு உயர் கல்வித்துறை அமைச்சர் டாக்டர் க.பொன்முடி, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி, மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு. தண்டாரம்பட்டு எ.வ.வேலு ஆகியோர் இருந்தனர்.




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள், 30.07.2006 அன்று சென்னையில் உள்ள தென்னிந்திய திரைப்பட வர்த்தக சபை வளாகத்தில் நடைபெற்ற இந்தியத் திரைப்பட உலகின் சாதனையாளர் திரு.ஏவி. மெய்யப்பன் அவர்களின் நூற்றாண்டு தொடக்க விழாவில் கலந்து கொண்டு ஏவி. மெய்யப்பன் அவர்களின் திருவுருச்சிலையைத் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் உடன் உள்ளார்.




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள் 15.8.2006 அன்று தலைமைச் செயலகத்தில் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களின் நினைவு அஞ்சல் தலையினை வெளியிட்டார்கள். உடன் மாண்புமிகு மத்திய தொலை தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் திரு. தயாநிதி மாறன், மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.பரிதி இளம்வழுதி, இந்திய தபால் துறை வாரிய உறுப்பினர் திருமதி. வத்சலா ரகு, தமிழக தலைமைச் செயலர் திரு.எல்.கே. திரிபாதி, இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.




மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர் மு.கருணாநிதி** அவர்கள், 28.7.2006 அன்று சென்னையில் புதிதாக வடிவமைக்கப்பட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துகழகத்திற்கு வாங்கப்படவுள்ள புதிய பேருந்துகளை பார்வையிட்டார்கள். உடன், மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மற்றும் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு ஆகியோர் உள்ளனர்.




# கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள பேரிடர் இன்னல் மேலாண்மை திட்ட அவசர கால செயல் மையம்

இந்தியாவின் பல பகுதிகளில் பூகம்பம், புயல் மற்றும் வெள்ளப்பெருக்கு போன்ற இயற்கைப் பேரிடர்கள் அவ்வப்போது நிகழ்கின்றன. இத்தகைய நிகழ்வுகளால் பொருள் சேதம் மட்டுமின்றி விலைமதிப்பற்ற ஆயிரக்கணக்கான உயிர்ச் சேதமும் ஏற்படுகின்றன. பூகம்ப நிகழ்வுகளின் தன்மைக்கேற்ப இந்திய துணைக்கண்டம் குறைந்த அளவு (Zone II) மிதமான அளவு (Zone III) அதிக அளவு (Zone IV) மிக அதிக அளவு (Zone V) என நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதில் கன்னியாகுமரி மாவட்டம் மிதமான அளவு (Zone III) பூகம்பம் ஏற்பட வாய்ப்புள்ள பகுதியாக கண்டறியப்பட்டுள்ளது.

குஜராத் மாநிலம், பூச் பகுதியில் 2001 –ஆம் ஆண்டு ஜனவரி 26–ஆம் நாள் ஏற்பட்ட பூகம்ப அழிவுகளுக்குபின் மாநிலம் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் இயற்கை பேரிடர் அவசர கால செயல்மையங்கள் ஏற்படுத்த மத்திய அரசால் முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக கன்னியாகுமரி மாவட்ட தலைநகர் நாகர்கோவிலில், அவசர கால செயல்மையக் கட்டடம் கட்டுவதற்கு உத்தரவும், கட்டட வடிவமைப்பும் வழங்கப்பட்டு ரூ. 6.11 இலட்சம் மதிப்பீட்டில் 970 சதுர அடி பரப்பளவில் இக்கட்டடம் மாவட்ட ஆட்சியர் வளாகத்தினுள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடம் மிதமான பூகம்பத்தை (Zone III) தாங்கும் தொழில்நுட்பத்துடன் கட்டப்பட்டுள்ளது. பூமி




அதிர்வைத் தாங்கும் வகையில் அடித்தளம், தரைத்தளம் மட்டம், கதவு மேல் மட்டம் மற்றும் கூரை இவைகளில் கம்பிகளால் பலப்படுத்தப்பட்ட கான்கீரீட் அமைத்து கட்டப்பட்டுள்ளது. சிறப்பு அம்சமாக மூலைப்பகுதிகள் மற்றும் கதவு, ஜன்னல் ஓரங்கள் கம்பிகளால் இணைக்கப்பட்டுள்ளதோடு சுற்றிலும் கான்கீரீட் அமைத்து பலப்படுத்தப் பட்டுள்ளது. இதனால் பூகம்ப அதிர்வின்போது கட்டடம் இடிந்து விடாமல் உறுதியாக நிலைத்து நிற்கும்.

இக்கட்டடத்தில் மாவட்ட நிருவாக மூலம் இயற்கை பேரிடர் அவசர கால செயல்மையம் பேரிடர் கிராமங்களில் தேவையான அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வகையில் இயங்கி வரும்.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ரூ.6.11 இலட்சத்தில் பேரிடர் இன்னல் மேலாண்மை திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள அவசரகால செயல்மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சுனீல்பாலீவால், இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்து தெரிவித்ததாவது :

“கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் பேரிடர் இன்னல் மேலாண்மை திட்டத்தின்கீழ் அவசர கால செயல்மையம் (Emergency Operation Centre) ரூ.6.11 இலட்சத்தில் 970 சதுர அடியில் கட்டப் பட்டுள்ளது. இந்தக் கட்டடம் நிலநடுக்கத்தால் பாதிக்காத வண்ணம் அஸ்திவாரம், சுற்றுச்சுவர் மற்றும் மேற்கூரை அமைக்கப்பட்டுள்ளது. எந்தவகையான பேரிடர்கள் ஏற்பட்டாலும் பாதிக்கப்படாதவகையில் இந்தக் கட்டடம் சிறந்த முறையில் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித்திட்டம், தமிழ்நாடு அரசு உதவியுடன் பொதுப்பணித்துறை மூலம் கட்டப்பட்டுள்ளது. நிலநடுக்கம், மழைவெள்ளம் போன்றவை ஏற்பட்டால் கூட இந்தக் கட்டடத்திலிருந்து அவசரகால பணிகள் மேற்கொள்ளுகின்ற வகையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக அறை, கூட்ட அரங்கம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. நிலநடுக்கம், மழைவெள்ளம் போன்ற இயற்கை இடர்ப்பாடுகள் ஏற்படும்போது உபயோகப்படுத்தப்படுகின்ற வகையிலான மருத்துவப் பொருட்கள், மரம் மற்றும் கட்டட அறுவை இயந்திரம், கம்பூட், உயிர் காப்பு கவச ஆடை, ஏணி, நைலான் கயிறுகள் போன்ற உபகரணங்கள் மற்றும் இயற்கை இடர்ப்பாடுகளின் போது ஒலி எழுப்புகின்ற சைரன் ஆகியவை இந்தக் கட்டடத்தில் வைக்கப்பட்டுள்ளன. இயற்கை இடர்ப்பாடுகளில் பாதிக்கப்படாதவகையில் வருங்காலங்களில் கட்டடங்கள் எவ்வாறு கட்டுவது என்பதற்கு இந்தக் கட்டடம் ஒரு மாதிரி கட்டடமாகும்'' என்று அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. ஜோதிநிர்மலா, மாவட்ட திட்ட அலுவலர் திரு. மயிலேறும் பெருமாள், பேரிடர் இன்னல் மேலாண்மை மாவட்ட திட்ட அலுவலர் திரு. தங்கமணி, பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் கோபால், உதவி செயற்பொறியாளர் நம்பிராஜன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

செய்தி – மக்கள்தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.

★ ★ ★

சந்தேகம் தோன்றிய பத்திரத்தை எடுத்து வெளி சத்தில் சின்ன சத்தத் துப் பார்ப ாட்களில் மனசில் எல யா தீவிரமாய் நினை ாக வேறு எதை டவையும் பெட்டியைத் திறந்து மூடி திண்ணையி உட்கார்கையில் அப்பா முகத்தில் வேர்வையும் அதிருப்தியும் தெரியும்.

# சீசனம்

**கந்தர்வன்**



அப்பா வெளியூருக்குப் போகையில் வண்டிக்குள் யார் பேச்சுக் கொடுத்தாலும், எவ்வளவு முக்கியமாக அது இருந்தாலும் தலையை வெளியே நீட்டி அந்தப் புளிய மரத்தை ஒரு தடவை பார்த்துக் கொள்வார். ஊர்க் கோடியில் குறவர் குடிசைகளுக்கு மத்தியில் பிரம்மாண்டமான மரம் அது. அடியில் பன்றிகள் அடைந்து உரம் கொடுக்க ஊர் பூராவிலும் உள்ள மரங்களில் செழித்துக் கொழித்து நிற்கும் அது. அப்பாவுக்குச் சொந்தமான மரம்.

ஒரு செவ்வக வாக்கில் ஐந்து மைல் விஸ்தீரணத்தில் ஆறு சின்னக் கிராமங்களிலும் இந்தத் தாய்க் கிராமத்திலும் அப்பாவுக்கு நிலங்களுண்டு. அத்தனை நஞ்சை புஞ்சை வீடு மரங்களிலும் அப்பாவுக்கு ரொம்பப் பிடித்தமானது இந்தப் புளியமரம்தான். வெகு தூரத்திலிருந்து பார்த்தால் ஒரு குன்று பச்சையாய் நிற்பது போலிருக்கும். அருகில் வந்து அண்ணாந்து பார்த்தால் ஆயிரங்கிளையோடு அடர்ந்து அந்த மரத்திற்குள் ஒரு தோப்பு அசைந்தாடுவது போலிருக்கும்.

எண்ணெய் பூசியது போல வழுவழுவென்றிருக்கும் சிமிண்டுத் திண்ணையில் பகல் பூராவும் அப்பா உட்கார்ந்திருப்பார். நாலு பண்ணையாள்களுக்கும், அஞ்சு கிராமத்து குத்தகைக்காரர்களுக்கும்

உட்கார்ந்த இடத்திலிருந்தே உத்தரவுகள் போகும். எப்போதாவது பர்மாக் குடையை விரித்து நடப்பார்.

ஒரு நாளைக்கு இத்தனை தடவை என்று எண்ணி விடலாம் இறங்கி நடப்பதை.

அப்பா நடந்திருக்க வேண்டிய நடையையெல்லாம் தாத்தா நடந்திருந்தார். சமஸ்தானத்தில் தாத்தா இந்தப் பிரதேசத்தின் பேஷ்கார்.

மஹாராஜா இந்தப் பக்கமாய் ஒருமுறை திக்விஜயம் செய்தபோது தாத்தா ஒவ்வொரு வேளை விருந்தையும் ஒரு உற்சவமாய் நடத்தியிருக்கிறார். மஹாராஜாவின் நாக்கு அதுவரை அறிந்திராத ருசியும் பண்டமும் விருந்துகளில், பரிவாரங்கள் தங்கள் வயிறுகளைத் தாங்கள் தூக்கிச் சுமக்க வேண்டிய நிலை.

மரியாதை காட்டி வெகுவாய்ப் பின்னால் வந்து கொண்டிருந்த தாத்தாவை அழைத்து விரலை அவ்வப்போது நீட்டிக் கொண்டே வந்தார் மஹாராஜா. பின்னால் அந்த நிலங்களெல்லாம் தாத்தாவுக்குச் சாசனமாய் வந்தன.

தாத்தா அரண்மனைக்குப் போய் சாசனங்களையும் பட்டயங்களையும் வாங்கி வந்த நாளிலிருந்து எட்டு நாட்களுக்குள் இருபத்தோரு கிராமங்களில் ஆட்களைத் திரட்டினார். தங்களுடையதென்று எண்ணி உழுது கொண்டிருந்த குடியானவர்களை நிலங்களிலிருந்தும் ஊர்களிலிருந்தும் மஹாராஜாவின் சாசனங்களைக் காட்டி விரட்டினார். அடிதடிகளும் நாலு கொலைகளும் நடந்ததாகப் பேச்சுண்டு.



தாத்தா வீட்டிலிருந்து எப்போது புறப்பட்டுப் போனார், எந்த ஊரில் யார் வீட்டிலிருக்கிறார், ராத்திரி எத்தனை மணிக்கு வருவார் என்பதெல்லாம் வீட்டில் யாருக்கும் தெரியாது. உள்ளூரில்தான் தங்கயிருக்கிறார் "ஒரு வீட்டில்'' என்பது போல் நக்கலாக ஒருவர் சொல்ல "அதெல்லாமில்லை. சிறைக்குளமோ, பண்ணந்தையோ, கீரந்தையோ எங்கேயிருக்காகனு யார் கண்டா'' என்று அழுத்தமாய் அடுத்த ஆள் பேசிவிடும்.

சில சமயம் விடியற்காலையில் சிவந்த கண்களோடு வந்து சேர்வாராம். வந்ததும் பரபரவென்று வீட்டு ஆள்கள் ஒரு அண்டா நிறையத் தண்ணீரைக் கொண்டு வந்து வாசலில் வைப்பார்கள். குளிரக் குளிரக் குளித்து வேட்டி துண்டை நனைத்துப் போட்டுவிட்டு வீட்டிற்குள் நுழைவாராம்.

தாத்தா கையைப் பிடித்துக் கொண்டு அப்பா நடக்கையிலேயே மஹாராஜா இந்தியப் பிரஜையாகிவிட்டார். சாசனங்களையும் பட்டயங்களையும் அப்பா கையில் ஒப்படைத்துவிட்டுத் தாத்தா கிழக்குக் காட்டில் எரிந்த போது முதல் தேர்தல் முடிந்து ஒட்டுகளை எண்ணிக் கொண்டிருந்த நேரம்.

கிராமங்களில் நீண்டு கிடந்த புஞ்சைகளை அப்பா அந்தந்த கிராமத்துப் பெருங்குடியானவர்களிடம் வாரத்துக்கு விட்டுவிட்டார். செவற்காட்டுப் பனைகளை பாட்டத்துக்கு விட்டார். தை மாசியில் வீட்டு மச்சிலும் குளுமைகளிலும் பட்டக சாலையிலும், நெல்லும் கம்பும் வரகும் கேப்பையும் ஒரு புறமாகவும், மிளகாய், கொத்தமல்லி, நிலக்கடலை, துவரம்பருப்பு, கருப்பட்டி வட்டுகள் என்று மறுபுறமும் குவிந்து கிடக்கும். ஆள்பத்தி அறைக்குள் மட்டும் அப்பா எதையும் வைக்க விடமாட்டார். அப்பாவைத் தவிர யாரும் அந்த அறைக்குள் நுழைய முடியாது.

"
ஒருநாள் சுப்பையா மாமா அப்பா பக்கத்தில் வந்து உட்கார்ந்து பேச்சுவாக்கில் "மண்டபத்து மல்லி, மண்டபத்துப் புளி ரெண்டுக்கும் சமமா ஒலகத்துலெ எங்கேயும் கிடையாது'' என்று சொல்லிவிட்டார். அப்பா இதைக் கேட்டதும் அம்மாவைக் கூப்பிட்டார். " அந்தக் கொறட்டுப் புளியிலே கொஞ்சங் கொண்டாந்து மாப்பிள்ளட்ட குடு'' என்று சொல்லிவிட்டு " இன்னைக்குக் குழம்பு ஓங்க வீட்டிலெ இந்த புளியிலெ, விடிய வந்து சொல்லுங்க மாப்பிள்ளை, மண்டபத்துப் புளி ஒசத்தியா, கொறட்டுப் புளி ஒசத்தியானு.''
"

நாலு ஆள் சேர்ந்தாலும் தூக்க முடியாத மாதிரி ஒரு பெரிய இரும்புப் பெட்டி அறையின் கிழக்கு மூலையில் இருக்கிறது. அப்பா உத்திரத்தையோ தூணையோ நிலைப்பாச்சாகக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தால் ஆழமான யோசனையிலிருக்கிறாரென்று அர்த்தம். அது முடிந்ததும் அறைக்குள் நுழைந்து அந்த இரும்புப் பெட்டியைத் திறப்பார். அதற்குள்ளிருந்து பழைய சாசனங்களையும் பட்டயங்களையும் பத்திரங்களையும் பூக்களை எடுப்பது போல் எடுப்பார். மேல் துண்டால் தூசி தட்டுவார்.

சந்தேகம் தோன்றிய பத்திரத்தை எடுத்து வெளிச்சத்தில் சின்ன சத்தத்தோடு படித்துப் பார்ப்பார். சில நாட்களில் மனசில் எதையோ தீவிரமாய் நினைத்துக் கொண்டு குடைந்து குடைந்து அந்தச் சாசனங்கள் நீங்கலாக வேறு எதையோ ஒன்றைத் தேடுவது போலிருக்கும். ஒவ்வொரு தடவையும் பெட்டியைத் திறந்து மூடிவிட்டுத் திண்ணையில் உட்கார்கையில் அப்பா முகத்தில் வேர்வையும் அதிருப்தியும் தெரியும்.

ஊர்க்கோடி புளியமரம் தளதளவென்று நிற்கிறது. அதிலிருந்துதான் வருசத்திற்குண்டான புளி வருகிறது. ஆனால் ஒப்படைத்து விட்டுப் போன சாசனங்கள் பத்திரங்கள் எதிலும், ஏன், ஒரு சின்னத்துண்டுக் காகிதத்தில் கூட இந்த மரத்தைப் பற்றி ஒருவார்த்தை இல்லை.

ஒருநாள் சுப்பையா மாமா அப்பா பக்கத்தில் வந்து உட்கார்ந்து பேச்சுவாக்கில் "மண்டபத்து மல்லி, மண்டபத்துப் புளி ரெண்டுக்கும் சமமா ஒலகத்துலெ எங்கேயும் கிடையாது'' என்று சொல்லிவிட்டார். அப்பா இதைக் கேட்டதும் அம்மாவைக் கூப்பிட்டார். " அந்தக் கொறட்டுப் புளியிலே கொஞ்சங் கொண்டாந்து மாப்பிள்ளட்ட குடு'' என்று சொல்லிவிட்டு "இன்னைக்குக் குழம்பு ஓங்க வீட்டிலெ இந்த புளியிலெ, விடிய வந்து சொல்லுங்க மாப்பிள்ளை, மண்டபத்துப் புளி ஒசத்தியா, கொறட்டுப் புளி ஒசத்தியானு.''

மறுநாள் சுப்பையா மாமா திண்ணையில் வந்து உட்கார்ந்ததும் சொன்னார். "இந்தக் கொறட்டுப் புளிக்குச் சரியா மண்டபத்துப் புளியும் நிக்காது; மதுரைப் புளியும் நிக்காது.''

'கொறட்டுப் புளி' என்று அப்பா சொல்வது 'குற வீட்டுப் புளி' என்பதன் சுருக்கம். 'குறவீடு' என்று வருகிற எதையும் வேறு மாதிரித்தான் சொல்வார். அப்படிப் பேசி முடித்ததும் எதையோ மறைத்துத் தப்பித்துவிட்ட திருப்தியில் பலர் முன்னிலையில் தன்னை மறந்து சந்தோஷப்பட்டுக் கொள்வார்.

ஆள்பத்தி அறையின் இருப்புப் பெட்டியைத் திறந்து சாசனங்களையும் பத்திரங்களையும் பார்த்து முடித்த சில சமயங்களில் அப்பா திண்ணையிலிருந்து இறங்கிக் குடையை விரித்தும் விரிக்காமலுமாய் ஓடப் போகிற மரத்தைக் கயிறு போட்டு கட்டி வைக்கப் போவது போல் ஓடுவார். கொழுந்து விடும் நேரம், பூப் பூக்கும் நேரம், பிறை பிறையாய்ப் பிஞ்சு விடும் நேரங்களில் இப்படிப் போய் மரத்தடியில் நிற்பார்.

"அய்யா மகன் வந்திருக்கார் விலகுலெ'' என்று சத்தம் போட்டு, வேடிக்கை பார்க்க வரும் குறவீட்டுப் பிள்ளைகளை சேரிக் கிழவர்கள் விரட்டுவார்கள். மரத்தடியில் அடைந்து கிடக்கும் பன்றிகளை விரட்டி மேட்டுப்பக்கம் கொண்டு போவார்கள். பன்றிக் கழிவுகளைத் தள்ளி ஒரு புறமாய் ஒதுக்குவார்கள்.

மற்ற குடிசைகளிலிருந்து விலகி ஒரு குடிசை, மரத்திற்கு வடக்கில் தனியாய் உண்டு. வெளியில் உண்டாகும் சேரி அசுத்தங்கள் அந்தக் குடிசையருகே வந்து விடாதவாறு சுற்றி ஒரு தீ வட்டம் நின்று காப்பது போல் பளிச்சென்றிருக்கும்.

அப்பாவின் குரலைக் கேட்டதும் குடிசைக்குள்ளிலிருந்து ஒரு கிழவி கண்ணில் பூ விழுந்து பார்வை தெரியாமல் கம்பூன்றி வெளியில் வருவாள். குறவர் கூட்டத்திலிருந்து விலகித் தனியாய் ஆகாயத்திலிருந்து வந்து பறந்தது போல் கிழவியின் மகள் தாத்தா ஜாடையில் தாத்தா நிறத்தில் வந்து நிற்பாள். அப்பாவுக்கும் அந்தப் பொம்பிளைக்கும் பதினைஞ்சு வயது வித்தியாசமிருக்கும்; சின்னவள்.

அந்தப் பொம்பிளையும் அவள் புருஷனும் பிள்ளைகளும் குறவர் கூட்டத்திலிருந்தது விலகித் தனியாய் நிற்பார்கள். கிழவியும் மகளும் அப்பா பேசும் ஒவ்வொரு வார்த்தையையும் வாஞ்சையோடு கேட்பார்கள். அப்பா புறப்பட்டுப் போகும் போது அந்தப் பொம்பிள அவர் பார்க்கும்படி முன்னே வந்து குப்பை கூளங்களைக் காலால் தள்ளி வழி செய்வாள். இவர்களின் இந்தச் செய்கைகளால் அப்பா தடுமாறி நடப்பார். வீடு வரும்போது மறுபடி முகம் மாறி வந்து சேர்வார். வெகு நேரம் யோசனையில் கிடப்பார். கணக்குப் பிள்ளையைக் கூப்பிட்டுக் கேட்டு விடலாமென்று அப்பாவுக்கு பலமுறை தோன்றியதுண்டு. இந்த மரம் நிற்கும் நிலம் யாருக்குச் சொந்தம் என்று அவரிடம் கேட்கலாம். தன் பெயருக்கே ரசீது போடச் சொல்லலாம் வரி கட்டியதாக, ஆனால் மரம் இருக்கும் இடம் நம் பெயரிலில்லை என்று கணக்குப்பிள்ளைக்கு நாமே சொல்லிக் கொடுத்தது போலாகிவிடும். சொத்து விஷயத்தில் அவசரப் படக்கூடாது. போகிற வரை போக வேண்டும். அப்பா கணக்குப் பிள்ளைக்குச் சொல்லிவிடும். ஞாபகம் வந்து ஒவ்வொரு முறையும் நிறுத்தி வைத்தது போக அந்த எண்ணத்தையே சில நாளில் மறந்துவிட்டார்.

வருசா வருசம் புளியம்பழ உலுக்கல் அப்பா முன்னால் விமரிசையாய் நடக்கிறது. மூடை மூடையாய் புளி வீட்டுப் பட்டாளத்துக்கு வருசத்துக்கு புளியம்பழ



உலுக்கலுக்கு முதல் நாளே அப்பா ஆள் சொல்லி விடுவார். மறுநாள் காலை அப்பா போகும் முன்னால் பன்றிக் கழிவுகளைக் கூட்டிப் பொட்டலாக்கி வைத்திருப்பார்கள்.

அப்பா பத்து ஆள்களோடும் ஒரு கட்டுச் சாக்குகளோடும் வெயில் வந்ததும் வருவார். வருசா வருசம் இது ஒரு சடங்கு போல் நடக்கும். உலுக்கலுக்கு முன் கிழவியின் மகள் கிழவியின் கையைப் பிடித்துக் கொண்டு வந்து மரத்தருகில் நிறுத்துவாள். கிழவி மரத்தைத் தொடுவாள்; தடவுவாள், கும்பிடுவாள். குருட்டுக் கண்ணிலிருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் வடியும், மகள் மெல்லக் கிழவியை அகற்றி அழைத்துக் கொண்டு குடிசைப் பக்கம் போவாள்.

அப்பா இவையெல்லாம் பார்த்தும் பார்க்காதது போல் நிற்பார். சீக்கிரமாய் இந்தச் சடங்கு நடந்து முடியவேண்டுமென்பது போல் பொறுமை இழப்பார். இது முடிந்ததும் பலசாலிகளாயுள்ள எட்டுப் பேர் திசைக்கு ஒருவராய் ஒரே நேரத்தில் கிளைகளில் ஏறி நின்று மேற்கொப்பைப் பிடித்துக் கொண்டு கூத்தாடுவார்கள்.

பழங்கள் உதிர்த்து சடசடவென்று சத்தங் கிளப்பும், குற வீடுகளின் சின்னப் பிள்ளை எதுவும் பழம் பொறுக்க நடுவில் நுழைந்தால் மண்டையிலடிக்கும்.ஒரு பழமே ரத்தம் கசிய வைத்துவிடும்.

மொத்தக் கிளைகளையும் உலுப்பிய பின் அப்பா மரத்தைச் சுற்றி வந்து மேல் நோக்கிப் பார்வையிடுவார். ஒரு கிளை விட்டுப் போயிருந்தாலும் அவர் பார்வைக்குப் பட்டுவிடும். எல்லாமும் உலுப்பி முடிந்தவுடன் பத்துப் பேரும் பழங்களை வாரிக் கட்டுவார்கள்.

ஒரு சின்னக் குவியலை அப்பா காலாலேயே குவிந்து ஒதுக்குவார். அந்தப் பொம்பிளை வந்து அள்ளிக் கொள்ளும். அள்ளும்போது அவள் கண்ணில் இருந்து கண்ணீர் வடியும். மூட்டைகளை வண்டியிலேற்றி வீட்டில் கொண்டு வந்து இறக்குவார்கள். ஒருவாரம் முற்றத்தில் காயும். அப்புறம் பதினைந்து பேர்கள் பட்டாசாலையில் உட்கார்ந்து உடைப்பார்கள். மறுபடியும் முற்றத்துக்குப் போகும். அப்புறம் சால்களில் அடையும்.

ஒரு வருசம் உலுக்கலின் போது கிழவி மரத்தைத் தொட்டு அழுது கொண்டிருந்த போது மகள் புருசன் "ஒங்க ஆத்தாளை இங்கிட்டுக் கூப்பிடு. அசிங்கமாயிருக்கு; சனம் பூராவும் வேடிக்கை பார்க்குது'' என்று கோபமாய்ச் சொன்னான். அந்தப் பொம்பிளை தயங்கியது. "கூட்டிக்கிட்டு வரப்போறியா இல்லையாடி'' என்று எல்லோருமிருக்கக் காலால் ஒரு உதை விட்டான். ஓடிப் போய் கிழவியை இழுத்துக் கொண்டு வந்தாள். அன்று அப்பா காலால் தள்ளிக் குவிந்திருந்த புளிக்கு முன்னால் வந்து அவன் " இதையும் அள்ளிக்கிட்டுப் போயிருங்க'' என்றான்.

அவன் கை காலெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தன. அப்பா சற்றுக் கலங்கிப் போனார். விட்டுக் கொடுக்காமல் "இதையும் அள்ளிக் கட்டுங்கடா'' என்று சொல்லி விட்டு நடந்தார். அன்று ஒரு பழம் விடாமல் வீட்டுக்கு வந்து சேர்ந்தன.

அடுத்த வருசம் வழக்கம் போல் மறுநாள் புளியம்பழம் உலுக்க வரப் போவதாகச் சொல்லியனுப்பியிருந்தார் அப்பா. மறுநாள் பத்துப் பேரோடு மரத்தடிக்குப் போகையில் தரையெங்கும் பன்றிக் கழிவுகள். எங்கும் அசிங்கமும் நாற்றமும்.

கயிற்றுக் கட்டிலில் கிழவி உட்கார்ந்திருந்தாள். யாரோ வம்பாய் உட்கார்த்தி வைத்திருப்பது போலிருந்தது. அந்தப் பொம்பிளை புருஷனோடும் பிள்ளைகளோடும் நின்றாள். அப்பா அந்தப் பெண்ணைக் கடுமையாகப் பார்த்தார். "என்ன இதெல்லாம்?'' என்று அதட்டினார். சொல்லி வைத்தது போல் யாரும் வேலை வெட்டிக்கு போகாமல் குறவீட்டு ஆள்கள் மொத்தமும் கூடியிருந்தது.

அந்தப் பொம்பிளை "இனிமேற்பட்டு இந்த மரத்தை நாந்தான் உலுக்குவேன் இதிலே எனக்கு பாத்தியதை உண்டு...'' என்று பேசத் துவங்கியது. அப்பாவுக்கு கால் நடுங்கியது; உதடு கோணியது. "போதும் போதும். பேச்சை நிறுத்து'' என்று அதற்கும் அப்பால் அந்தப் பொம்பிளை பேசப் போவதை பதறிப் போய் நிறுத்தினார். கயிற்றுக் கட்டிலின் மேல் அந்தக் கிழவி நிச்சலனமாய் உட்கார்ந்து இருந்தாள்.

கூட்டி வந்து ஆள்களைத் திருப்பியழைத்துக் கொண்டு தலையைச் சாய்த்து குனிந்து நடந்து வீடு வந்து சேர்ந்தார். அதற்கப்புறம் அப்பா ஆள்பத்தி அறைக்குள் நுழைந்து பெட்டியைத் திறந்து சாசனம் எதையும் எடுத்துப் பார்க்கவே இல்லை.

– "நவீன தமிழ்ச் சிறுகதைகள்"
என்ற நூலிலிருந்து
(சாகித்ய அக்காதெமி வெளியீடு)

* * *

தமிழ்நாடு அரசு

சுருக்கம்

**1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம் – திரைப்படங்கள் – தமிழிலேயே பெயர் சூட்டப்படும் புதிய திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்களித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.**

---

வணிகவரி மற்றும் பதிவுத் (சி1) துறை

அரசாணை (நிலை) எண். 72 நாள். 22.7.2006.

ஆணை :

**2006–2007ஆம்** ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில், தமிழிலேயே பெயர் சூட்டப்படும் புதிய திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்களிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

2. அதன்படி 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1939) பிரிவு 4 உடன் படிக்கப்பட்டு பிரிவு 8ன் உட்பிரிவு 2இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினை பயன்படுத்தி 22.7.2006ஆம் நாள் முதல் திரைப்படத் துறைக்கும் தமிழ்மொழி ஆர்வத்திற்கும் மேலும் ஊக்கம் அளித்திடும் வகையில் புதிய திரைப்படங்களுக்கு தமிழிலேயே பெயர்சூட்டப்படுமானால், அந்த திரைப்படங்களுக்கு கேளிக்கை வரியிலிருந்து முழுமையான விலக்களித்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம். தேவராஜ்
அரசு செயலாளர்.

# கடலூர் மாவட்டத்தில் 2.75 இலட்சம் பள்ளிக் குழந்தைகளுக்கு வாரம் 2 நாட்கள் சத்துணவுடன் முட்டை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்த நாளான ஜூலை 15ஆம் நாளை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்து அன்று முதல் ஆரம்பப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் அங்கன்வாடி பள்ளிகளில் சத்துணவு சாப்பிடும் குழந்தைகளுக்கு வாரம் இரண்டு முட்டைகள் வழங்கப்படும் என அறிவித்தார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவிப்பிற்கேற்ப, கடலூர் மாவட்டத்தில் இத்திட்டத்தின் தொடக்க விழா குறிஞ்சிப்பாடி ஒன்றியத்தைச் சேர்ந்த மருவாய் அங்கன்வாடி மையத்திலும், வடலூர் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியிலும், குறிஞ்சிப்பாடி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியிலும் நடைபெற்றது.

மாண்புமிகு பிற்படுத்தப் பட்டோர் நலத்துறை அமைச்சர் திரு.எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு, மாணவ, மாணவிகளுக்கு சத்துணவுடன் முட்டைகள் வழங்கி பேசியதாவது :

"மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தேர்தல் அறிக்கையில் தெரிவித்தபடி, பள்ளியில் படிக்கும் குழந்தைகளுக்கு சத்துணவுடன் வாரம் 2 முட்டைகள் வழங்கும் திட்டத்தை தொடங்கிவைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். கடலூர் மாவட்டத்தில் அனைத்து பள்ளிகளிலும் இத்திட்டம் இன்று தொடங்கப்படுகிறது.



வாரத்தில் இரண்டு முட்டைகள் என்றால் மாதத்தில் ஒரு குழந்தைக்கு 8 முட்டைகள் வழங்கப்படுகிறது. ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகள் இதனால் நல்ல பலனை அடைய முடிகிறது. மேலும், சத்துணவுடன் மாதந்தோறும் 8 முட்டைகள் வழங்கும்போது, மாணவர்கள் உடல் ரீதியாகவும், மனரீதியாகவும் நல்ல வளர்ச்சி அடைய முடிகிறது. பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் மதிய உணவுத் திட்டத்தை துவக்கினார். பின்னர் எம்.ஜி.ஆர். அவர்கள் இத்திட்டத்தில் சிறிது மாற்றம் செய்து, இன்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த சத்துணவு திட்டத்தை முழுமையாக்கி உள்ளார்.

கடலூர் மாவட்டத்தில் 2.75 இலட்சம் குழந்தைகளுக்கு முட்டை வழங்கப் படுகிறது. வாரந்தோறும் 5.5 இலட்சம் முட்டைகள் தேவைப்படுகிறது'' என்று அமைச்சர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார். மேலும், வடலூர் அரசினர் மகளிர் மேல்நிலைப்பள்ளி, குறிஞ்சிப்பாடி அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு கூடுதல் கட்டடம், கழிப்பறை வசதிகள் செய்து தரப்படும் என்றும், குறிஞ்சிப்பாடியில் அரசு சார்பில் கட்டப்பட்டு வரும் மகளிர் உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

இவ்விழாக்களுக்கு தலைமையேற்ற மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ககன்தீப் சிங்பேடி, இ.ஆ.ப, அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது :

"மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்துள்ள இந்தத் திட்டம் மிகவும் அருமையான திட்டமாகும். வாரம் 2 முட்டைகள் குழந்தைகளுக்கு தருவதால் அவர்கள் நல்ல வளர்ச்சி அடைவதற்கும், மனரீதியாக பக்குவம் அடைவதற்கும் முடிகிறது. ஏழை மக்கள் குழந்தைகளை தினமும் பள்ளிக்கு அனுப்பிவைக்க முடியும். தமிழ்நாட்டில்தான் இந்தத் திட்டம் முதன்முதலில் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினை பிற மாநிலங்களிலும் பின்பற்ற உள்ளனர்.

விழாவில், மகளிர் திட்ட அலுவலர் திருமதி. கோ.அன்பழகி, சமூகநல அலுவலர் திருமதி. கிரேஸ் அன்னபாய், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றிய ஆணையர் திரு.செல்வராஜ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) திருமதி. சகினாபி, மருவாய் ஊராட்சித்தலைவர் திரு.ஜெ. மாணிக்கவேல், வடலூர் சிறப்பு சிற்றூராட்சித் தலைவர் திரு.கே.அர்ச்சுணன், குறிஞ்சிப்பாடி சிறப்பு சிற்றூராட்சித் தலைவர் திரு.எஸ்.கே.என்.ராசாமணி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் திரு. பாலமுருகன், திரு.வெங்கடேசப் பெருமாள், ஒன்றியக்குழு உறுப்பினர்கள் திரு.சுந்தரமூர்த்தி, திரு.குணசேகரன், சிறப்பு சிற்றூராட்சி உறுப்பினர் ஆர்.செந்தில்குமார், திரு.ஆர். அசோக்குமார், திரு.வி.சண்முகம், ஒன்றியக்குழுத் துணைத் தலைவர் திரு.டி.சேகர், ஊராட்சி மன்ற துணைத்தலைவர் திரு.வி.தனகோடி உட்பட பள்ளித் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியைகள், மாணவ, மாணவிகள் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

ஏழ்மை நிலையில் உள்ள தங்களுடைய குழந்தைகளை பள்ளியில் படிக்க வைத்துக் கொண்டிருக்கும் பெற்றோர்கள் இந்தத் திட்டத்தை பெரிதும் வரவேற்றுள்ளனர். தங்களின் குழந்தைகளுக்கு 2 முட்டைகள் வழங்கப்படுவது குறித்து மாண்புமிகு தமிழக முதல்வருக்கு நன்றியினையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொண்டனர். தங்களுடைய குழந்தைகளை தவறாது பள்ளிக்கு அனுப்பி வைக்க உள்ளதாகவும் தெரிவித்தனர்.

– செய்தி–மக்கள்தொடர்பு அலுவலர்,
கடலூர்.

# எனது காலில் இருக்கிறது

குதிரைக்கு நான்கு கால்கள் நீளமாயும், உறுதியுடனும் இருந்தன. உருண்டு திரண்ட தொடை அதற்கு அழகாக இருந்தது. குதிரை கம்பீரமாக ஓடியது.

ஒரு சமயம் நரிக்குக் குதிரையின் தொடைக் கறியைச் சாப்பிட வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது.

தன்னைவிட உயரமாகவும் வல்லவனாகவும் இருக்கும் குதிரையை அடித்துக் கொல்வது எப்படி என்று அது யோசித்தது.

ஒரு நாள் ஓநாயைப் பார்த்தது. "நண்பரே நீயும் நானும் ஒரே இனம். ஆனால், குதிரைக்கு இருக்கிற வலிவு நமக்கு இல்லை. குதிரையைக் கொன்று அதன் கறியைத் தின்றால் நாமும் வலிவுள்ள மிருகமாக மாறலாம் அல்லவா ?'' என்று கேட்டது.

"குதிரை உயரமாக இருந்தால் என்ன ? அதை அடித்துக் கடித்துப் போட முடியாதா ?'' என்று கூறியது ஓநாய்.

நரியும் ஓநாயும் சேர்ந்து சூழ்ச்சி செய்தன. "நாம் இருவரும் சேர்ந்து குதிரையைப் பார்த்துப் பேசிக் கொண்டே செல்லலாம். அது ஏமாறும் சமயம் பார்த்து நான் அதன் ஒரு காலைக் கடித்துப்பிடித்துக் கொள்கிறேன். நீயும் அதைக் கடித்துப் பிராண்டு. தாக்கினால் நாம் இருவரும் சேர்ந்து குதிரையைக் கொல்வது சுலபம்'' இவ்வாறு நரியும் ஓநாயும் குதிரையைக் கொல்லக் கூட்டுச் சேர்ந்து கொண்டன.

ஒரு நாள் குதிரையைப் பார்த்துப் பேசிக்கொண்டே சென்றன. "வேகமாக ஓடுகிறாயே ! உனது சக்தி எங்கிருக்கிறது ?'' என்று ஓநாய் குதிரையைப் பார்த்துக் கேட்டது. " என் காலுக்கு அடியில் இருந்து சக்தி வருகிறது ?'' என்று குதிரை கூறியது.

ஓநாயும் குதிரை ஏமாறும் சமயத்தில் அதைக் கடித்து விடலாம் என்று குதிரைக்குப் பின்னால் பேசிக்கொண்டே ஓடிச் சென்றது. நரி எச்சரிக்கையுடன் ஓநாய்க்குப் பின்னால் வந்தது.

"எந்தக் காலுக்கு அடியிலிருந்து சக்தி வருகிறது'' என்று ஓநாய் மீண்டும் குதிரையைக் கேட்டது.

"கிட்டே வந்தால் காட்டுகிறேன்'' என்று குதிரை சொல்லிற்று. ஓநாய் குதிரையின் குளம்புக்கு மிக அருகில் வந்தது. குதிரை 'படார்' என்று ஓர் உதையைத் திடீரென்று முகத்தில் விட்டது. ஓநாயின் பற்கள் உடைந்து விழுந்தன. முகத்தில் இரத்தம் ஒழுகியது. அதைப் பார்த்துக் கதி கலங்கிய நரி ஓடிவிட்டது.



'வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.'

*ஏ.ஜி.எஸ். மணி எழுதிய "உலகம் போற்றும் கதைகள்'' என்ற நூலிலிருந்து...*

# ஊரக வளர்ச்சிக்கு உன்னத முயற்சி

## கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஊராட்சி ஒன்றியம், அங்குச்செட்டிப்பாளையம் ஊராட்சியில் கால்வாய் ஆழப்படுத்தும் பணி



பணி தொடங்கும் முன்...




பணி முடிவுற்ற பின்...

தமிழரசு
R.N.I. No.21446/70 - Regn. No.TN/ARD/48/06-0
TN/PMG(CCR) WPP - 518/06-08

# ஊரக வளர்ச்சிக்கு உன்னத முயற்சி

## கடலூர் மாவட்டம், அண்ணாகிராமம் ஊராட்சி ஒன்றியம், சித்தரசூர் ஊராட்சியில் நெசரூரான் கால்வாய் தூர்வாரும் பணி



பணி தொடங்கும் முன்...



பணி முடிவுற்ற பின்...